


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ உறங்காத உள்ளம்... ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ உறங்காத உள்ளம்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
உறங்காத உள்ளம்...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# உறங்காத உள்ளம்...

## 1

அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டது சாரதாவிற்கு.. படுக்கையை விட்டு எழுந்து கொள்ளாமலே... ஜன்னல் பக்கம் பார்த்தாள்.. விடிந்தும் விடியாத கருக்கலின் கருமை கலந்த வெளிச்சம் தெரிந்தது.. திரும்பவும் தூங்க முயன்றாள்.. தூக்கம் வரவில்லை.. புரண்டுபடுத்து எழுந்து கொண்டாள். ஜன்னலின் வழி தோட்டத்தைப் பார்த்தாள். மார்கழி மாதப்பனித்துளிகள்... செடிகளின் இலைமீது நீர்த் திவலையாய்ப் படிந்திருப்பதை அருகில் போய்ப் பார்க்க வேண்டும் போல... மனதிற்குள் ஆவல் எழுந்தது... சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு.. மாடிப் படிகளில் இறங்கினாள்...

"சின்னம்மா... காபி கொடுக்கவா...?”

வாசல் தெளித்துக் கோலம் போட்டுவிட்டு வந்து கொண்டிருந்த வீட்டு வேலை செய்யும் மருதாயி வினவினாள்...

"வேண்டாம்... கொஞ்ச நேரம் கழித்துக் குடித்துக் கொள்கிறேன்..."

தோட்டத்தை நோக்கிச் சென்று கொண்டே கூறினாள், சாரதா... இலைகளின் மேல்... முத்துக்கள் வரிசை கட்டி நின்று கொண்டிருப்பதைப்போலத் தெரிந்த பனித்துளிகளைத் தொட்டுப் பார்த்து அவள் சிலிர்த்துக் கொண்டிருக்கையில் காபியின் மணம் அவளது நாசியைத் துளைத்தது... திரும்பிப் பார்த்தாள்.

"என்னம்மா... இவ்வளவு சீக்கிரமாய் எழுந்து விட்டாய்..?." என்ற கேள்வியுடன் காபியை நீட்டினான் பூபதி...

"பனித் துளியைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது, அண்ணா..." வரிசைப் பற்கள் தெரியச் சிரித்தவாறு காபியை வாங்கிக் கொண்டாள் சாரதா...

"அதற்காகவா இவ்வளவு சீக்கிரமாய் எழுந்து கொண்டாய்...?" அங்கிருந்த சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்தவாறு வினவினான் பூபதி...

"ஊஹும்... எனக்குத் தூக்கம் வரவில்லையண்ணா... சும்மா படுத்துக் கொண்டிருப்பதற்க்குத் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கலாமேன்னு வந்துட்டேன். ஆமாம்.. எனக்காக உங்களை யார் காபி கொண்டு வரச் சொன்னது...?"

"ஏன்... என் தங்கைக்கு நான் காபி கொண்டு வராமல் வேறு யார் கொண்டு வருவாங்க?"

"வேலைக்கு இருக்கிறவங்க கொண்டுவர மாட்டாங்களா... உங்களுக்கேன் வீண் சிரமம்...?"

"இதில் சிரமம் என்ன இருக்கிறது...? மருதாயி கிட்ட காலைக் காபி கேட்டேன். தங்கச்சி எழுந்து தோட்டத்துப் பக்கம் போயிருக்கு, காபி குடிக்கலைன்னு சொல்லுச்சு. சரி...சேர்ந்து காபி குடிக்கலாமுன்னு வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்... ஏம்மா... இன்னும் பதினைந்தே நாள்களில் நீ கல்யாணமாகிப் போய் விடுவாய்... இந்த வீட்டில் இருக்கும் வரை... உன் பெரிய அண்ணனுடன் சேர்ந்து காபி குடிக்க மாட்டாயா...?"

பூபதி பாசத்துடன் சாரதாவின் தலையைத் தடவிக் கொடுக்கவும்... சாரதாவின் கண்கள் கலங்கி விட்டன.

"ஏன் அண்ணா... பதினைந்து நாள்களுக்கு அப்புறம் நான் வீட்டை விட்டுப் போய்விட்டால் இங்கே திரும்பியே வர மாட்டேனா...?"

அந்த உதய காலத்தில் சாரதாவின் வாய் உச்சரித்த வார்த்தைகளைக் கேட்டதும் பூபதி பதறிப் போனான்...

"இப்படி அச்சானியமாய்ப் பேசலாமா சாரதா... ஒரு வார்த்தை வெல்லும்.. ஒருவார்த்தை கொல்லும்பாங்க... காலையில் எப்போதும் நல்ல வார்த்தைகளைப் பேசிப் பழக வேண்டும்..."

"நீங்கள் மட்டும் அப்படிப் பேசலாமா...?"

"கல்யாணமாகிப் போய்விட்டால்... உன் புருசன் வீடுதானேம்மா உன் வீடு..."

"அதற்காக இந்த வீடு எனக்குச் சொந்தமில்லாததாக ஆகிவிடுமா...?"

மீண்டும் பழையபடி பேசி வைத்தாள் சாரதா... பூபதியின் மனம் துணுக்குற்றது...

"ஏன்... இவள் வாயில் இன்றைக்கென்று இப்படி வார்த்தைகளாக வந்து விழுகின்றது...?"

அவன் மனம் சஞ்சலப்பட்டது... அப்போது அவன் பின்னாலிருந்து குரல் கேட்டது...

"அண்ணனும் தங்கையும் பாசமலர் வளர்க்க ஆரம்பித்து விட்டிங்களா...?"

சாரதா சிரித்து விட்டாள்...

"ஆமாம் அண்ணி... மலர் விரிந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும்போது... நீங்களும் வந்துட்டிங்க... வாங்க... ஹாய் குட்டி... அத்தையிடம் வா..."

"அவன் இப்பத்தான் எழுந்தான் சாரு.. முதலில் பாலைக் குடிக்கட்டும்..."

பூபதியின் மனைவி காயத்ரி... நான்கு வயது மகன் சுரேந்திரனுக்குத் தம்ளரில் இருந்த பாலைப் புகட்டியபடி கணவனின் அருகே அமர்ந்தாள். தூக்கம் கலையாத கண்களுடன்... தன் கண்களைக் கொட்டக் கொட்ட விழித்தபடி சாரதாவைப் பார்த்தான் சிறுவன்...

"பார்க்கிறதைப் பாருங்க அண்ணி... ஏன்டா சுரேன். இன்றைக்கு உனக்கு ஸ்கூல் இல்லையா...,?"

"அதெல்லாம் இருக்கு. இப்போதே போய் ஸ்கூல் வாசலில் என் மகனை உட்கார்ந்து கொள்ளச் சொல்கிறாயா...?"

"நான் சும்மா தான் கேட்டேன் அண்ணி... அதற்குப் போய் ஏன் கோபப் படுகிறீங்க..."

"எனக்கு எதுக்குமா கோபம் வருகிறது...? நீ உன் அண்ணனின் செல்லத் தங்கச்சி.. காலையில் பெண்டாட்டி கையால் காபி குடிக்கத்தான் ஊரில் உலகத்தில் இருக்கிற புருசன்மார்கள் எல்லோரும் ஆசைப் படுவாங்க... ஆனால் என் புருசன் எனக்கு முதலில் எழுந்திருச்சு.. சமையல்காரம்மா கிட்ட கேட்டு காபியை வாங்கிக்கொண்டு வந்து அவர் கையால் கொடுத்து உன்னைக் குடிக்க வைக்கிறார். இதை நான் எங்கே போய்ச் சொல்வது...?"

காயத்ரி நொடித்துக் கொள்ளவும், சாரதா தர்ம சங்கடம் அடைந்தாள். சிறு வயதிலிருந்து பெரிய அண்ணன்மீது பாசமாக இருந்தவள் அண்ணனுக்குத் திருமணமானவுடன் பழைய பாசத்தைக் காட்ட முடியாமல் அண்ணி காயத்ரி உள்ளே வந்தபோது... ஆரம்பத்தில் சாரதா தவித்துத்தான் போனாள்....

ஆனால்.. பூபதி தங்கையின் மேல் மாறாத பாசம் கொண்டவனாக இருந்தது சாரதாவை அமைதிப் படுத்தியது. ஆனாலும் கணவன் மேல் மனைவிக்குத் தான் முதல் உரிமையென்று அவள் விலகி நிற்கத்தான் செய்தாள்... விலகவிடாமல் பூபதி பாசவேலியைப் போடும்போது... அதைத் தாண்டச் சாரதாவினால் முடியவில்லை .. விளைவு...? காயத்ரியின் கோபம் வார்த்தைகளாக மாறி அவ்வப்போது சாரதாவைக் காயப்படுத்த ஆரம்பித்தது. பூபதியின் பாசம் அதற்கு மருந்திட... சாரதாஅதைக் கண்டு கொள்ளாமல் இருக்க ஆரம்பித்தாள்.

"ஏன்டி.. நீ அசந்து தூங்கிக் கொண்டு இருந்தே... எழுப்பவேணாம்ன்னு நினைச்சு... என் தங்கச்சியோடு... ஒரு வாய்க் காபி குடிக்கலாமுன்னு வந்தால், அது உனக்கு பொறுக்கலையா?"

"ஆமாம்... உலகத்திலேயே இல்லாத தங்கச்சியைக் கண்டு விட்டிங்க... இவள் உங்களுக்கு மட்டும்தானா தங்கச்சி... உங்க தம்பி ரகுபதிக்கும் இவள்தானே தங்கச்சி...? அவர் இவளைப் பற்றிக் கண்டு கொள்கிறாரா...?"

"அவன் கிடக்கிறான் ஒட்டாத பயல்... அவனுக்கு நான் இணையா...? இதைப்போல நீ அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறாய் காயத்ரி... இநத்ப் பேச்சை இத்துடன் நிறுத்து... இனிமேல்... இது போலப் பேசாதே..."

"பார்க்கலாம்..."

காயத்ரி முறைப்புடன் பதில் அளித்துவிட்டு... மகனைத் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றாள்.

"ஏன் அண்ணா... அண்ணியிடம் காலையிலேயே கோபிக்கறீங்க..?."

"இது என்னம்மா அநியாயமாய் இருக்கு... அவள் என்னைக் கோபித்துக் கொண்டாளா... இல்லை... நான் அவளைக் கோபித்துப் கொண்டேனா...?"

"அவங்க கேட்கிறதும் சரிதானே... சின்ன அண்ணன் முசுடு போல இருக்கும்போது.. நீங்க மட்டும் ஏன் இப்படி பாசமழையைப் பொழியனும்...?"

சாரதா கேட்டதும் பூபதி தங்கையை கண் கொட்டாமல் பார்த்தான். கண்ணுக்கு முன்னால்... இருபத்தோருவயது இளம்பெண்ணாகத் திருமணத்தை எதிர்பார்த்து அமர்ந்திருக்கும் சாரதாவிற்கும் அவனுக்கும் உள்ள வயது வித்தியாசம் பன்னிரண்டு.

பன்னிரண்டு வயதுப் பையனிடம்... இது தான் உன் தங்கை என்று சிறு கைக்குழந்தையைக் காட்டினார்கள்... கூட விளையாடாமல்... கையில் தூக்கி வளர்க்க வேண்டிய தங்கையிடம் கடலளவு பாசம் அவன் மனதிற்குள் பொங்கியது.. தலை நிறைய முடியும். அழகான வட்ட முகத்தில்... மருட்சியைக் காண்பிக்கும் இரண்டு பெரிய கரு விழிகளுமாக... சாரதா குழந்தைப் பருவத்தில் தாய் பூங்கோதையையும்... தந்தை மாணிக்கவாசகத்தையும் தவிர்த்து... பூபதியிடமே தாவி வருவாள்...

பூபதிக்கு நேர் இளையவனான ரகுபதி... பூபதியை விட நான்கு வயது இளையவன்.. அதுவரை வீட்டின் கடைக் குட்டியென்ற செல்லத்துடன் வளர்ந்து வந்தவனுக்கு...

தனது அந்த அந்தஸ்தைப் பறித்துக் கொண்ட தங்கையின் மேல் மகா கோபம் வந்தது... அவனுக்கு சாரதாவைக் கண்டாலே பிடிக்காது... அருகே யாரும் இல்லாதபோது சாதராவைக் கண்டு விட்டால்... அவளது குண்டுக் கன்னத்தைப பிடித்துக் கிள்ளிவிடுவான்.. தலையில் ஓங்கிக் குட்டுவான்... அவள் வளர ஆரம்பிக்கும்போது... அடிக்கவே ஆரம்பித்தான்...

அதனால்.. சாரதா தேவையில்லாமல் ரகுபதியிடம் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டாள்... அம்மா.. அப்பா.. பெரிய அண்ணன்... என்று அவர்கள் மூவரின் பாசத்தில் பத்திரமாய் வளர்ந்து வந்தவளுக்கு சமீபத்தில் திருமணம் நிச்சயம் செய்திருந்தார்கள்... பூபதி அதை ஆட்சேபிக்க... ரகுபதியோ வரவேற்றான்...

"இப்போதே சாரதாவிற்குக் கல்யாணம் தேவையா அப்பா... இப்போதுதானே படிப்பை முடித்திருக்கிறாள். இன்னும் கொஞ்ச நாள்... நம் வீட்டுப் பெண்ணாக... நம் வீட்டுப் பொண்ணாக... நம் கூடவே இருக்கட்டுமே..." என்று பூபதி சொல்ல.. "உனக்கென்ன... கல்யாணம் கட்டி... பெண்டாடி வந்தாகிவிட்டது... நான்கு வயதில் மகனும் இருக்கிறான்... உன் வேலை முடிந்துவிட்டது இல்லையா...? இப்படித்தான் பேசுவாய்... இதுவே என்னைப் பார்... தங்கை வீட்டிலிருக்கும்போது...

உனக்குக் கல்யாணமான்னு என் கல்யாணத்தை யில்ல நிறுத்தி வைத்திருக்கிறாங்க என் வயதில் உனக்குக் கல்யாணமாகிவிட்டது. இது நினைவிருக்கு இல்ல..." என்று சண்டைக்கு வந்தான் ரகுபதி.

கொழுந்தனைத் தூண்டி விட்டு விட்டு... ஒன்றும் அறியாதவள் போல் காயத்ரி மௌனம் காத்தாள். இந்த அநாகரிகமான வாதத்தைக் கேட்ட பூபதி வேறு வழியின்றித் தங்கைக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித்தான். அதிரும் ரகுபதி தலை பொடுத்தான்.

"பக்கத்து ஊரு தாண்டவராயனின் மகன் கல்யாண சுந்தரத்திற்கு நம் சாரதாவைப் பெண் கேட்கிறாங்கப்பா..."

மணிவாசம் சின்ன மகன் சொல்வதைக் காதில் போட்டுக் கொண்டு யோசித்தார்... கணவன் சொல்லே வேதமென்று வாழும் பூங்கோதை... எல்லாம் அவருக்குத் தெரியும் என்ற நினைவோடு பேசாமல் இருந்தாள். காயத்ரிக்கு... கணவனுக்கும்... தனக்கும் இடையிலிருக்கும் நாத்தனார் வீட்டை விட்டு வெளியே போய்விட்டால் போதுமென்ற நினைவு... பூபதி மட்டும்... புருவம் சுருக்கினான்.

2

மணிவாசகம் ஆத்தூரிலேயே பெயர் பெற்ற வியாபாரி... பக்கத்திலிருக்கும் கிராமத்தில் தோப்பு... துரவு... வயல் என்று வாழ்பவர்... இரண்டு மகன்களுக்கு அடுத்து தாமதமாகப் பிறந்த மகளிடம் பாசம் அதிகம் வைத்திருந்தார்... மகளுக்காக மாப்பிள்ளை தேடும்போது...அனைத்தையும் யோசித்தே தான் அவர் செயல்பட்டார்.

ரகுபதி கூறிய தாண்டவராயன்... கிராமமும் இல்லாத நகரமும் இல்லாத...பெரிய ஊரில் இருக்கும் முதன்மையான பணக்காரர்... அந்த ஊரில் தியோட்டரும்... அரவை மில்லும் சொந்தமாகக் கட்டியிருக்கும் பரம்பரைப் பெருமையைக் கொண்டவர்.. அவருடைய மூத்த மகன் ஆலாலசுந்தரம்... அப்பாவிற்கு உதவியாகத் தொழில்களைப் பார்த்துப் கொண்டிருக்க... இளைய மகன்... கல்யாணசுந்தரம் என்ஜினியரிங் படிப்பை முடித்து விட்டு... சொந்தமாக கம்ப்யூட்டர் சென்டர் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தான்...

அந்தச் சுற்று வட்டாரத்தில் தாண்டவராயன் குடும்பத்தைத் தவிர... மணிவாசகம் பெண் கொடுக்கத் தகுதியான மாப்பிள்ளை வீட்டார் இல்லையென்று தோன்றியதால் மணிவாசகம் ஒப்புதலாகத் தலையை அசைத்தார்.

"பொறுங்கள் அப்பா" என்றான் பூபதி...

"ஏன்டா... சின்னவன் கொண்டு வந்திருக்கும் சம்பந்தத்திற்கும் என்ன குறைச்சல்...? தாண்டவராயன் நம்மைப்போலப் பரம்பரைப் பணக்காரர்... இரண்டே ஆண் பிள்ளைகள்தான்... மூத்தவனுக்கு கல்யாணமாகிவிட்டது.. இளையவனுக்கு பெண் கேட்கிறாங்க... நம்ம பொண்ணு டிகிரி படிச்சிருக்கு.. அவனோ... என்ஜினியரிங் படித்திருக்கிறான்..." அப்பன் சம்பாத்தியம் போதாதுன்னு சுயமா தொழில் பண்ணுகிறான்... ஆளும் நம்ப பொண்ணுக்கு இணையா... பார்க்க அழகா இருக்கிறான்... இதைவிட நல்ல மாப்பிள்ளை நாம் எங்கே தேடினாலும் கிடைக்காது பூபதி..."

"ஆனால் அப்பா...அந்தக் கல்யாண சுந்தரத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டது அவ்வளவு நல்ல முறையில் இல்லை..."

"பணக்காரனைப் பற்றி... பலரும் பலவிதமாகத் தான் போசுவாங்க... அதை யெல்லாம் கண்டு கொள்ளாமல்... இநதக் காதில் வாங்கி... அந்தக் காதில் விட்டுவிட வேண்டும்டா..."

"நானே அவனைப் பலமுறை... பல இடங்களில் பார்த்திருக்கிறேன்..."

பூபதி விடாமல் மறுத்துப்பேசியதும்... மணிவாசகம் யோசனையானார்... அதைக் கவனித்த ரகுபதி தமையனுடன் சண்டைக்கு நின்றான்...

"டேய்... இதில் ஈகோவுக்கு இடமில்லைடா... உன் வெட்டி ஈகோவினால்... நம் கூடப்பிறந்தவளின் வாழ்க்கையோடு விளையாடப் பார்க்காதே..."

"சரி.. நீ சொல்வதுபோல... இந்த இடத்தைவிட்டு விடலாம்... வேறு இடமிருந்தால் நீ சொல்லு..."

"இப்போதானே சாரதாவின் கல்யாணப் பேச்சை ஆரம்பித்திருக்கிறோம்...பொறுமையாய்
தேடிப்பார்ப்போம்.."

"நீ இப்படித்தான் சொல்வாய்னு எனக்குத் தெரியும்... இந்த முட்டைக் கண் ஈஸ்வரியைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க உனக்கு அவ்வளவு சீக்கிரத்தில் மனம் வராது..."

"ஏன்டா... அதுக்காக... குணம் கெட்டவனுக்கு பெண் கொடுக்க முடியுமா...?"

"அவன் குணம் கெட்டவனுன்னு நீ பக்கத்தில் இருந்து பார்த்தியா..."

"கேள்விப் பட்டேன்..."

"கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்யுன்னு நீதானே அடிக்கடி சொல்வாய்."

"ரகு... நீ வேண்டுமென்றே... பேசுகிறாய்... இது ஒரு பெண்ணின் வாழ்க்கை பிரச்சனைடா... அவள் யாரோ ஒரு மூன்றாம் மனுஷியில்லை... நம் கூடப் பிறந்த தங்கை..."

"இதையே எத்தனை தடவைதான் சொல்லுவாய்.. என்னவோ உன் ஒருவனுக்குத்தான் இவள் மேல் அக்கறையிருப்பதுபோல் பிலிம் காட்டக்கூடாது... நானும் இவளுக்கு அண்ணன்தான்."

"அதைத்தான் கொஞ்சம் நினைத்துப் பாருன்னு நான் அடித்துக் கொள்கிறேன் ரகு..."

"நினைத்துப் பார்த்துத்தானே இந்த மாப்பிள்ளையைக் கொண்டு வந்திருக்கிறேன்..."

"இது காரணம் இல்லை ரகு... இதற்கு வேறு ஒரு காரணம் இருப்பதாக நான் நினைக்கிறேன்..."

"நீ எல்லாம் நினைப்பாய்... உன் நினைவுக்கு நான் பொறுப்பில்லை..."

"ஆனால் நீ ஆசைப்படும் மேனகாவை உனக்கு கல்யாணம் பண்ணி வைப்பதற்கு... கல்யாண சுந்தரம் பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கிறான்... அதையும்

சொல்லு... அதை ஏன் சொல்லாமல் விட்டு வைத்திருக்கிறாய்...?"

அதுவரை பெரிய மகனும்... சின்ன மகனும் வாக்குவாதம் செய்து கொள்வதை கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த மணிவாசகம் கேள்வியாய்ப் பெரிய மகனை நோக்கினார்...

"என்னடா இது புது விவகாரம்... எதையோ சொல்கிற..."

"நிஜம்தான்ப்பா.. இவன் தாண்டவராயனின் அண்ணன் மகளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான்..."

"நிஜம்தானாடா ரகுபதி...."

மணிவாசகம் முகத்தில் கண்டிப்பு தொனித்தது... விசயம் வீடுவரைக்கும் வந்துவிடும் என்பதை எதிர்பார்க்காத ரகுபதி மென்று விழுங்னான்.

"அது வந்துப்பா... அந்தப் பெண் பார்க்க கண்ணுக்கு லட்சணமாய் இருக்கும்..."

"இருந்தால் நீ ஆசைப்பட்டு விடுவாயா? பெரியவங்கன்னு நாங்க எதுக்கு இருக்கிறோம்...? இந்தக் காதல் கருமாந்திரமெல்லாம் மணிவாசகம் வீட்டிக்குச் சரிவராது..."

"ஐயோ அப்பா... நான் அந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன்னு யார் சொன்னது...?"

"உன் அண்ணன்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே சொன்னானேடா..."

"ஆசைப் பட்டேன்னுதானே அண்ணன் சொல்லுச்சு... காதலிச்சேன்னு சொல்லலையே..."

"அப்படியா...? அப்போ... ஆசைவேறு... காதல் வேறா?"

மணிவாசகம் தாடையைத் தடவித் தீவிரமாய் யோசித்து முடித்துவிட்டுப் பெரிய மகனைப் பார்த்து...

"ஏன்டா பூபதி... உனக்கு இதைப்பத்தித் தெரியுமா...?"என்று கேட்டார்.

"ஏம்ப்பா... என்னைப் போய் இந்தக் கேள்வியைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்...? முன்னே... பின்னே காதலித்திருந்தால்தானே... காதலைப் பற்றித் தெரியும்...? நான் பெண்ணைக்கூடப் பார்க்காமல்... நீங்கள் பார்த்தால் போதுமுன்னு தாலியைக் கட்டிக் குடித்தனம் பண்ணுகிற ஆளாச்சே..."பூபதி ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் பதில் சொன்னான்...

"அது ஒரு குறையா உங்களுக்கு... நம்ம பெட்ரூமுக்குள்ள வாங்க... உங்களை பேசிக்கிறேன்..." பல்லைக் கடித்தாள் காயத்ரி...

"சரிடா சின்னவனே... நீ ஆசைப்பட்டால் என்கிட்ட வந்து சொல்லவேண்டியதுதானே... அந்த கல்யாணசுந்தரத்துக்கிட்ட ஏன் சொன்னே...?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ரகுபதி... பூபதியை பார்க்க...அவன் கைகொடுக்கும் எண்ணமில்லை என்பதைத் தெளிவாகக் கூறினான்....

"என்னை ஏன்டா பார்க்கிற...?அப்பா கேட்கிற கேள்விக்குப் பதிலைச் சொல்லு..."

அண்ணனின் உதவி கிடைக்காது என்பது தெரிந்தது... தாயை பார்த்தான் ரகுபதி... அவள் அரியாத்தனமாய் விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும்...

'ம்ஹும்... இது வேலைக்கு ஆகாது..." என்று நினைவுடன்... அண்ணி காயத்ரியைப் பார்த்தான்...அவள் பதிலுக்கு 'யாமிருக்க பயம்யேன்' ரகசிய சமிக்ஞை செய்தாள். ரகுபதிக்குப் போன உயிர் திரும்பவும் வந்தது.

"மாமா..." என்று மரியாதையுடன் ஆரம்பித்தாள் காயத்ரி...

"ஏம்மா..."

"நம்ம ரகு தம்பியும்... மாப்பிள்ளைத் தம்பியும் சிநேகிதப் பசங்க..."

"மாப்பிள்ளைத் தம்பியா...? யாரும்மா அது...?"

"வேறுயாரு கல்யாணசுந்தரம்தான்..."

"அவர்தான் நம் வீட்டு மாப்பிள்ளைன்னு நீ முடிவே பண்ணிவிட்டாயா...?"

"பெரியவங்க நீங்கதானே அதை முடிவு பண்ணணும்..."பின்னே... ஏன் அப்படிச் சொன்னே...?"

"ஒரு வேலை நம் வீட்டு மாப்பிள்ளையாய் அந்தத் தம்பியே வந்து விட்டால் என்ன செய்வது...?"

"முன் யோசனையாய்ப் பேசுகிற...? பேசு... பேசு.."

"சிநேகிதங்க இரண்டு பேரும் பேசிக்கிட்டு இருக்கிறப்போ... அந்தத் தம்பி... நம்ம தம்பிகிட்ட...

நம்ம சாரதாவின் அருமை ... பெருமைகளைப் பற்றிப் பேசினாராம்..."

காயத்ரி கெட்டிக்கரி... எதை எப்படிச் செல்ல வேண்டும் என்ற சூட்சுமம் அறிந்தவள்...

மணிவாசகத்திற்க்கு காதல் என்ற வார்த்தையே பிடிக்காது... காதல் செய்பவர்களை... கொலைக் குற்றவாளி போல பார்ப்பார் என்பதை அறிந்தவளாய்... சாதுர்யமாய் வார்த்தைகளைப் பிரயோகித்தாள்...

"ஓஹோ..."

"அது மட்டுமில்லையாம் மாமா... மணிவாசகத்தின் மாப்பிள்ளை என்கிற பெயர் எனக்குக் கிடைக்குமான்னு... நம்ம ரகுத்தம்பியிடம் தன்மையாகக் கேட்டராம்..."

மணிவாசகத்தின் தலையில் ஐஸ்கட்டி ஏற்றப்பட்டதைப் பார்த்தான்... அவள் அதைக் கண்டு கொள்ளாமல்... தன் வேலையைச் சிரத்தையாய்த் தொடர்ந்தாள்...

"அந்தத் தம்பி பணிவாய்க் கேட்கவும்... நம்மதம்பியும் யதார்த்தமாய்... அதுகென்னப்பா... என் தங்கையை உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கச் சொல்லி என் அப்பாகிட்ட நான் பேசுகிறேன்... உன் எனக்குக் கல்யாணம்"

பண்ணிக்கொடுக்கச் சொல்லி நீ உன் பெரியப்பா வீட்டில் பேசுன்னு சொன்னாராம்... இது தப்பா மாமா..?"

"தப்பில்லைதான் காயத்ரி... இருந்தாலும்..."

"மாமா... நம்ம ரகுதம்பிக்கு எப்படியும் நாம கல்யாணம் பண்ணி வைக்கத்தானே போகிறோம்...? அந்த மேனகா பெண் பிறந்த வீடு ஒன்னும் ஏப்பை... சாப்பையில்ல... நம்மை போல வசதியானவங்கன்னு உங்களுக்கே தெரியும்... அதோட நம்ம பெண்ணை கொடுக்கப் போகிற வீட்டிலேயே... நாமும் பெண்ணை எடுத்தால்... நம்ம பெண்ணுக்கு வாழப் போகிற வீட்டில் பிடிமானம் கூடத்தானே செய்யும்... அதோட செல்வாக்கும் உயருமில்ல..."

காயத்ரி... சொல்லால் அடித்தாள்...

3

"நம்ம பொண்ணு கண்ணில் தூசு பட்டாலும்.. இங்கே வாழ்கிற அவங்க பெண்ணை நினைச்சு அவங்க பதறிப் போவாங்கல்ல... நம்ம பொண்ணைத் தங்கத் தாம்பாளத்தில் தாங்கினால்தான்... இங்கே அவங்க பொண்ணு நிம்மதியாய் வாழ முடியும்னு யோசிச்சு ஒழுங்காய்ப் பார்த்துக்குவாங்க இல்ல..."

பெண்ணைக் கொடுக்கக் கூடாது என்று பூபதி வாதிட்டுக் கொண்டிருக்கும் போது... காயத்ரி... அங்கிருந்து பெண்ணையும் எடுக்கும் முடிவைக் கெட்டிக்காரத்தனத்துடன் மணிவாசகத்தின் மூளையில் திணித்துவிட்டாள்...

"ஏடா பூபதி... உன் பொண்டாட்டி சொல்லுவதும் சரியாகத்தானே இருக்கு..."

"என்னைத்தைச் சரியாய் இருக்கு...? அந்த வீட்டுப் பெண் இந்த வீட்டில் நல்லா வாழணும்னு... அவங்க நம்ம

சாரதாவைத் தாங்குவாங்கன்னு எப்படி நீங்க நினைக்கறீங்க..."

"என்னடா தம்பி... நீ வேற புதுக் கதை சொல்கிற...?"

"எல்லாம் பழைய கதைதாக்ப்பா... சும்மாவா சொல்லி வைத்தாங்க... பெரியவங்க ... பெண் கொடுத்து... பெண் எடுப்பது தப்புன்னு... நம்ம சாரதா அங்கே நல்லா வாழணும்னா... நாமதான் அந்த வீட்டிப் பெண்ணைத் தங்கத் தட்டில் தாங்கணும்... புரிஞ்சு நடந்துக்கங்க..."

"ஏம்மா... உன் புருசன் இப்படிச் சொல்கிறானே..?"

"அவருக்கென்ன மாமா... அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத்தான் தோணும்... அவருக்கு தங்கை மேல பெரிசா பாசம்... அவள் கல்யாணமாகிப் போனால் ஊரில் உலகத்தில் நடப்பது போல... மாமியார் கொடுமை நாத்தனார் கொடுமைன்னு நடந்துவிடுமோன்னு பயப்படுகிறார்.. ஏன் மாமா.. தெரியாமல் தான் கேட்கிறேன்... நம்ம சாரதாவைக் கன்னித் தெய்வமாய் இந்த வீட்டிலேயே வைத்துப் பூஜை பண்ணணும்னு இவர் நினைக்கிறாரா...?"

"அதுதானே... ஏன்டா... உன் தங்கைக்குக் கல்யாணம்ன்னு ஒன்று நடக்க வேண்டாமா...?"

"தாராளமாய் நடக்கட்டும்... நல்ல மாப்பிள்ளையாய்ப் பார்த்து நடக்கட்டும்..."

"ஏன் மாமா... இந்த மாப்பிள்ளைக்கென்னகுறை...? மணிவாசகத்தின் மகளைக் கொடுமைப்படுத்தவும் ஒருத்தனுக்குத் தைரியம் வந்துவிடுமா? உங்களை எதிர்க்க ஒருவன் இனிப் பிறந்துதான் வர வேண்டும்..."

இப்போது ஐஸ் பாறையே மணிவாசகத்தின் தலையில் ஏற்றப்பட... அவர் உருகி வழிந்தார் விட்டார்...

"அதுதானே... கீழூருக்கு மேலூரில் பெண் கொடுக்கப் போகிறோம்... போதாக்குறைக்கு அங்கேயிருந்து பெண்ணையும் எடுக்கப் போகிறோம்... என் மகள்

கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வந்தாலும் நான் அவன்களை உண்டு இல்லைன்னு பண்ணிவிட மாட்டேனா?"

மணிவாசகம்... பெண் கொடுத்துப் பெண் எடுக்கத் தன்னையும் அறியாமல் சம்மதம் கொடுத்துவிட்டார்... தகப்பன் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசியறியாத பூபதி... கனத்த மனதோடு தங்கையிடம் பேசினான்.

"என்ன சாரதா உன் கல்யாணப் பேச்சைத் தான் வீட்டில் இவ்வளவு நேரமும் பேசினாங்க... நீ எதுவும் சொல்லவில்லையே..."

"ஏன் அண்ணா... எனக்கு எது நல்லது... எது கெட்டதுன்னு அப்பாவுக்கும், உங்களுக்கும் தெரியும்... அப்படியிருக்கிறப்போ... நான் ஊடே சொல்ல என்ன இருக்கிறது...?"

"மாப்பிள்ளையைப் பற்றி உனக்கு எதுவும் மனதில் எதிர்பார்ப்பு இல்லையாம்மா..."

"இல்லைண்ணா... நல்லவராக இருந்தால் போதும்... நேர்மையானவராக இருந்தால் போதும்... வேறென்ன வேண்டும்..."

"அவனிடம் இது இரண்டுமே இல்லையேம்மா..."

திருமணப் பேச்சைத் தடுக்க முடியாத நிலையில்... மனதில் நினைத்ததை தங்கையிடம் சொல்ல முடியாமல்... அப்படியே விழுங்கினான் பூபதி...

சாரதாவைப் பெண் கேட்கும் கல்யாணசுந்தரத்தின் திருவிளையாடல்கள் சிலவற்றைப் பூபதி நேரேயே பார்த்திருக்கிறான்... பார்த்தவை வெளியில் சொல்லும் படியாக இல்லை... அதை மறைமுகமாய்த் தகப்பனாருக்கு உணர்த்த அவன் முயன்று கொண்டிருந்தபோது... காயத்ரி தலையிட்டு ஜெயித்து விட்டாள்...

"ஏன்டி இப்படி பண்ணின... அவன் அயோக்கியனடி..."

தனியளையில் மனைவியைக் கடித்து கொண்டான் பூபதி.. அவளோ அலட்சியமாய்க் கணவனைப் பார்த்தாள்..

"கண்ணுக்கு முன்னால் இருப்பதால் இந்த மாப்பிள்ளை செய்கிற தப்புக்கள் உங்க கண்ணுக்குத் தெரிகிறது... இதையே அன்னியத்தில் பார்த்தால்... வருகிறவான் நல்லவனா... கெட்டவனான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்...? ஆண்பிள்ளைச் சிங்கங்களாக நீங்கள் இரண்டு அண்ணன்மார் இருக்கும்போது... செய்த தப்பைத் தொடர்ந்து செய்ய அவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? ஆள் தாட்டியம் இருந்தால் போதும்... பயப்படாமல் படுத்துத் தூங்குங்க. நாளைக்கு பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வருகிறாங்க... நான் சீக்கிரம் எழுந்துக்கணும்... வேலை தலைக்கு மேல இருக்கு.."

பெண் பார்க்க வந்த கல்யாண சுந்தரத்தின் தோற்றமும்... பவ்யமும்... மணிவாசகத்திற்குப் பிடித்துப் போனது... சாரதாவின் அருகே நின்று கொண்டிருந்த பூபதி... தங்கையின் காதுகளில், "பார்த்துக்கம்மா..." என்று மெல்லிய குரலில் கூறினான்.

சாரதா மெதுவாக விழியுயர்த்திப் பார்த்தாள். கல்யாண சுந்தரத்தின் பார்வையைக் கண்டதும்... அவசரமாய் பார்வையை விலக்கிக் கொண்டாள். அவள் உடல் தூக்கிப்போட்டது.

"என்ன மாதிரியான துச்சாதனப் பார்வை இது..."

அவள் மனதில் ஒரு மிரட்சி தோன்றியபோது... அவள் கண் எதிரிலேயே தாம்பூலத் தட்டுக்களை மாற்றி நிச்சயம் செய்துவிட்டார்கள்... சாரதா... ஊமையாகிப் போனாள்...

ஒரே முகூர்த்தத்திலேயே... சாராதா... சுநத்ரத்தின் திருமணத்தையும்... ரகுபதி... மேனகாவின் திருமணத்தையும் நடத்திட இரு வீட்டாரும் முடிவு செய்து திருமணத்திற்கு நாள் குறித்துவிட்டார்கள்.. அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு வந்து... வினியோகமும் ஆரம்பித்துவிட்டது.... எண்ணிப் பதினைந்து நாள்கள்

தான்... திருமணத்திற்கு ஊடே இருந்தன... அந்த நிலையில்... தங்கையின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை பூபதியை அளித்துக் கொண்டிருந்தது.

"ஏன் அண்ணா... என்னவோ போல் ஆகி விட்டிங்க... அண்ணி கோபமாய்ப் பேசிட்டாங்கன்னு வருத்தமா...?" சாரதா இதமாய் கேட்டாள்...

"ச்சு... அதெல்லாம் இல்லைம்மா... அவள் என்ன இன்றைக்குப் புதிதாகவா கோபித்துக் கொள்கிறாள்... அவள் குணமே அதுதானே... பூபதி யோசனையுடன் கூறினான்.

"வேறு என்ன அண்ணா...?"

"சாரதா உனக்கு மாப்பிள்ளைப் பிடித்திருக்கிறதா..."

பெரியண்ணன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் செல்லுவது என்று... சாரதா வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தபோது...

"ஏன் அவளுக்கு பிடிக்கவில்லைன்னா... கல்யாணத்தை நிறுத்திவிட்டு... வேறு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து விடுவாயா..." என்ற ரகுபதியின் குரல் கேட்டது...

சாரதா முகம் இருகிப் போனாள்... பூபதியின் முகத்தில் சினம் தோன்றியது... ரகுபதி... அவர்களின் எதிரே வந்து நின்று...உறுத்துப் பார்த்தான்...

"இப்படிப் பேசாதேன்னு எத்தனை தடவை சொன்னாலும் நீ கேட்கவே மாட்டயா...?"

"எனக்கும்... அண்ணிக்கும்... எப்படிப் பேசுவதுன்னு டியுசன் எடுக்கிற டியுசன் மாஸ்டரா நீ..."

"ஓ உன் அண்ணியைப் பார்த்துவிட்டு வருகிறாயா...? சரிதான். நீ சும்மாவே துள்ளுவாய்... சாவி கொடுத்துவிட்டால் கேட்கவே வேண்டாம்..."

"தேவையில்லாமல் அண்ணியைப் பத்திப் பேசாதே..."

"அவள் என் பெண்டாட்டிடா... நான் அப்படித்தான் பேசுவேன்.. ஆமாம்.. திடீர்ன்னு என்ன... "அண்ணி என் தெய்வம்கிற" ரேன்ஜுக்கு சீன் காட்டுகிற... என்ன விசயம்...?"

"இந்த வீட்டில் அவங்க ஒருத்தவங்கதான் மனித மனதையும் அதன் உணர்வுகளையும் புரிந்து கொள்கிறவங்க..."

"இதைப் பாருடா... இது எப்போதிருந்து...?"

"அண்ணி... என் மனதைப் புரிந்துக்கிட்டு... எனக்கு ஆதரவாகப் பேசி... என் கல்யாணத்தை முடிவு பண்ணியதிலிருந்து..."

"ஓ கதை இப்படிப் போகுதா... போகட்டும் போகட்டும்..."

"அண்ணா... ஏன் என் கல்யாணத்தைக் கலைக்கப் பார்க்கிறாய்?"

"காலையில் எழுந்தவுடன் என் மேல் பழி போட்டுத் தீருவதுன்னு கங்கனம் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாயா...? உன் கல்யாணத்தை நான் ஏன்டா கலைக்கப் போகிறேன்...?"

"அப்புறம் எதுக்கு... இவகிட்ட தேவையில்லாமல் மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா... அப்படி... இப்படின்னுநோண்டுகிற? அவள் பிடிக்கவில்லைன்னு சொல்லிவிட்டால் என்ன செய்வ...?"

"இவனும் என்கூடப் பிறந்தவனா...?" சாரதா வெறுப்புடன் நினைத்துக் கொண்டாள்... இவன் கூடப் பிறந்து விட்டோமே என்று பூபதி நொந்து போனான்.

"ரகு.. நீ இவ்வளவு சுயநலப் பிறவியாய் இருக்கக் கூடாது..."

"அவரவர் வாழ்க்கை அவரவருக்கு முக்கியம்..."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்... உன் வாழ்க்கைக்காகச் சாரதாவின் வாழ்வைப் பணையம் வைக்காதே..."

"அவனுக்கென்ன குறைச்சல்... கல்யாண சுந்தரத்திடம் அழகு இல்லையா...? படிப்பு இல்லையா...? சொத்து இல்லையா...? வசதி இல்லையா...?"

"குணம் இருக்கிறதாடா... குணம் கெட்டவனே..."

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை பேசுகிறாய்...? அண்ணனாச்சேன்னு பார்க்கிறேன்... இல்லைன்னா நடக்கிறதே வேற..."

"அதை போல... தங்கையாச்சேக்னு இவளையும் கொஞ்சம் பாருன்னுதானே நான் கிடந்து அடிச்சுக்கறேன்... அது ஏன்டா உன் காதில் விழுகவே மாட்டேன் என்கிறது...?"

"எல்லாம் இவள் பவிசுக்கு இந்த மாப்பிள்ளையே போதும்"

சாரதாவின் கண் கலங்க... பூபதி வெகுண்டான்...

"ஏய் போடா... உன் முகத்தை என் கண் முன்னால் காட்டாதே... எங்கேயாவது ஒழிந்துபோ... நீயும்... உன் பேச்சும்... இனி ஒரு தடவை சாரதாவை மனம் புண்படப் பேசினால்... நான் சும்மா இருக்க மாட்டேன்..."

"என்ன செய்து விடுவாய்...?"

"எதுவும் செய்வேன்"

மேற்கொண்டு பூபதியிடம் வாய் கொடுத்தால்... அவன் உண்மையிலேயே திருமணத்தை நிறுத்தி விடுவானோ என்ற பயத்துடன் ரகுபதி தோட்டத்தை விட்டுச் சென்றுவிட்டான்...

"அண்ணா..." கண்களில் நீர் வழிய விம்மிய சாரதாவின் தோளைச் சுற்றிப் பூபதியின் கரம்விழ... அவள் தமையனின் தோள் சாய்ந்து தேம்பி அழுதாள்.

## 4

மேட்டாரிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டுருந்தது... பெரிய... அகன்ற... சிமிண்ட் தொட்டியில்ருந்து

வெளியேறிய நீர் வாய்க்காலில் சுழித்து ஓட... அதை மண்வெட்டியின் மூலம் பயிர்களின் பாத்திபக்கம் திருப்பிவிட்டு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான் பரதன்...

"என்ன பரதா... தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறாயா?" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் பரதன்..."

"தூரத்தில் தோப்போரம் கார் நின்று கொண்டிருந்தது... வரப்பின் மீது பூபதி நின்று கொண்டிருந்தான்."

அவசரமாய் மண்வெட்டியைப் போட்டுவிட்டு... மடித்துக் கட்டியிருந்த கைலியை அவிழ்த்துவிட்டு... தலையைச் சுற்றி முண்டாசு போலக் கட்டியிருந்ததுண்டை அவிழ்த்துத் தோள் மேல் போட்டுக் கொண்டான் பரதன்.

"வணக்கம் ஐயா..."

"வணக்கம்... வணக்கம் உன்னைப் பார்த்தால்... ஐ.ஏ.எஸ். பரிட்சை எழுதியிருக்கேன்னு யாரும் சொல்ல முடியாது... அவ்வளவு எளிமையாய் இருக்கே..."

"இந்தப் படிப்பு நீங்கள் கொடுத்த வரம்... மற்றப்படி நான் உங்களிடம் வேலை பார்க்கும் சாதாரணத் தொழிலாளிதானே..."

"கர்வமில்லாமல் பேசுகிறாய்... இது எல்லோருக்கும் வந்துவிடாது..."

"அண்டிப் பிழைப்பவர்களைக் கைதூக்கி விடும் உங்கள் குணத்தை விடவா என் குணம் பெரிது...? உங்களுடைய உதவும் குணம் எல்லோருக்கும் வந்துவிடாது..."

பரதனின் மரியாதையும்... நன்றியும் கலந்த பேச்சைக் கேட்டுப் பூபதி நிறைவுடன் சிரித்தான்...

"யாரு நீ...? சங்கரனின் மகனாச்சே... காமாட்சியம்மாவின் வயிற்றில் பிறந்து... அந்த அம்மா வளர்த்த வளர்ப்பாச்சே... சோடை போவாயா? உண்மையாக உழைப்பதிலேயும்... விசுவாசத்திலேயும் அவங்களை மிஞ்ச யாருமில்லை... நீயும் அவங்களைப் போலவே இருக்கிறாய் பரதா..."

தாய்... தந்தையைப் பற்றிய பேச்சைக் கேட்டதும்...பரதனின் முகம் வாடிக் கண் கலங்கிவிட்டது. அதைக் கண்ட பூபதி பேச்சை அவசரமாக மாற்றிப் பேசினான்.

"பயிருக்குக் களை எடுக்க வேண்டும் போல இருக்கே..."

"ஆமாங்கய்யா... நாளைக்கு வரச்சொல்லி... ஆள்களுக்குச் சொல்லிவிட்டு விட்டேன்..."

சொல்லாமலேயே வேலையைக் கவனிக்கும் அவனின் பொறுப்பான செய்கை கண்டு பூபதி திருப்தியுடன் புன்னகைத்தான்.

"உன்னை நம்பி மண்ணை ஒப்படைத்தால்... அதைப் பொன்விளையும் பூமியான மாற்றிக் காட்டு வாய்ன்னு எனக்கு நன்றாகத் தெரியும்... அதனால் தான் நான் இந்தப் பக்கமே வருவதில்லை பரதா..."

"இது உங்கள் சொத்து.. நான் என் வேலையைப் பார்க்கிறேன் இதைப் போய்ப் பெரிதாகப் பேச வேண்டுமா..?"

"இது... இது... இந்த தன்னடக்கம்தான் உன்னை உயர்த்துகிறது பரதா... சாப்பிட்டு விட்டாயா...?"

"இன்னும் சாப்பிடவில்லைங்கய்யா..."

"நான் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்... வா... தோப்பில் உட்கர்ந்து... சேர்ந்து சாப்பிடலாம்..."

"வேணாங்க ஐயா... என் வீட்டில் நான் வடித்த சாப்பாடு வீணாகப் போய் விடும்..."

"அதை ராத்திரிக்குச் சாப்பிடு..."

"ராத்திரிக்க ஊருக்குள் போனால்... மெள்ளச் சாப்பிட்டு விட்டு வருவேன்..."

"ஏன் பரதா... என்னுடன் சாப்பிட வர மாட்டயா?"

பூபதி ஆழந்த குரலில் வினவ... பரதன்... பதில் சொல்லாமல் புன்னகைத்தான்... அதற்கு மேல் அவனை வற்புறுத்த

மணமில்லாமல் பூபதி தோப்பை நோக்கி நடந்தான்... அவனது மனதில் பரதனின் தகப்பன் சங்கரனின் உருவம் நிழலாடியது.

"வரமிருந்து... வாங்கி வந்த பிள்ளைய்யா.. இந்த மண்ணைக் கொத்துகிற பிழைப்பு என்னோடு போகட்டும்... என் மகன் படிச்சு... பெரிய கலெக்டர் ஆகணும்... அதுதான்ய்யா... இந்தக் கூலிக்காரனின் கனவு..."

கனவு கண்டவன் காற்றோடு போய்விட்டான்... அதற்கும் அந்தத் தோப்புதான் காரணமாக அமைந்து விட்டது... வயலையும்... தோப்பையும் சுற்றிப் போட்ப்பட்ட மின்சார வேலியில் தவறுதலாய்க் கை வைத்த சங்கரன் துடிக்க... அவனைப் பதட்டத்துடன் பற்றியிருந்த காமாட்சியும் சேர்ந்து அன்று பலியானாள்...

"மழைக் காலத்தில்... மின்சார வேலியைத் தொட்டால் வெறும் ஷாக்கோடு நிற்குமா... அந்தத் தோப்பிலேயே குடியிருக்கிறவனுக்கு இந்த அடிப்படை அறிவுகூடவா இல்லாமல் போச்சு...? செத்தவன் அவன் பாட்டுக்கு செத்துவிட்டான். பழி எந்தவையில் இல்ல விழுந்து விட்டது..."

மணிவாசகம் சத்தம் போட்டார்.. பூபதிதான் அவரை அடக்கி வைத்துவிட்டு... பார்க்க வேண்டிய காரியங்களைப் பார்த்தான். மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்திருந்த பரதன் தோப்பு வீட்டில் சோர்ந்து கிடந்தபோது தேடிப் போய் அவனைப் பார்த்தான்...

"மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய் பரதா...?"

"தெரியவில்லைங்க அய்யா..."

"ஆத்தூர் காலேஜில் சேர்த்து விடுகிறேன். டிகிரி படி..."

"ஐயா..."

"இந்த வீட்டிலேயே எப்போதும் போல நீ இருக்கலாம் பரதா... இது உன் வீடு... தினமும் டவுன் பஸ்ஸில் போய்ப் படித்துவிட்டு வா..."

பூபதியின் உதவிக்கு மணிவாசகம் தடை போட்டார்.. ரகுபதியோ... தோப்பிலேயே வந்து பரதனின் முன்னால் சத்தம் போட்டான்...

"கனவு காண்கிறதுக்கும் ஒரு தகுதி வேண்டும்... யார் வீட்டிலே யார் ஓசியாய் உட்கார்ந்துக்கிட்டு... பொழப்பை நடத்துகிறது..? இந்தத்தோப்பு வீடு.. இந்தத் போப்கையும்.. வயலையும் காவல் காக்கும் வேலையாளுக்காக நாங்க

கட்டி வைத்திருப்பது.. இதில குடியிருக்கணும்னா... அப்பனின் வேலையை மனனும் செய்யணும்..."

பரதன் செய்தான்... பூபதி தடுக்கத் தடுக்க மண்வெட்டியை தூக்கிக் கொண்டு வயலில் இறங்கினான்... பதறிப் போன பூபதியைப் புன்முறுவலுடன் அமைதிப் படுத்தினான்...

"மேல் நாட்ல எல்லாம்... படிப்பதற்காக வேலை செய்து சம்பாதிக்கிறாங்க ஐயா... எனக்கு நீங்க இலவசமா எதையும் கொடுக்க வேண்டாம்... என் அப்பாவுக்கு தங்க இந்த வீட்டையும்... மாதா மாதம் சம்பளமும் கொடுத்தீங்க... அதையே எனக்கும் தாங்க... என் அப்பா பார்த்த வேலையை நானும் பார்க்கிறேன்..."

"உன் படிப்பு..."

"அது ஒரு நாளும் நிற்காது ஐயா... பகலில் காலேஜூக் போகும் நேரத்தில் தோப்பில் ஆளை நிறுத்திவைத்து விட்டுப் போகிறேன்... காலையிலும்... மாலையிலும்... தண்ணீர் பாய்ச்சி மற்ற வேலைகளைப் பார்க்கிறேன்..."

"இதைக் கண்டால் உன் அம்மா... அப்பாவின் ஆத்மா சாந்தி அடையாது பரதா..."

"அவங்க கண்ட கனவு பொய்யாக நான் விடமாட்டேன் ஐயா... இந்த மண்ணைக் பொத்துவது குறைவான வேலையில்லை... ஏரோட்டம் நின்று போனால்... நாம் சாப்பாட்டுக்கு எங்கே போவோம்...? ஒவ்வொரு விவசாயியும் ஒருவகையில் போராளிதான்... நான் படித்த பாடத்தில் ஒரு பாட்டு வரும்... 'வரப்புயர... வாழ்வு உயரும்...'ன்னு... அது எவ்வளவு பெரிய உண்மை

தெரியுமா? நான் விவசாயி பெற்ற மகன் ஐயா... ஒரு நாள் நான் கரெக்டர் ஆவேன்... அதுவரை விவசாயியாக வாழ்ந்து பார்க்கிறேன்..."

சொன்னபடி விவசாயியாக வாழ்ந்து காட்டினான் பரதன்... அவன் பொறுப்பில் வயலும்... தோப்பும் வந்த பிறகு... மகசூல் கூடியதேயொழியக் குறையவில்லை... பரதனுக்கு உதவுவதற்கு ஆட்சேபனை தெரிவித்த மணிவாசகத்தின் வாய் இறுக மூடிக்கொண்டது... துள்ளிய ரகுபத்யையும் அவர் அடக்கி வைத்தார்...

"சும்மாயிருடா சின்னவனே... தோப்பு வீட்டில் குடியிருந்துகொண்டு... ராப்பகலாய்த் தோப்பையும்... வயலையும் காவல் காக்க எந்தப் பயலும் வரமாட்டேன் என்கிறான்... இவன் ஒருத்தன்தான்... இவனுடைய அப்பனும்... ஆத்தாளும் வாழ்ந்த வீடுன்னு... அந்த

வீட்டை விட்டு நகர மாட்டேன் என்கிறான்... இவ்வளவு குறைந்த சம்பளத்திற்கு... இப்படி ஒரு ஏமாளி வேலைக்காரன் எங்கேயும் கிடைக்க மாட்டான்... அடக்கி வாசி...."

ரகுபதி வாயை மூடிக்கொண்டான்.. பூபதி மட்டும் எவரைப் பற்றியும் கவலைப்படாமல் பரதனின் படிப்பிற்கு உதவி செய்து கொண்டு இருந்தான்.

"பிஎஸ்ஸி முடித்துவிட்டால் போதுமா பரதா... எம்.எஸ்ஸி. படி... ஐ.ஏ.எஸ். பரிட்சைக்கு ஒரு பக்கம் தயாராகி எழுதிக் கொண்டே இரு... அது வரும்போது வரட்டும்...அதற்காகப் படிப்பை நிறுத்தாதே...மேலே... படி.."

பரதன் படிப்பைத் தொடர்ந்தான்... ஐஏஸ் தேர்விற்கான பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றான். அதற்கான புத்தகங்களைத் தேடிப் பிடித்து வாங்கிப் படித்தான். ஓய்வு நேரங்களை லைப்ரரியில் கழித்தான்...

"வெரிகுட்.. எம்எஸ்ஸி முடித்ததுமே.. ஐஏஎஸ்ஸையும் சேர்த்து எழுதிவிட்டாயே..." பூபதி பாராட்டினான்...

"ஆசைக்கு ஒரு அளவு இருக்க வேண்டும்... கூல்க்காரன் கலெக்டர் ஆகணுமுன்னு நினைத்தால் அது நடந்து விடுமா...?" ரகுபதி வயிறு எரிந்தான்.

பரதன் ஒரு பண்பட்ட சிந்தனையுடையவன்... பூபதியின் பாராட்டுதலை எப்படி ஒரு புன்னகையுடன் ஏற்றுக் கொண்டானோ, அதுபோல - ரகுபதியின் பொறாமையையும் ஒரு மென்னகையுடன் ஏற்றுக் கொண்டான்... ஆத்தூர் டுடோரியல் கல்லுரி ஒன்றில் பகுதி நேரம் பணியாற்றிக் கொண்டே... பூபதியின் வயலில் வேலை பார்த்து வந்தான்...

"இனிமேலும் நீ இந்தத் தோப்பு வீட்டில் இருக்கணுமா...?" பூபதியின் கேள்விக்கு...

"இது என் தாயின் மடிங்கைய்யா... தகப்பன் கால் பதித்த பூமி... இதை விட்டு விட்டு... வசதியான இடத்திற்கு நான் போவதா...?" என்று மறுத்துவிட்டான் பரதன்...

அவனின் குணத்தைப் பார்க்கப் பார்க்க... பூபதியின் மனம் வியப்படையும்...நெகிழும்...ஒரே நேரத்தில் நூறு ஆள்களை எதிர்த்து நிற்கும் வீரம் படைத்தவன்.. ரகுபதி பேசும் எகத்தாளப் பேச்சிற்கு என்றுமே பதில் பேச்சுப் பேசியதில்லை...

"பரதா.. நீ இந்தத் தோப்பு வீட்டில்... கூலியாளாக இருப்பபைப் பார்த்துத்தான்.. நீ வளர்ந்த தாயின் மடியும்... உன் தகப்பனின் கால் பதித்த பூமியும்... மௌனக் கண்ணீர் வடிக்கின்றன... இதை நீ அறிவாயா...?"

பூபதி மனதிற்குள்ளேயே கேட்டுக் கொள்வான்... ஆனால் அதைப் பரதனுக்குச் சொல்லி - புரிய வைக்க முடியது என்ற நிராசையுடன் அவன் போக்கில் விட்டு விட்டான்...

பரதன் அந்த ஊரில் இருக்கக் கூடாது என்று தான் சங்க்ரனும் - காமாட்சியும் ஆசைப்பட்டார்கள்... அவர்களது ஆசையை உணராதவனாய்... அந்த ஊரிலேயே கால் பதித்திருந்த பரதன்... ஒருநாள் நள்ளிரவில்.. ஊரை விட்டு ஓட நேர்ந்தது...

அதுவும் தனியாக ஓடாமல்... அவன் யார் வீட்டு உப்பைத் தின்று வளர்ந்தானோ... அந்த மணிவாசகத்தின் செல்ல மகள் சாரதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓட வேண்டி வந்தது.

5

கம்ப்யூட்டர் சென்டரில் அன்று கூட்டம் அதிகமிருந்தது... கல்யாணசுந்தரம் அவனது கேபினுக்குள் அமர்ந்து மேஜை மேலிருந்த கம்ப்யூட்டரை உயிர்ப்பித்து விட்டு... அதன் திரையைக் கவனிக்காமல்... கம்ப்யூட்டர் சென்மரில் இருந்த பெண்கனைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனது கேபின் திறக்கப்பட்டது...

"யார்... தொந்தரவு பண்ணுவது... எப்படியிருக்கே... இந்தக் கல்யாணத்திற்குத்தான் ஏகப்பட்ட கல்யாணம் ஆகிவிட்டதே... இன்னுமொரு கல்யாணமாமே... தேவையாடா..." என்றபடி, அவன் எதிரே வந்து அமர்ந்தான் மூர்த்தி... கல்யாண சுந்தரத்தின் நண்பன்... சென்னையில் உருப்படியாய் உத்தியோகம் பார்ப்பவன்...

"அப்படிப் பார்த்தால் தினத்துக்கு ஒரு கல்யாணம்தான் பண்ணிக்கொள்கிறேன்.. அதையெல்லாம் ஊரறியச் சொல்ல முடியுமா?..." கல்யாண சுந்தரம் கண் சிமிட்டி சிரித்தான்...

"ம்ஹும்... நீ ஊரறியச் சொல்வதற்காக ஒரு கல்யாணமா? பாவம்டா அந்தப் பெண்..."

"ஏன்டா... எனக்கென்ன குறை...?"

"அதை என் வாயால் நான் சொல்ல முடியுமாடா..."

"நீ நினைப்பதை உன் வாயால்தான் சொல்லணும்..."

"நீ என்... நண்பேன்டா..."

மூர்த்தி அதைச் சொல்லி விதத்தில் கல்யாண சுந்தரம் அதை ரசித்து பெருங்குரலில் சிரித்தான்... அந்த நேரம்

பார்த்து அவனது கேபின் கதவை திறந்து கொண்டு ஒரு பெண் வந்தாள்...

"நிஷா... என்னம்மா ஆனது...?" கல்யாண சுந்தரம் தன் சுழல் நாற்காலியை விட்டு எழுந்தே விட்டான்..."

"என் கம்ப்யூட்டரின் மௌஸ் சரியாக மூவ் ஆக மாட்டேன் என்கிறது சார்..." அவளது பார்வையில் இறக்கம் தெரிந்தது.

"அப்படியா வா பார்க்கலாம்..."

கல்யாணசுந்தரம்... மூர்த்தியை அம்போவென்று விட்டு விட்டு நிஷாவின் திருவடியைப் பின்பற்றிச் சென்றுவிட்டான்... கண்ணாடித் தடுப்பிற்கு அப்பால் அவன் நிஷாவின் அருகே அமர்ந்து... அவளது கைபிடித்து... மௌஸை உபயோகப் படுத்தச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதை... யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் மூர்த்தி...

சற்று நேரம் கழித்து... நண்பனின் நினைவு வந்தவனாக நிஷாவைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து வந்த கல்யாண சுந்தரம்.

"என்னடா... என்னை அப்படிப் பார்க்கிற...? "என்று வினவினான்...

"நீ மணிவாசகத்தின் மகளையா கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற...?"

"ஆமாம்... அதுக்கென்ன இப்ப...?"

"உனக்கெப்படிடா அந்த வீட்டில் பெண் கொடுக்கச் சம்மதித்தாங்க...?"

"அது ஒரு கதைடா...'

"உன்னிடம் கதைகளுக்கென்ன பஞ்சமாகவா இருக்கப் போகிறது... இணைக் கதை... துணைக் கதை... சிறு கதை... தொடர் கதைன்னு... முற்றுப் புள்ளியே வைக்காமல் கதை எழுதுவதில் நீ கில்லாடியாச்சே... இது என்ன புதுக்கதை...?"

"என் பெரியப்பா மகள் மேனகா இருக்காளில்ல..."

"அவளுக்கென்ன...?"ஷ

"அவள் மேல் மணிவாசகத்தின் இரண்டாவது மகன் ரகுபதிக்கு ஆசை..."

"ஓ... இதை வைத்து அவனை மடக்கி விட்டாயா...? நீ பெரிய ஆள்தான்டா... ஆனால் கல்யாணம்... நீ ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்..."

"என்னடா..."

"உலகத்தில் காணக் கிடைக்காத பொருள்கள் சில

உண்டு"

"அதற்கு என்ன இப்போது...?"

"உனக்கு மனைவியாக வரப்போகும் சாரதா... அந்த வகையைச் சேர்ந்த பெண்..."

இதைக் கேட்ட கல்யாண சுந்தரத்தின் முகம் மாறியது... அவன் மூர்த்தியை விரோதமாக பார்த்தான்...

"இதை எப்படி நீ சொல்கிறாய்...?"

"சந்தேகமா...? ம்ம்...? மணிவாசகத்தின் மகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள்..."

"இத்தனை விவரம் உனக்கெப்படித் தெரியும்...?"

"கல்யாண வயதில் இருக்கும் நம் ஊர் ஆண்கள் எல்லோருக்குமே சாரதாவைக் கைபிடிக்க வேண்டுமென்ற கனவு உண்டு... நானும் அந்த லிஸ்டில் இருப்பவன்தான்..."

மூர்த்தி வெளிப்படையாய்த் தன் மனதைக் கூற... கல்யாண சுந்தரத்திற்குள் கோபத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

"நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகும் பெண்ணைப் பற்றி இவன்... எவ்வளவு தைரியமிருந்தால்... என்னிடமே பேசுவான்..."

"இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடு, மூர்த்தி..."

"நிச்சயமாய் விட்டு விடுவேன்... ஆனால் கல்யாணம்... அப்பேர்ப்பட்ட பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது... நீ உன்னைன் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும்..."

"யாருக்காவும் நான் மாற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை... நான் எப்போதும் போலத்தான் இருப்பேன்."

"இதை உன் வருங்கால மாமனார் வீட்டில் சொல்வாயா, கல்யாணம்...?"

"மூர்த்தி...!"

"ஏன்டா கத்துகிறாய்...? சாரதாவின் அழகுக்கும்... குணத்திற்கும்... அவள் வாழ வேண்டிய வாழக்கையே வேறு... உனக்குப் பெண் கொடுக்க அந்தப் பெரிய மனிதன் எப்படிச் சம்மதித்தார் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. வேண்டாம்டா கல்யாணம்... ஒன்று நீ மாறு இல்லாவிட்டால் கல்யாணத்தை நிறுத்திவிடு... இவ்வளவுதான் நான் செல்வேன்..."

"நீ சொல்லும் இரண்டையும் நான் செய்ய மாட்டேன்..."

"உனக்கு மனச்சாட்சியே இல்லையாடா...?"

"அது எதற்கு தேவயில்லாததை வைத்துக் கொள்ளச் சொல்கிறாய்...? அந்தச் சாரதாவை நானும் பார்த்திருக்கிறேன்... மூக்கும்... முழியுமாக எலுமிச்சம் பழ நிறத்தில் ஆள் பார்க்க ஜோராக இருப்பாள்... என்ன ஒன்று... இவளை யெல்லாம் தாலியைக் கட்டாமல் தொட்டுவிட முடியாது. எனக்கும் ஊர் அறிய சொல்லிக் கொள் ஒருத்தி வேண்டும்... அதோடு வருபவள்... எனக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரமாகவும் இருக்க வேண்டும்... மணிவாசகத்தின் மருமகனாக நான் ஆகிவிட்டால்...

என் கடைசிக் காலம் வரை நான் கேட்கும் போதேல்லாம்... வண்டி வண்டியாகச் சீர்வரிசை வந்து இறங்கிக் கொண்டேயிருக்கும்... என் அண்ணன்காரன் என்

அதிர்ஷ்டத்தைப் பார்த்துக் காய்ந்து போய்க் கிடக்கிறான்னா பாரேன்... மூர்த்தி... எல்லோரும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பார்கள்... நான் ஒரே கல்லில் மூன்று மாங்காய்கள் அடித்திருக்கிறேன்..."

கல்யாண சுந்தரம் தன் புத்திசால்த்தனத்தை மெச்சிக் கொள்ள, மூர்த்தியோ சாரதாவின் தலைவிதியை நினைத்துப் பரிதாபம் கொண்டான்...

"ஏன்டா... அந்த ரகுபதி சாரதாவின் கூடப் பிறந்த அண்ணன்தானேடா...?"

"இது என்னடா இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிற...?"

"கூடப் பிறந்த அண்ணன் இப்படித் தெரிந்தே தங்கையைப் பாழுங் கிணற்றில் தள்ளி விடுவானாடா...?"

"மூர்த்தி! வேண்டாம். நானும் நீ வந்ததிலிந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்... இடக்கு முடக்காப் பேசிக் கொண்டிருக்கிறாய்... நீ எனக்குச் சிநேகிதனா...? இல்லை, துரோகியா?"

"உண்மையைச் சொல்லுவதால் நண்பன் துரோகி ஆகி விடுவானாடா?"

"இந்தப் பேச்சை விட்டுவிடு... நாம் வேறு பேசலாம்..."

"பேசலாமே... ஆனால் எனக்கு வேறு வேலை இருக்கிறதே..."

"ஏன்டா... இப்போதுதான் வந்தாய்... வந்தவுடன் உனக்கு வேலை வந்து விட்டதா...?"

"உன்னிடம் பேசிக் கொண்டிருக்கும் போது மறந்து விட்டேன்... இப்போதுதான் நினைவுக்கு வந்தது..."

மூர்த்தி... கல்யாண சுந்தரத்திடமிருந்து கழன்று கொண்டு... முகம் இறுக வெளியே வந்து தன் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்...

"என்னடா மூர்த்தி... எப்போது சென்னையிலிருந்து வந்தே..." என்று வினவியபடி எதிரே வந்து நின்றான்

குணசேகரன்...

"நேற்று ராத்திரி..."

"நம்ம செட்டிலேயே ஒழுங்காய் படித்து... உருப்படியாய் வேலை பார்ப்பவன் நீ ஒருத்தன்தான்... சென்னையில் வேலை கிடைத்துப் போனவன் எங்களைத் திரும்பியே பார்க்கக் கூடாதுன்னு வைராக்கியம் வைத்திருக்கிறாயா...?"

"ஏன்டா அப்படிக் கேட்கிற...?"

"அப்புறம் என்னடா... நேற்று ராத்திரி வந்தவன்... இப்போதுதான் எங்களைப் பார்க்க வந்திருக்கிறாய்... வந்தவுடன் கிளம்பி ஓடுகிறாயே... இது நியாயமா...? கல்யாண சுந்தரம்... சென்டரில் இல்லையா...?"

"எல்லாம் உள்ளேதான் இருக்கிறான்..."

"அதுதானே பார்த்தேன்... கம்ப்யூட்டர் கற்றுக் கொள்ள பசங்களை விடப் பெண்கள்தான் அதிகமாக வருகிறாங்க... இவன் கடலை போடாமல் எப்படி வீட்டில் தங்கி விட்டான்னு ஒரு நிமிசம் ஆச்சரியப்பட்டுப் போனேன்..."

குணசேகரன் சிரிக்க... மூர்த்தி அவனுடைய சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை... அப்போதுதான் அவனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்த குணசேகரன் சிரிப்பை நிறுத்திக் கொண்டான்.

"என்னடா ஆச்சு...?"

"இது சிரிக்க வேண்டிய விசயமில்லை, குணா.. நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய விசயம்..."

"என்னடா என்னென்னவோ பேசகிறாய்...?"

"பெண்கள் என்ன போதைப் பொருளா... குணா...? அவர்களுக்கும் மனது இருக்கிறது... என்று என்றைக்காவது நாம் நினைத்துப் பார்த்திருக்கிறோமா...?"

"மூர்த்தி..."

"இதுவரை இந்த கல்யாணம் எத்தனை பெண்களின் மனதைச் சிதைத்திருப்பானென்ற கணக்கு உன்னிடம் இருக்கிறதாடா...? பணத்திற்காகப் பழகுபவர்களைப் பற்றிப் பிரச்சனையே இல்லை... ஆனால் இவனுடன் பழகித் தொலைப்பவர்கள் இவனுடைய பேச்சிலும்...கவர்ச்சியான தோற்றத்திலும் மயங்கி மனதைப் பறிகொடுத்து விடுகிறார்கள்... இவன் பெண்களின் வாழ்க்கையோடு விளையாடுவதை நம்மிடம் பீற்றிக் கொள்வான்... நாமும்...அதை மௌன சாட்சிகளாகக் கேட்க வேண்டுமா, குணா...?

குணசேகரன் குற்ற உணர்வோடு மூர்த்தியைப் பார்த்தான்..

"எனக்கும் அந்த நினைவு உண்டு... இத்தனை நாள் இவன் ஆடிய ஆட்டத்தில்... பெண்கள் இவனிடம் வழிய வந்து மாட்டிக் கொண்டார்கள்... ஆனால்... இப்போது பாரேன்... அந்தச் சாரதா... எவ்வளவு அருமையான பெண் தெரியுமா? அது தேவதைடா மச்சான்... அந்தப் பெண்ணைப்போய் இவனுக்குக் கட்டிக் கொடுக்கிறார்களாம்... இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்லுவது...?"

"எனக்கு அதை நினைத்துத் தான் மனம் ஆறவில்லை நாம் போற்றுகின்ற ஜீவன் நமக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை... உயர்ந்த இடத்தில் வாழ வேண்டும்... நாய்க்கு வைரத்தின் மதிப்புத் தெரியுமாடா குணா... இவன் நாய்... அந்தப் பெண் கிடைப்பதற்கரிய வைரம்... தெய்வம் எப்படிடா குணா... இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறது?"

6

மனித மனங்களில் தான் எத்தனை வகைகள் உள்ளன... 'சாரதா தேவைததான்... அதனால்தான்... தாலியைக் கட்டிவிட்டு அவளைத் தொட்டு ஆள வேண்டிய நிர்பந்தம் எனக்கு வந்திருக்கிறது... தேவதையாய் அவள் இருந்தால் என்ன...? என்னைப் பொறுத்தவரை அவள் நான் தொட்ட... தொடப்போகும் எத்தனையே பெண்களில் ஒருத்தி... என்ன

ஒன்று மற்றவர்களை ஊரறிய அறிமுகப்படுத்த முடியாது... இவளை அறிமுகப் படுத்தலாம்... அவ்வளவுதான்...' என்று அலட்சியமாக நினைப்பது கல்யாண சுந்தரத்தின் மனம்...

"பெண் என்பவள் சக்தி... அதிலும் சாரதா தேவதை... எனக்கு அவள் எட்டாக்கனியாய் இருந்தால் என்ன...? அவள் யார் கைக்குக் கிடைத்தாலும்... அவளுடைய அருமையைத் தெரிந்தவன் கையில் கிடைக்க வேண்டும்..." என்று ஆராதிப்பது மூர்த்தியின் மனம்...

இரு வேறுபட்ட மனங்களுமே... சாரதாவைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தன... ஒரு மனம் அவளைக் கசக்கி முகர நினைத்தது... மற்றொரு மனமோ... அவள் கசக்கப்படாமல்... பூஜைக்குரிய மலராக வாழ வேண்டுமே என்று பரிதவித்தது...

இருவருமே குணசேகரனின் நண்பர்கள்... ஒருவரின் குறை நிறைகளோடு... நண்பனாக ஏற்றுக் கொள்ளும் தன்மை படைத்த குணசேகரன்... மூர்த்தியை ஏறிட்டுப் பார்த்தான்..

"இதில் நாம் கவலைப்பட்டு ஆகப் போவதென்ன, மூர்த்தி... அந்தப் பெண்ணின் பெற்றவர்களும்...

கூடப் பிறந்தவர்களும் இவனைப் பற்றி விசாரித்திருக்க மாட்டார்களா என்ன...?"

"என்ன விசாரித்து... என்ன ஆகப் போகிறது...? அந்தப் பெண்ணின் சின்ன அண்ணன்... இந்த ராஸ்கலின் பெரியப்பன் மகளை சைட் அடித்துத் தொலைத்திருக்கிறானே..."

"பிடித்திருந்தால் நேரடியாய்ப் பெண் கேட்டு விடவேண்டியதுதானே... மணிவாசகத்தின் மகனுக்குப் பெண் கொடுக்க மாட்டேனென்று யாரும் சொல்லி விடுவாங்களா என்ன...?"

"அது அந்த கூதரைக்கு தெரியவேண்டுமே... இவன் உன் தங்கையை எனக்கு கட்டிக்கொடு... என் தங்கையை உனக்குக் கொடுக்கிறேன்னு பேரம் பேசியிருக்கிறான்... அவன் புத்தியைக் கடன் கொடுத்து விட்டான்..."

"இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம்... நீயும் நானும்... கவலைப் பட்டு ஆகப் போகிறதென்ன, சொல்லு... கல்யாணத்துக்கு நீ வருவாயில்லையா...?"

"வந்து அந்தக் கொடுமையை என் கண்ணால் பார்க்கச் சொல்கிறாயா...? அவ்வளவு மனத் தைரியம் எனக்கு இல்லை... நீ போவாயா...?"

"எப்படிப் போபாமலிருக்க முடியும்...? நீ படித்தவன்... கண்காணாத ஊரில் உத்தியோகம் பார்க்கிறாய்... இவன் வேண்டாமென்று ஒரு நொடியில் நீ தூக்கி எறிந்துவிடலாம். ஆனால்... நான் அப்படியா? என்னால் அப்படிச் செய்ய முடியுமா...? இவனை அண்டிப்பிழைப்பவன்... இவனை எதிர்த்து இந்த ஊரில் குப்பை கொட்ட என்னால் முடியாது மூர்த்தி... நான் போய்த்தான் ஆக வேண்டும்..."

"இதற்கு ஏன்டா... இவ்வளவு ஃபீல் பண்ணுகிறாய்...? உன் நிலைமை எனக்குத் தெரியாதா...? வரட்டுமா...?"

மூர்த்தி போய்விட்டான்... குணசேகரன் ஒரு பெருமூச்சுடன்... கல்யாண சுந்தரத்தைத் தேடிப் போனான்...

"வாடா... வழியில் மூர்த்தியைப் பார்த்தாயா...?"

"பார்த்தேன்..."

"இவனைக் கொஞ்சம் நல்லவன்னு நினைத்தேன்... இவன் என்னடான்னா... எனக்கு மேலே எத்தனா இருக்கிறான்...!"

"ஏன்? என்ன செய்தான்...? இங்கே வரும் பெண்கள் யாரையாவது சைட் அடித்து விட்டானா...?"

"அப்படிச் செய்தால்தான் பரவாயில்லையே..."

'அதுதானே பார்த்தேன்... உன் புத்தி இப்படித் தானே போகும்...?'

"ஆனால் அவன்தான் சைவப் புல்யாச்சே..."

'உனக்கு அது பொறுக்கலையா...?'

"இவன் எனக்கே அட்வைஸ் பண்ண வருகிறான்டா..."

'நல்லது சொன்னால் கேட்டுக் கொள்கிற ஆளா நீ...!'

"என்னவோ கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால்... நான் எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமாம்..."

'விடாமல் பிடித்துத் தொங்கி என்னத்தைடா சாதிக்கப் போகிறாய்...?'

"இவன் பெரிசா எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டான்..."

'என்னைப் போல்... மனதுக்குள்ளே பேசிக் கொண்டு வெயியே ஊமையாக உட்கார்ந்திருக்க அவனுக்கு இன்னும் தெரியவில்லை...'

"போடான்னு சொல்லி விட்டேன்..."

'அவனுக்குப் பிழைக்க வழியிருக்கிறது. போய் விட்டான்... எனக்கு அது இல்லையே... அதனால்... நீ போடான்னு என்னைப் பார்த்துச் சொல்லிவிடக் கூடாதுன்னு அடக்கி வாசிக்கிறேன்...'

"இவனுக்கு என்மேல் பொறாமைடா..."

"எதைப் பார்த்துடா மச்சான்...?"

"நான் கட்டிக்கப் போகிற பெண் மேலே இவன் கண் போடுகிறான்..."

'ஊரே கண் போடுது... அது உனக்குத் தெரியுமா...? உன் அதிர்ஷ்டம்... அவள் உனக்குக் கிடைத்திருக்கிறாள்..'

'என்னடா... நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டேயிருக்கிறேன்...நீ வாயையே திறக்காமல் உட்கார்ந்திருக்கிறாய்...?'

'வாயைத் திறந்து பேசியவனைத்தான்... இவ்வளவு நேரமும் நீ வசைபாடிக் கொண்டிருக்கிறாய்... எனக்கும் அப்படி உன்னிம் வசை கேட்கவேண்டுமா...? உன் முன்னால் வாயைத் திறந்துபேச எனக்கென்ன பைத்தியாமா பிடித்திருக்கிறது...?' ஊஹும்... உன் முன்னால் வாயைத் திறக்கவே மாட்டேன்...'

குணசேகரன் அமைதியின் சிகரமாய்ப் புன்முறுவல் ஒன்றைச் சிந்தினான்.

"நீதான் என் நண்பேன்டா..." என்று கல்யாண சுந்தரம் அவனைக் கட்டியணைத்துக் கொண்டான்...

கல்யாண சுந்தரத்தின் கதை இப்படியிருக்க... அதை அறியாதவளாய்... ஆத்தூரில்... தான் உண்டு.. தன் வேலையுண்டு.. பாசம் காட்ட அண்ணன் பூபதியுண்டு... கொஞ்சி விளையாட அண்ணன் மகன் சுரேந்திரன் உண்டு என்று வளைய வந்து கொண்டிருந்தாள் சாரதா...

பூபதியின் மகன் சுரேந்திரனுக்குச் சாரதாவின் மேல் பிரியம் அதிகம் உண்டு.. எப்போதும் சிரித்த முகமாய் அவனுக்கு இணையாய்... நான்கு வயதுச் சிறுமியாய் மாறிக் கூட விளையாடும் சாரதாவைத்தான் சுரேந்திரன் அதிகம் தேடுவான்... பூபதி தன் மீது காட்டிய பாசத்தை... அவன்பெற்ற மகன் மீது... சாரதா அப்படியே திருப்பிக் காட்டியதும் கூட, சுரேந்திரன் சாரதாவிடம் நெருக்கம் காட்டியதற்கு ஒரு காரணம்... நாத்தனாரிடம் பிள்ளை அதியமாய் ஒட்டுவதைக் கண்டு காயத்ரி மகனை அவளிடமிருந்து பிரிக்க முனைந்தாலும் தாய்க்குத் தெரியாமல்... சாரதாவைத் தேடிச் சுரேந்திரன் வந்து விடுவான்...

"சுரேன்! எங்கேயிருக்கிற...?"

"என்னிடம்தான் இருக்கிறான் அண்ணி..."

"அவன் ஸ்கூல் யூனிபார்மைக் கூட இன்னும் கழட்டவில்லை..."

"இல்லையே... அவனுக்கு யூனிபார்மைக் கழட்டி... குளிக்க வைத்து டிரெஸ் மாற்றிவிட்டு விட்டேன்!"

"அவன் பசியோடு இருப்பான் சாரதா..."

"அப்போதே அவனைச் சாப்பிடவைத்துவிட்டேன், அண்ணி..."

"ஹோம் வொர்க் செய்ய வேண்டாமா...?"

"அதைத்தான் அவனுக்குச் சொல்லிக் கொடுத்துச் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறேன்..."

'என் பிள்ளைக்கு நான் தாயா...? இல்லை, இவள் தாயா...?' என்ற கோபம் காயத்ரிக்குள் பொங்கி எழும்... பூபதியிடம் அதைச் சொல்லிப் புலம்பினால்...

"உன் வேலைகளைச் சாரதா குறைக்கிறாள்... அதற்காகச் சந்தோசப்படாமல்... அவள் மேலேயே புகார் சொல்கிறாயா...?" என்று கேட்டான்.

"என் பிள்ளைக்கு நான்தான் செய்ய வேண்டும் என்று எனக்கு இருக்காதா...?"

"ஏன்டி... யோசனையோடுதான் பேசுகிறாயா...? உன் மகனுக்கு யுனிபார்ம்... கழட்டவே உனக்கு ஒரு மணி நேரமாகிவிடும்.. அதற்குப் பின் அவனைக் குளிக்கவைத்து வேறு டிரெஸ் மாற்றி விடுவதற்குள்... நீ ஓய்ந்துபோய் விடுவாய்... அப்புறமாய் அவனை நீ சாப்பிடவைத்து... ஹோம்வொர்க் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தால்..

விடிந்து விடும்.. உன் சொல்பேச்சுக் கேட்டு... ஒழுங்காய்... வாயைத்திறந்து சாப்பிடுவானா உன் பிள்ளை...?"

"சொல்லி காட்டுகிறீங்களா...?"

"இல்லை... சாரதா... உன் சுமையைக் குறைக்கிறாள்ன்னு உனக்கு நினைவு படுத்துகிறேன்.."

"அதற்காக என் பிள்ளையை நான் கவனிக்கவே கூடாதா...?"

"பிள்ளையைத்தான் கவனிக்க வேண்டுமா...? இதோ, உன் கண்ணெதிரில் உன் புருசன் இருக்கிறேன்... தினமும்... என்னைக் கவனி..."

பூபதி... மனைவியை சரஸமாய் நெருங்குவான்... கணவன் பேச்சை மாற்றுவதைப் புரிந்து கொண்டாலும்... காயத்ரி இறங்கிப் போய் அவனுடன் ஒன்றி விடுவாள்... சுரேந்திரனோ... சாரதாவுடன் ஒன்றி விடுவான்...

"அத்தை...அந்தக் குருவி ஏன் என்னையே முறைச்சுப் பார்க்குது..."

"அதற்கு உன்மேல் பொறாமைடா கண்ணா..."

"ஏன்...?"

"ஏன்னா... நீ அதைவிடச் சுறுசுறுப்பாய்ச் சாப்பிடுகிற... படிக்கிற பார்த்தியா... அதனால்தான்..."

இப்படிப் பேசியே சாரதா தன் அண்ணன் மகனைச் சொன்னதைச் செய்ய வைத்துவிடுவாள்... பள்ளி நேரம் தவிர... மற்ற நேரங்களில் எல்லாம்...சாரதாவையை சுற்றிச் சுற்றி வருவான் சுரேந்திரன்...

"உனக்கு கல்யாணமாகிப் போய்விட்டால்.. சுரேந்திரன் பாவம்.. ஏமாந்து விடுவான்..." கவலையுடன் பூபதி கூறிய போது...

"எங்கே போகப் போகிறேன்...? பக்கத்து ஊர்தானே அண்ணா... நினைத்தவுடன்... சுரேந்திரனைப் பார்க்க ஓடிவந்துவிட மாட்டேனா..." என்று அறியாமையுடன் கூறினாள் சாரதா...

## 7

காலம் வகுத்திருக்கும் கட்டளையை யாரும் அறிய முடியாது. கல்யாண சுந்தரத்தைப் பற்றிப் பூபதியின் அபிப்ராயம் சரியில்லை என்பதை அறிந்திருந்தும்... சாரதா மௌனமாகத் தன் விருப்பமின்மையைச் சொல்லாமல் விட்டு விட்டதற்கான ஒரே காரணம்... கல்யாண சுந்தரம்... பக்கத்து ஊர்க்காரன் என்பதுதான்...

நினைத்தவுடன் தன் பெரிய அண்ணனைப் பார்த்துவிட முடியும்... அண்ணன் மனனைச் சீராட்ட முடியும்... என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே... அவள் அந்தத் திருமணத்திற்குச் சம்மதம் கொடுத்திருந்தாள்...

ஆனால்... பாவம்... அவளுக்குத் தெரியாது... எந்த அண்ணனின் அருகேயிருக்கும் ஊரிலேயே வசிக்க வேண்டும் என்பதற்காக... ஒரு குணம் கெட்டவனுக்கு மனைவியாகப் போக ஒப்புக் கொண்டாளோ... அந்த அண்ணனையே... கண் பார்க்க முடியாமல் 'ஓடிப்போவாள்' என்ற பழியைச் சுமந்து கொண்டு உறவேயில்லாத ஒரு ஆண் மகனுடன்... தொலை தூரத்திற்கு அவள் ஓடவேண்டி வரப்போகிறது... என்பது...

சாரதா உலகம் அறியாதவள்... வீட்டை விட்டுக் கல்லூரிக்கு மூடிய கார் கதவுகளுக்கு உள்ளே அமர்ந்து... சென்றுவந்தவள்... அவள் படித்ததும் பெண்கள் கல்லூரி... வயதுக்கு வந்த பெண்ணை அதிகம் வெளியே அழைத்துப் போகாத குடும்பத்தில் பிறந்தவள்...

அவள் பரதனை அதிகம் பார்த்ததில்லை... தோப்புக்குக் குடும்பத்துடன் அவள் சென்றபோதெல்லாம் அவன் இளநீர் பறித்துக் கொண்டு வந்திருக்கிறான்... ஆனால்... அவள் முகம் பார்க்க அவன் முயன்றதில்லை... அவன் இருக்கும் திசைப் பக்கம் சாரதா திரும்பியதுமில்லை...

பரதனுக்கு படியளந்த வீட்டில் பிறந்த பெண்... பரதனுக்குப் படிப்பை அளித்த பெருந்தனக்காரரின் தங்கை... அவனுக்குச் சின்ன எஜமானி... அவள் தோப்பில் கூலியாளாக வேலை செய்து வந்தவன்... அவளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஊரை விட்டு ஓடப் போகிறோம் என்று பரதன் கனவிலும் நினைத்துப் பார்த்திருப்பானா...?

இல்லை... அந்நியர்கள் வந்தால்... வீட்டிற்குள் சென்று அடைந்து கொள்ளும் இயல்புடைய சாரதா... தங்கள் தோப்பைக் காவல் காத்த... காவல்காரனின் மகனின் கையைப் பிடித்துக் கொண்டு...

'வேலைக்காரனோடு ஓடிப் போனவள்...' என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டு... ஊரை விட்டு ஓடவேண்டி வரும் என்று நினைத்துத்தான் பார்த்திருப்பாளா...?

எந்த நினைவும் இல்லாமல் நிச்சிந்தையான மனதுடன் சாரதா திருமணத்தை எதிர்பார்த்து... திருமணப் பெண்ணாகத் தயாராக... முதலாளியின் வீட்டுத் திருமணத்தில் ஓடி... ஆடி வேலை செய்ய வேண்டிய பொறுப்பு உள்ள பரதன்.. திருமண வீட்டின் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான்...

"பரதா... கொட்டகை போட ஆள் வந்தாச்சா..."

"வந்தாச்சுங்கய்யா"

"மைக் செட்டுக்கு சொல்லி விட்டு விட்டாயா...?"

"வந்து இறங்கிருச்சுங்களே..."

"இலைக் கட்டு எங்கே...?"

"பின் பக்க வாசல் பக்கத்திலிருக்கிற ரூமில் போட்டிருக்கிறேன்..."

"காய்கறி மூட்டையை எங்கேப்பா வைத்தாய்?"

"இலைக் கட்டுப் பக்கத்திலேயே இருக்கும் பாருங்க..."

"மொட்டை மாடியில் விரிக்க புது ஜமுக்காளம் வேண்டுமே..."

"இதோங்கைய்யா..."

நான்கு திசைகளில் இருந்தும் பரதனைத்தான் அழைத்து செல்கள் ஒலித்தன... ஒழுங்காகவும்... சரியாகவும்... அதிகமாகவும்... நேரம் காலம் பார்க்காமல்... உழைப்பவர்களின் தலையில்தான் அடுத்தடுத்து வேலைச் சுமைகள் ஏறும்...

பரதன் அதிகச் சுமையைச் சந்தோசமாய் சுமந்தான்... அவன் மேல் அன்பும்... அனுதாபமும் காட்டிய பூபதியின் தங்கைக்குத் திருமணம்... அதில் தன் முழுப் பங்களிப்பும் இருக்கவேண்டும் என்ற நன்றி விசுவாசத்துடன்... ஓடி ஓடி உழைத்தான்...

திருமணத்திற்கு முதல் நாள்... அவன் தோப்பு வீட்டிலிருந்து மணி வாசகத்தின் வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது...

'கண...கண..." வென்ற சைக்கிள் மணியின் ஒலி கேட்டது...

"போஸ்ட் மேனா...?" திரும்பிப் பார்த்தான்...

"என்னப்பா பரதா... உன் முதலாளி மகள் கல்யாணத்தில் நீ ஒரு ஆள்தான் ஓடி...ஆடி... வேலை பார்க்கிறாயாம்... மத்தவங்க எல்லோரும் ஊஞ்சல் கட்டித் தூங்குகிறாங்களாம்... உனக்கு ஏனப்பா இந்த தலைவிதி...? அவங்க கொடுக்கிற சம்பளத்திற்கு நீ இந்தத் தோப்பில் வேலை பார்க்கிறதே அதிகம்.. அதில வீட்டு வேலையைப் பார்க்க வேறு நீ ஓடணுமா...?" கடிந்து கொண்டே சைக்கிளை விட்டு இறங்கினார்... போஸ்மேன் பரமசிவம்...

"அதனால் நான் என்ன குறைந்தா போய்விடப் போகிறேன்...? விடுங்கண்ணே..."

"என்னத்தை விடுகிறது...? இந்தப் பணக்காரங்களுக்கெல்லாம் நன்றி விசுவாசம் என்கிறது... மருந்துக்குக் கூடக் கிடையாது.. அதிலயும் மணிவாசகம் மருந்துக்குக் கூட உன் உழைப்பை மதிக்க மாட்டார்... மாடாய் உழைக்க வேண்டியது உன் கடமைன்னு சொல்லுவார்..."

"அவருக்காகவா நான் இதைச் செய்கிறேன்...? பூபதியோட முகத்தைப் பார்க்க வேண்டாமா...?"

"அதைச் சொல்லு... அந்த வீட்டில் தப்பிப் பிறந்தது இரண்டே இரண்டு ஜீவன்கள்தான்... ஒன்று பூபதி... இன்னொன்று சாரதா... மத்ததெல்லாம்... மணிவாசகத்தின் ஜெராக்ஸ்தான்..."

அவர் சொல்வது உண்மை என்பதை அறிந்திருந்த பரதன்... பதில் சொல்லாமல் சிரித்தான்.

"சிரிச்சே மழுப்பு... என்ன ஒன்னு... மனச்சாட்சியோடு இருக்கும் அந்த சாரதா பெண்ணிற்கு. மனச்சாட்சியே

இல்லாத அயோக்கியன் வந்து மாப்பிள்ளையாய் வாய்த்திருக்க வேண்டாம்..."

பரதன் மௌனமாக இருந்தான். அவன் மனம் வேதனைப்பட்டது.. போஸ்ட்மேன் சொல்லுவதுபோல்... ஊருக்குள் எல்லோரும் பேசிக் கொள்வது அவன் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

பொதுவாகப் பெண்கள் பேசத் தயங்கும் விசயங்களை... ஆண்கள் தயங்காமல் பேசிவிடுவார்கள்... அதுபோலப் பெண்களின் காதுகளுக்குச் செய்திகள் வருவதற்கு முன்னாலேயே ஆண்களின் காதுகளுக்குச் செய்திகள் வந்துவிடும்.

டீக்கடைகள்... பாலத்துக் கைப்பிடிச் சுவர்... கபடி விளையாடும் மைதானம்... சினிமாத் தியேட்டர்... என்று ஆண்கள் தினமும் கூடிப் பேச... ஆயிரம் இடங்கள் கிராமத்தில் உண்டு... பெண்கள் தண்ணீர்க் குழாயில் பேசிக் கொள்வது மட்டும்தான்... அதுவும் பொறுக்காத ஆண்கள்... வீட்டுக்குள் தண்ணீர்க் குழாயில் பேசிக் கொள்வது மட்டும்தான்... தண்ணீர்க் குழாயை இழுத்துப் பெண்கள் வெளியுலகின் வெளிச்சத்தையும்... காற்றையும்... சுவாசித்து விடாமல் பார்த்துக் கொண்டாhகள்.

"எங்க வீட்டுப் பொம்பளங்க... வெளியே... வாசலிலே வந்து நிற்க மாட்டாங்கப்பா..."

இப்படிப் பெருமை பேசியே... பெண்களை வீட்டுக்குள் சிறைப் பிடித்த ஆண்கள் குலம்... சுதந்திரமாய் வெளியுலகில் உலவிச் செய்திகளைப் பரியாறி... சேகரித்து வருவார்கள்... அவற்றில் தேவைப்படுவதை மட்டும் வடிகட்டி... பெண்களிடம் சொல்லுவார்கள்.

நம் பெண்கள் மட்டும் லேசுப்பட்டவர்களா என்ன...? அந்தச் செய்திகளுக்கு... கண்... காது... மூக்கு வைத்து... ஊருக்குள் உலவ விட்டு விடுவார்கள்...

இப்படி உலவி வரும் பல செய்திகளில்... அறுபது விழுக்காடு செய்திகள்... கல்யாண சுந்தரத்தின் அயோக்கியத்தைத்தான் பறை சான்ற்றின...

"இவனுக்கா... சின்னம்மாவைப் பெண் கொடுக்கப் போகிறாங்க..."

பரதனின் மனம் சங்கடப்படும்... பூபதியிடம் இதைப் பற்றிப் பேச... வாய் வரை வார்த்தைகள் வந்துவிட்ம்... ஆனால் வேலை செய்பவனுக்கே உரிய எல்லைக்கோடு நினைவுக்கு வர... அவன் வார்த்தைகளை வெளிவிடாமல்... தொண்டைக் குழிக்குள் விழுங்கிக் கொண்டு ஊமையாகி விடுவான்...

இப்போதும் அது போலவே... தன்னை ஊமையாக்கிக் கொண்டு பரமசிவத்தைப் பார்த்தான்...

"சரி விடு...பெற்றவனுக்கும்... கூடப் பிறந்தவனுக்கு... இல்லாத கவலையும்... அக்கறையும்... உனக்கும்... எனக்கும்... எதற்கு..? இந்தா, இந்த ரெஜிஸ்டர் தபாலைப் பிடி... இங்கே கையெழுத்துப் போடு..."

போஸ்ட்மேன் போய் விட்டார்... பரதன்... தபாலைப் பிரித்துப் படித்துப் பார்த்தான்... தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் விரியுரையாளர் வேலைக்கு வந்திருந்த நியமன உத்தரவு... அது... முதுகலைப் படிப்புடன் நிறுத்திக் கொள்ளாமல்... ஐஏஎஸ் தேர்விற்குத் தயாராகிக் கொண்டே... பரதன் எம்பில் முடித்திருந்ததற்குக் கிடைத்திருந்த வேலை அது...

அவன் மயதிற்குள் யோசனை வந்தது... பரதனின் நண்பர்களின் வற்புறுத்தலால்... அவன் எழுதிப் போட்டுக் கிடைத்திருந்த வேலை... அந்த வேலை... ஆனால்... தோப்பு வீட்டை விட்டு எப்படிப் போவது...?

அவன் வீட்டிற்குள் சென்று... தாய் தகப்பனின் படத்தைப் பார்த்தான்... அவர்களுக்கு முன்னால் இருந்த மாடத்தில் அந்த வேலை நியமன உத்தரவை வைத்தான்.

"அம்மா... அப்பா... நான் உங்களை விட்டு போக மாட்டேன்...!"

முரட்டு பிடிவாதத்துடன் கண் மூடி நின்ற மகனைப் பார்த்த பெற்றவர்களின் புகைப்படத்தில்...மௌனப் புன்னகை தெரிந்தது.

அவர்களுக்குத் தெரியும்... அன்றைக்கு நள்ளிரவுல் இதே தோப்பு வீட்டிற்கு... சாரதாவுடன் அவன் ஓடி வருவான் என்பது... தங்களின் புகைப்படங்களோடு அவனுடைய சான்றிதழ்களையும்... நியமன உத்தரவையும் எடுத்துக் கொண்டு அவன் அந்தத் தோப்பு வீட்டை விட்டு.. சாரதாவின் கைப்பிடித்துக் கொண்டு ஓடுவான் என்பது..

அடுத்து என்ன நடக்கப் போகிறது..? என்பது.. அந்த ஆண்டவனைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்..?

அது தெரியாத பரதன்.. வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு மணிவாசகத்தின் வீட்டை நோக்கி நடந்தான்..

"இப்படி ஆடி அசைஞ்சுக்கிட்டு வருகிறாயே.. கல்யாண வேலைகள் தலைக்கு மேல கிடக்குதே.. யார் பார்ப்பாங்கன்னு நினைத்தே.. தண்டத்துக்குச் சம்பளம் வாங்கிக் கொண்டு.. தோப்பு வீட்டில் தூங்கித் தூங்கி எழுந்தாயே.. சாப்பிட்ட சாப்பாடு செரிக்க இன்றைக்கு ஒரு நாளைக்காவது.. உருப்படியாய் வேலை செய்யப்பாரு.."

வாசலில் உறவினர் குழாமுடன் நின்று கொண்டிருந்த ரகுபதி.. வார்த்தைகளால் சுட்டான்..

"சரிங்க.."

அதிகம் பேசாமல் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்.. கல்லூரியில் விரிவுரையாளராக வேலை கிடைத்திருக்கு.. ஐஏஎஸ் தேர்வு எழுதியிருக்கும்.. பரதன்..

"ஏம்ப்பா ரகுபதி.. அந்தப் பையனைப் பார்த்தால் படிச்ச பையனாட்டம் தெரியுது.. நீ இந்த விரட்டு.. விரட்டுகிற.." திருமணத்திக்கு வந்திருந்த உறவினர்களில் ஒருவர் வியப்பிடன் கூறினார்...

"படிச்சவன்தான்... பெரிய கரெக்டராகணும்னு கனவு கண்டுக்கிட்டு பரிட்சையெல்லாம் எழுதிட்டு வந்திருக்கிறான்... அலட்சியமாய்க் கூறினான் ரகுபதி..."

"கலெக்டருக்குப் பரிட்சை எழுதியிருக்கிறானா...?"

"அதுக்கு ஏன் இப்படி வாய் பிளக்கறே... ஆயிரம்தான் இருந்தாலும்... கூலிக்காரன்... கூலிக்காரன்தான்... போய்... மத்தவங்ககிட்ட நின்னு வம்பு பேசுங்க... எனக்கு வேலையிருக்கு..."

கடுப்புடன் கூறிய ரகுபதி... அந்த இடத்தைவிட்டு அகன்றான்..

8

சீரியல் வளிக்குகள் எரிய ஆரம்பித்ததும்... வீடே... தேவலோகம் போல் மாறிக் காட்சியளித்தது... திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்கள்... வீட்டின் முன்னால்...தெருவை அடைத்துப் போடப் பட்டிருந்த பந்தலில் கிடந்த நாற்காலிகளில் தனித்தனிக் குழுவாய்ப் பிரிந்து அமர்ந்து பேசிக் கொண்டிருக்க... வீட்டின் முன் பகுதியில் இருந்த தோட்டத்தில்... வயதுப் பெண்கள் குழுமி நின்று கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர்...

ஒரு அரண்மனை போல் பரந்து விரிந்திருந்த வீட்டின் மொட்டை மாடியில் ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டு... ஆங்கே இளைஞர்களின் ஆட்சி ஆரம்பமாகியிருந்தது... சீட்டு விளையாட்டும்... பேச்சும்... சிரிப்புமாக அந்த இடமே களைகட்டியிருந்தது.

கல்யாண சுந்தரம்... அவனுடைய நண்பர்களும் மொட்டை மாடிக்கு வந்தனர்... கீழே தோட்டத்தில் நின்று கொண்டிருந்த இளம் பெண்களைப் பார்த்து... சன்னமாக விசிலடித்தான் கல்யாண சுந்தரம்...

"ஏன்டா... விடிந்தால் உனக்குக் கல்யாணம் இப்போது போய் இதுகளைப் பார்த்துப் பல்கலைக் காட்டுகிறாயே... இது

தேவையாடா...?" என்று கடிந்து கொண்டான் குணசேகரன்...

"அது பாட்டுக்கு அது... இது பாட்டுக்கு இது... ஆயிரம்தான் சொல்லுமச்சி... இந்தக் கல்யாண வீடுகளுக்கு வரும் பெண்களுக்கு மட்டும் தனி அழகும்... வாசனையும் வருதே... அது எப்படிடா...?" கண் சிமிட்டிக் கேட்டான் கல்யாண சுந்தரம்...

"வேண்டாம்டா கல்யாணம்... இது கல்யாணப் பெண்ணின் வீடு... அடக்கி வாசி..."

"என் வீட்டில்தான் கல்யாணம் நடக்கவேண்டும்... ஆனால் பெண்ணைப் பெற்ற கிழவன்... மகனுக்கும்... மகளுக்கும்... ஒரே வீட்டில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் எடுக்கிறேன்... இரண்டு கல்யாணத்தையும் என் வீட்டில்தான் வைத்துக் கொள்ளுணும்னு பிடிவாதம் பிடித்தான்... சரி.. அவனே இழுவையை இழுத்த விட்டுக் கொள்கிறான்.. நமக்கு என்ன போச்சுன்னு எங்கப்பனும்.. பெரியப்பனும்... வண்டியைக் கட்டிக்கிட்டு கூட்டமாய் வந்து இறங்கிட்டானுங்க..."

கல்யாண சுந்தரம் பேசப்பேச... அவன் பேச்சு வேறு யார் காதிலும் விழுந்து தொலைக்கப் போகிறது... என்று கலவரம் அடைந்தான் குணசேகரன்... அவசரமாய்ச் சுற்று முற்றும் பார்த்தான்...

"என்னடா... அபப்டிப் பார்க்கிற...?"

"ஏன்டா கல்யாணம்... உன் மாமனாரைப் போய் அவன்... இவன்னு பேசுகிறாயே... தண்ணி... கிண்ணி போட்டிருக்கிறாயா...?"

"அதையெல்லாம் இனிமேல்தான் போடணும்..."

"எங்கே போடப் போகிற...? இங்கேயா...?

வேண்டாம்டா..."

"வேற எங்கே போய்ப் போடச் சொல்கிற...?"

"இது உனக்குப் பெண்ணைக் கொடுக்கப் போகிற இளிச்ச வாயன் வீடுடா... இங்கே போய் அந்தக் கண்ராவியையெல்லாம் வைத்துக் கொள்ளாதே..."

குணசேகரன் எரிச்சலுடன் கூற... கல்யாண சுந்தரம் பெருங்குரலெடுத்துச் சிரித்தான்... அவனுடைய சிரிப்புச் சத்தம் தோட்டத்தில் முகாமிட்டிருந்த கன்னியர் கூட்டத்தை எட்ட... அவர்களில் ஒருத்தி... சிரிப்புச் சத்தம் வந்த திசையைப் பார்த்தாள்...

"இதைப் பாருடா... இளசுகளில் ஒன்று என்னைப் பார்க்குது..."

கல்யாண சுந்தரம் அவளை நோக்கிக் கையை ஆட்ட.. குணசேகரன் அவசரமாய்ப் பின்னுக்கு நகர்ந்து நின்று கொண்டான்....

"ஏன்டா இப்படிச் செய்கிற? தர்ம அடி வாங்கிக் கொடுத்து விடணுமுன்னு ஒரு முடிவோடு வந்திருக்கிறாயா...?"

"அவளே அண்ணாந்து ஆவலாய்ப் பார்க்கும் போது... கையைக் கூட ஆட்டவில்லைன்னா... அவள் பாவம்... ஏங்கிப் போய்விட மாட்டாளா?"

"நீயும்... உன் வியாக்யானமும்... சகிக்க வில்லை..."

"உன்க்குச் சகிக்கா விட்டால் என்ன...? அவளுக்கு என் முகத்தைப் பார்க்குச் சகிக்குது போல..."

"எவளுக்கு...?"

"தோட்டத்தில் நின்று கொண்டு... என்னை சைட் அடிக்கிறாளே... அவளுக்கு..."

"எவடா... அவ...? கல்யாண மாப்பிள்ளையைப் போய் சைட் அடிக்கும் கருமாந்திரம் பிடிச்சவ..."

குணசேகரன் எதற்கும் இருக்கட்டுமென்று கல்யாண சுந்தரத்தின் முதுகிற்குப் பின்னால்... மறைவாக நின்று கொண்டு... ஜாக்கிரதையாய் எட்டிப் பார்த்தான்...

"அடப்பாவி... அந்தப் பெண்... இந்த வீட்டு வேலைக்காரம்மாவின் மகள்டா..."

"உனக்கெப்படித் தெரியும்...?"

"அறிவு கெட்டவனே... நீயும்... உன் குடும்பமும் வந்து இறங்கிய ரூமை... கூட்டிப் பெருக்கித் தயாராக வைத்திருந்தது இந்தப் பெண்தான்னு உன் மச்சினன் சொன்னானே... மறந்து விட்டதா...?"

"அப்பவே எப்படி இவளைப் பார்க்காமல் போனேன்...?"

"கல்யாணப் பெண்ணோட அண்ணன்காரன் முன்னால் வேசம் போட்டிருப்பாய்..."

"அது எதுக்கு தேவையில்லாம...? அவன் தண்ணி போடுவதைப் பத்தி என்கிட்ட ரகசியமாப் பேசிக்கிட்டு இருந்தானா... அந்த மிதப்பில் இவளைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன்..."

"என்னடா சொன்னே... தண்ணி போடுவதைப் பத்தி ரகுபதியா உன்னிடம் பேசினான்...?"

"ஆமாம்டா... எனக்குப் பெண்ணைக் கொடுக்கப் போகிற இளிச்சவாயன் பெத்த உத்தமபுத்திரன்தாக் பேசினான்..."

"கிழிஞ்சதுபோ... அவன் ஏற்கெனவே...கூடப் பிறந்தவளுக்குப் பண்ணுகிற கொடுமை போதாதா...? இன்னும் வேற செய்யணுமா? மணிவாசகத்தின் குடியைக் கெடுக்க வெளியில் இருந்து எவனும் வர வேண்டாம்... இவன் ஒருவனே போதும்..."

"அது அவர்களின் தலையெழுத்து... நமக்கென்ன வந்தது..."

கல்யாண சுந்தரத்தின் கண்கள்... வேட்டைநாயின் கண்கள் போல் திடீரென்று மின்னின... குணசேகரன் புரியாமல் தோட்டத்தைப் பார்த்தான்...

தோட்டத்தில் இருந்த பெண்கள் அனைவரும் போயிருக்க... அந்த வேலை செய்யும் பெண் மட்டும் தனியே

நின்றுகொண்டு... கல்யாண சுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

"அடக்கடவுளே... சும்மாவே இவனைப் பிடிக்க முடியாது... இப்ப... இவள் சிக்னல் வேறு கொடுக்கிறாளே..." குணசேகரன் கலவரம் அடைந்தான்.

"குணா... நீ இங்கேயே இரு... இதோ வந்து விடுகிறேன்..."

"டேய் கல்யாணம்... எங்கேடா போகிற...?"

"ஏன்... உனக்கு அது தெரியாதா...?"

"வேண்டாம்மா கல்யாணம்... விடிஞ்சா உனக்குக் கல்யாணம்... வினையை விலைக்கு வாங்காதே..."

"போடாபோ... அவளேள தைரியமாய்'வா..வா' ன்னு நிற்கிறாள்... போகாவிட்டால் நானென்ன ஆளு..."

"கருமம் பிடிச்சவனே... இது கல்யாண வீடுடா...?"

"அதுக்காக... வந்த வாய்ப்பை விடச் சொல்கிறாயா?"

"உன் நல்லதுக்குத்தான் சொல்கிறேன்... சொன்னால் கேளு..."

"நீயெல்லாம் சொல்லிக் கேட்கிற அளவுக்கு நான் தாழ்ந்து விட்டேனா...? நான் தூக்கி எறிகிற எச்சில் காசில் பிழைக்கிற நாய் நீ... நீயெல்லாம் எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாயா...? ஒழுங்காய்க் கையை விடு..."

சேர்வாரோடு சேரா விட்டால்... மரியாதை போகும் என்பதைத் தாமதமாய் உணர்ந்த குணசேகரனின் கை தானாய் வலகியது... கல்யாண சுந்தரம்... வெறிபித்த மிருகம்... அவன் கண் முன் வேட்டைப் பொருள் இருக்கும் போது... யார் தடுத்தாலும் அவள் நிற்க மாட்டான் என்பதை அறிந்திருந்தும்... அவனைத் தடுக்க நினைத்த தன் புத்தியை நொந்து கொண்டவனாய்... விலகி நின்றான்...

"இது... இந்தப் பயம் இருக்கட்டும்... இனியாவது உன் எல்லை எதுன்னு தெரிஞ்சு நடந்து கொள்..." கல்யாண சுந்தரம் அவசரமாய் மாடிப் படிகளில் தாவி இறங்கினான்...

தோட்டத்து இருள் மூளையில் நின்று கொண்டிருந்தவளின் அருகே சென்றவன்... போதை ததும்பிய குரலில்...

"ஏய்... உன் பெயர் என்ன...?" என்று கேட்டான்...

"இருளாயி..." என்றாள் அவள் மோகனமாய்...

"இருளாயி...? அதனால்தான் இருட்டுக்குள் நிற்கிறாயா..." அவன் கைகள்... அவள் தோவனைப் பற்றின... அவள் தடுக்கவில்லை...

"உங்களுக்கு நாளைக்குக் கல்யாணம்..." அவள் குழைந்தாள்...

"அதனால் என்ன... இப்போ... உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்..." அவன் அவளை ஆவேசமாய் அருகே இழுத்தான்...

அவர்கள்... தோட்டத்துச் செடி மறைவில் சரிய... அதன் மறுபக்கமிருந்து... முகமெல்லாம் வியர்க்க... அதிர்ச்சி கலந்த பார்வையுடன் வெளிப்பட்டாள் சாரதா... அவள்து இதயம் பலமாக அடித்துக் கொண்டிருந்தது... பேயைக் கண்டவள் போல் திகிலுடன் அவள் திருமண வீட்டை நோக்கி ஓட... அவளது கால் கொலுசின் ஒலி காதுகளில் விழுந்தும் அதைக் கண்டு கொள்ளாதவனாய்... மூர்க்கத்துடன் இருளாயியை ஆக்ரமித்தான் கல்யாண சுந்தரம்...

"யாரோ... ஓடுகிறாங்க போல இருக்கு..." இருளாயி முணுமுணுத்தாள்...

"யாராக இருந்தா நமக்கென்ன..."என்று கல்யாண சுந்தரம் அவளைப் பேச விடாமல் செய்தான்...

பரதனுடன்... முன்னறையில் நின்று பேசிக் கொண்டிருந்த பூபதி... பேய் துரத்துவது போல வேகமாய் ஒடி வந்த சாரதாவைப் பார்த்தும் பதறி விட்டான்...

"சாரதா... என்னம்மா...? ஏன் இப்படி ஓடி வருகிறாய்?" தங்கையின் தோள் பிடித்து அவன் கேட்க...

"அண்ணா... அங்கே... தோட்டத்தில்... செடி மறைவில்..." சாரதா பதில் பேச முடியாமல் விம்மி அழுதாள்...

"நீ இப்படி... உட்காரு..."

பூபதி... தங்கையை... மின்சார விசிறியின் கீழ் அமர வைத்துவிட்டு...

"பரதா... என்கூட வா... எதுவும் திருடன்... வந்து விட்டானான்னு பார்த்து விட்டு வரலாம்... இவள் எதையோ கண்டு பயந்து போய் ஓடி வந்திருக்கிறாள்..." என்று கூறியபடி தோட்டத்தை நோக்கி விரைந்தான்..

சாரதாவைக் கவலையுடன் பார்த்துவிட்டு... பூபதியின் பின்னால்... வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு ஓடினான் பரதன்... அவர்கள் செல்வதைக் கூடக் கவனிக்காமல்... தன் கைகளில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள் சாரதா...

பூபதியும்... பரதனும்... செடிமறைவினில் கண்ட காட்சி... அவர்களது இதயத்தை உலுக்கி எடுத்தது... தாங்கள் பார்க்கப் படுவதை அறியாதவர்களாய்... கல்யாணசுந்தரமும்... இருளாயியும் சரஸமாடிக் கொண்டிருந்தனர்...

"நீங்கள் இந்த வீட்டிக்கு மாப்பிள்ளையாகப் போகிறீங்க..."

"உனக்குதான் நான் மாப்பிள்ளை..."

"என்னதான் இருந்தாலும் நான் வேலைக்காரி.."

"இப்போது என்னுடைய வீட்டுக்காரி..."

அதற்கு மேல் அங்கே நிற்க முடியாதவனாய்ப் பூபதி வீட்டை நோக்கி விரைய... செய்சதறியாதவனாக... பரதனும் அவனைப் பின் தொடர்ந்தான்...

வீடு நிறைய ஆள்கள் இருந்தும்... யாருமற்ற அநாதைபோல... கைகயில் முகத்தைப் புதைக்துக் கொண்டு கதறிக் கொண்டிருந்த சாரதாவைப் பார்க்கையில்... பூபதியின் இதயத்தை இரும்புக் கை

கொண்ட ராட்சஸன் கசக்கிப் பிழிவது போன்ற வலியை உணர்ந்தான் அவன்.

"சாரதா... எழுந்திரு...."

"அண்ணா...!"

"யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்... இங்கே வா..."

பூபதி... தங்கையைப் பக்கத்தில்ருந்த அளைக்குள் அழைத்துக் கொண்டு சென்றான்... மூடிய கதவுகளுக்கு வெளியே பரதன்... குமுறும் மனத்தோடு நின்று கொண்டிருந்தான்.

"இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா...? இதைப் பார்த்த பின்பும்... எப்படி சாரதா அவனுக்குக் கழுத்தை நீட்டுவாள்...? வாழ் நாளெல்லாம் இதை நினைத்துத் துடித்துப் போய் விட மாட்டாளா...?" என்று இருந்தது அவனுக்கு...

மூடிய அறைக்குள் தங்கையின் முகம் பார்த்து நின்று கொண்டிருந்த பூபதியின் மனத்திலும் அதே நினைவுதான் ஓடிக் கொண்டிருந்தது... அழுது கொண்டிருந்த தங்கையை வேதனையோடு பார்த்தான் அவன்...

"சாரதா..."

"எனக்குச் செத்து விடவேண்டும் போல இருக்குண்ணா...!"

பதறிப் போய் தங்கையைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான் பூபதி... பிறந்ததில் இருந்து... அவன் தோளில் தலை சாய்ந்து வளர்ந்தவள்தான் சாரதா... ஆனால் அன்று அவள் தோள் சாய்ந்ததற்கும்... இன்று சாய்ந்து நிற்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்..!

9

அதுவரை அன்பாக... பாசமாக... பூபதியின் தோள் சாய்ந்த சாரதா... முதன் முதலாக ஆறுதலைத் தேடி அண்ணனின் தோள் சாய்ந்தாள்... அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது...

"நீ எதற்கும்மா சாக வேண்டும்...?"

"இந்த அயாக்கியனுக்குக் கழுத்தை நீட்டுவதற்க்குப் பதில் செத்துவிடலாம் அண்ணா... உயிரோடிருந்து இவனுக்கு பொண்டாட்டியாகச் சொல்கிறீங்களா...? ஒரு நாளும் என்னால் அது முடியாது..."

"நான் உன்னை அப்படி விட்டு விடமாட்டேன் சாரதா... என்னை நீ நம்பு..."

"இனி யாலை நம்பி எனக்கு என்ன ஆகப் போகிறது...? விந்தால் கல்யாணம்... இப்போது நான் என்ன செய்வேன் அண்ணா...? என் கண் முன்னால் இருக்கும் ஒரே வழி சாவு தான்... அதுதான் எனக்கு விடுதலையைத் தரும்..."

"திரும்பத்திரும்ப முட்டாள் போலப் பேசாதே... நான் இருக்கிறேன்ம்மா...?"

"உங்களால் இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியுமா, அண்ணா...?"

சாரதாவின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான் பூபதி...

உண்மைதான்...! இவ்வளவு தூரம் கல்யாணம் நெருங்கி வந்த பின்னால் திருமணத்தை நிறுத்த மணிவாசகம் ஒப்புக் கொள்ள மாட்டார்... கல்யாண சுந்தரத்தை கண்டித்து வைக்கலாம் என்பார்.. ஆண் பிள்ளைகள் கொஞ்சம் அப்படி... இப்படித்தான் இருப்பார்கள்... பெண்கள் பார்த்துத் திருத்தி விடலாம் என்பார்... இதையெல்லாம் வெளியில் சொல்வதே தப்பு என்று சாரதாவின் மேலேயே குற்றம் கண்டுபிடிப்பார்...

ரகுபதியோ... இன்னும் ஒரு படி மேலேபோய்... அப்படி ஒரு நிகழ்ச்சியே நடக்கவில்லையென்று சாதிப்பான்... சாரதா... கல்யாண சுந்தரத்தைத் தோட்டத்தில் பார்த்தாகக் கூறிய நேரத்தில் கல்யாண சுந்தரம் தன்னுடன் மெட்டை மாடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாகச் சாட்சி சொல்லுவான்... சம்பந்தப் பட்ட இருளாயி... கல்யாண

சுந்தரத்தைத் தான் பார்த்ததே இல்லையென்று ஆணித்தரமாய்க் கூறுவாள்...

மொத்தத்தில் சாரதா 'பொய்காரி' என்ற பழிதான் மிஞ்சும்... திருமணத்தைப் பிடிக்காமல் அதை நிறுத்தச் சாரதா திட்டம் போடுகிறாள் என்று தாண்டவராயன் குடும்பத்தில் தூற்றுவார்கள்... இன்னும் ஒரு படி மேலே போய்... சாரதாவின் மனதில் வேறு எவனோ இருக்கிறான்... அவனைத் திருமணம் பண்ணிக் கொள்ளத் திட்டமிட்டுத்தான் சாரதா இப்படி ஒரு பழியைக் தூக்கிக் கல்யாண சுந்தரத்தின் மீது போடுகிறாள் என்று சாரதாவின் நடத்தையின் மீதே சந்தேகப்பட வைத்து விடுவார்கள்...

யோசித்துக் கொண்டிருந்த பூபதியின் மூளையில் மின்னல் வெட்டியது போல்... அந்த யோசனை உதயமானது...

"வேறு ஒருவனுடன் கல்யாணம்...! அப்படிச் செய்து விட்டால்தான் என்ன...?"

அவன் தன் தோளில் பற்றுக் கோடாய்ப் படர்ந்திருக்கும் கொடிபோல்... வேரறுத்த நிலையில் சாய்ந்து நின்ற சாரதாவைத் தூக்கி... தள்ளி நிற்க வைத்தான்... அவள் நிற்க முடியாமல் தள்ளாட அங்கிருந்த கட்டிலில் அவளை அமரவைத்தான்... அறைக்கதவைத் திறந்தான்... பரதனை அழைத்தான்...

"பரதா... உள்ளே வா..."

"என்னையா... உள்ளே வரச்சொல்கிறீங்க...?"

பரதனின் கேள்வியில் வியப்புத் தொனித்தது...

"உன்னைத்தான்... உள்ளே வா..." பூபதியின் வார்த்தைகளில் அவசரம் தொனித்தது...

பூபதியின் அவசரம் கண்ட பரதன்... பதில் பேசாமல் அறைக்குள் வந்தான்... கதவை அடைத்த பூபதி... அந்த அறையிலிருந்த அலமாரியைத் திறந்தான்... ஒரு பொருளை எடுத்தான்... அதைப் பரதனின் கையில்

கொடுத்தான்... பூபதி கொடுத்த பொருளைக் கண்டதும்... மின்சாரம் பாய்ந்தவனைப் போலப் பரதன் பதறிவிட்டான்...

"ஐயா... என்ன இது...?"

"மாங்கல்யம் பரதா..."

"இதை எதுக்கு என் கையில் கொடுக்கிறீங்க...?"

"சாரதாவின் கழுத்தில் கட்ட..."

"என்னது...?"

ஒரே நேரத்தில் பரதனும்... சாரதாவும் இந்த வார்த்தையை அதிர்ச்சியுடன் வெளிப்படுத்தினார்கள்...

"அண்ணா...!"

"எனக்கு வேறு வழி தெரியவில்லை, சாரதா... நீ சொல்வதுபோல்... நடக்க இருக்கும் கல்யாணத்தை என்னால் நிறுத்த முடியாது. ஆனால்... உன்னை வேறு

ஒரு நல்ல மனிதனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து... இந்த ஊரை விட்டு அனுப்ப என்னால் முடியும்... இது மனிதர்கள் வாழும் வீடில்லைம்மா... வீண் பிடிவாதமும்... சுயநலமும் நிறைந்த ராட்சஸப் பிறவிகள் வாழும் வீடு... இந்த வீடு உனக்கு வேண்டாம்... நீ பரதனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அந்த வீட்டை விட்டுப் போய்விடு..."

"ஆனால் அண்ணா... தவறு செய்தவன் நியாயவாதி ஆகிவிடுவான்... ஒரு தவறும் செய்யாத என்னை... ஓடிப் போனவள் என்று இந்த ஊர் தூற்றுமே..."

"நீ தற்கொலைப் பண்ணிக் கொண்டாலும்... இந்த ஊர் அந்த வார்த்தையைத்தான் சொல்லும், அம்மா... அதற்கு உயிரோடு இருந்து... என்றைக்காவது ஒரு நாள் திரும்பி வந்து... உண்மை என்னவென்பதை இந்த ஊருக்குச் சொல்லு..."

"இதுவரைக்கும் ஒரு சொல் வரும்படி நான் நடந்து கொண்டது இல்லையே..."

"என்னம்மா செய்வது...? உனக்குப் போய் இப்படி ஒரு மிருகத்திற்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நிச்சயம் பண்ணி விட்டார்களே..."

"இருந்தாலும் அண்ணா..."

மறுக்காதே சாரதா... பரதன் நல்லவன்... அதிகம் படித்தவன்... உன்னைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவான்...

சாரதா மௌனமாகி விட்டதை உணர்ந்த பரதனின் உடலில் புது ரத்தம் பாய்ந்தது... அவன் சாரதாவைப் புதிதாகப் பார்த்தான்...

கொடி போன்ற உடலுடன்... நிலவு முகத்துடன்... வானத்தில்ருந்து அப்போதுதான் இறங்கி வந்த தேவதையைப் போல இருந்தாள் அவள்.

"இப்பேர்ப்பட்ட பெண்... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டாளா...? இவள்... எனக்கே... எனக்கா...?" பரதனால் நம்ப முடியவில்லை...

"பரதா..."

"ஐயா..."

"இதுவரை நான் உனக்குப் பார்த்துப் பார்த்து நிறையச் செய்திருக்கிறேன்... அதற்குப் பிரதி உபகாரமாக... இதை நீ செய்... சாரதாவின் கழுத்தில் தாலியைக் கட்டி... உன் மனைவியாக்கிக் கொண்டு... இந்த ஊரை விட்டுக் கூப்பிட்டுக் கொண்டு போய்விடு..."

"பிரதி உபகாரம் என்பதெல்லாம் பெரியவார்த்தை ஐயா... நன்றிக் கடனைக் கழிக்க நான் தால்யைக் கட்டுமளவிற்கு உங்கள் தங்கையின் மதிப்பு குறைந்து விடவில்லை... அவங்களின் இந்த நிலைமையில் இருந்து காப்பாற்றவே நான் இந்தத் தாலியைக் கட்டினாலும்... மனப்பூர்வமாகவே இதைக் கட்டுகிறேன்... அவங்களின்... குணமும்... அழகும்... நன்றிக் கடனைக் கழிக்க நான் தால் கட்டுவதால் குறைந்து போய்விடும்... வேண்டாம்... அந்த வார்த்தையைத்

திரும்பவும் சொல்லாதீர்கள்... இப்படி ஒரு குணவதி மனைவியாகக் கிடைக்க நான் பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும்... நீங்கள் எனக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள்... அவை அனைத்திலும் மகத்தானது... உங்கள் தங்கையை எனக்குப் பெண் கொடுப்பதுதான்..."

இதுபோன்ற வார்த்தைகளை இதற்கு முன்னால் கேட்டிராத சாரதா... அவனை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்... இருட்டில் விளக்கு வெளிச்சம் கண் முன்னால் தோன்றியதைப் போல அவளுக்கு இருந்தது...

'எப்பேர்ப்பட்டவன் இவன்...! பெண்மையை மதிப்பவன்... பூஜிப்பவன்... இவனின் கை பிடிக்க... எத்தனை சொல் வந்தாலும் அதைச் சந்தோசமாகக் தாங்கிக் கொள்ளலாமே... இவனுடன் வாழ்வதல்லவோ வாழ்க்கை...!

சாரதா எழுந்து நின்றாள்... பரதன் பூபதியைப் பார்க்க... அவன்... 'கட்டு... தாலியை...' என்பது போல் தலையை அசைத்தான்... பரதன் சாரதாவின் கழுத்தில் தாலியைக் கட்டும்போது... தன் பெற்றவர்களை நினைத்துக் கொண்டான்...

"அம்மா... அப்பா... ஒரு சிறந்த பெண்ணை என் வாழ்க்கைத் துணையாக அடைந்திருக்கிறேன்... எனக்கு வாழ்த்துச் சொல்லுங்கள்..."

பரதனும்... சாரதாவும் பூபதியின் பாதம் பணிந்து எழுந்தார்கள்... பூபதி... சாரதாவின் நகை அடங்கிய பெட்டியை அவளிடம் கொடுத்தான்...

"வேண்டாம்... ஐயா..." என்றான் பரதன்...

அவனது மறுப்பை எதிர் பார்த்திருந்த சாரதா... திருப்தியுடன் புன்னகைத்தபடி நகைப் பெட்டியைப் பூபதியிடம் திருப்பிக் கொடுத்தாள்.

"எனக்கும் இவை வேண்டாம், அண்ணா..."

"இவை உன்னுடைய நகைகள் சாரதாம்மா..."

"இல்லை ஐயா... உங்கள் தங்கையுடைய புன்னகையே எனக்குப் போதும்... பொன்னகை வேண்டாம்... இன்னும் அவங்க கழுத்தில் கையில் போட்டிருக்கிற நகைகளையும் வாங்கிக் கொள்ளுங்கள்... கட்டின புடவையோடு... நான் கட்டிய தாலியோடு என் பின்னால் அவங்க வந்தால் போதும்..." பரதன் தீர்மானமாய்ப் பேசினான்...

10

'இப்படியும் ஒருவன் இருக்கிறானே...'

பூபதிக்கு ஆச்சரியமாக இருந்தது... எளிமையான வாழ்க்கை வாழ்பவன்... சிக்கலான நிலைமையில் தயங்காமல் சாரதாவின் கழுத்தில் தாலியைக் கட்டியவன்... அவளுக்காக யார் கண்ணிலும் படாமல் ஊரைவிட்டு ஓட வேண்டிய நிர்பந்தத்தில் இருப்பவன்... சாரதாவிற்கான நகைகளை மறுக்கிறான்... கட்டின புடவையோடு கூட வந்தால் போதும் என்கிறான்...

"பரதா... நீ ஊரைவிட்டுப் போக வேண்டும்... இவர்கள் கண்ணில் படாமல் ஓடிவிட வேண்டும்..."

"தெரியும் ஐயா... நான் தோப்பு வீட்டிற்குப் போய் என் செர்டிபிகேட்களையும்... அப்பா... அம்மாவின் படத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும்... அதற்கு மட்டும் அவகாசம் இருக்குமாறு நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்... எனக்கு அது போதும்..."

"விடியும்வரை நான் சாரதா இங்கில்லாததை யாரும் தெரிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறேன்..."

"அதற்குள் நாங்கள் ஊரை விட்டு வெளியேறி விடுவோம்..."

"கொஞ்சம் பணத்தையாவது வாங்கிக் கொள் பரதா..."

"வேண்டாங்கைய்யா..."

"போகும் போது அவசரத் தேவை வந்தால் என்ன செய்வாய்...?"

"உழைத்துச் சம்பாதித்த பணம் கொஞ்சம் இருக்கிறது... அது போதும்..."

பரதன் பிடிவாதமாய்க் கூறிவிட்டு... கையில் இருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டுச் சாரதாவைப் பார்த்தான்... கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்த சாரதா கண் கலங்கினாள்...

"அண்ணா..." பூபதியின் தோள் சாய்ந்து விசும்பிய தங்கையை அணைத்து... தானும் கண்ணீர்விட்ட பூபதி... தன்னைத் தேற்றிக் கொண்டு தங்கைக்கு விடை கொடுத்தான்...

"போய் வா சாரதா... கண்ணுக்கு முன்னால் நீ கல்யாண சுந்தரத்தின் மனைவியாகச் சித்ரவதைப் படுவதைப் பார்த்துக் கொண்டு இருப்பதைவிட... கண் மறைவாய் நீ பரதனின் மனைவியாக நிம்மதியாக வாழ்கிறாய் என்ற எண்ணமே எனக்குப் போதும்... போய் வா..."

பூபதி... சாரதாவின் கைப்பிடித்துப் பரதனின் கையில் ஒப்படைத்தான்...

"பரதா... என் தங்கைதான் என் உயிர்..."

"இன்றிலிருந்து இவங்க என் உயிர்..."

பரதன்... தன் கைக்குள்ளிருந்த சாரதாவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்... சாரதாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தது... பூபதி... அறைக் கதவைத் திறந்து வெளியே பார்த்தான்...

"பரதா... முன் வாசல் பக்கம் நடமாட்டம் தெரியுது... அத்தோடு மொட்டை மாடியிலிருந்து முன் வாசலை நன்றாகப் பார்க்கலாம்... நீங்கள் பின்வாசல் பக்கம் போய் விடுங்கள்..."

அரண்மனை போன்ற அந்த வீட்டில் பிறந்த ஒரே மகள்... வீட்டில் வேலை செய்தவனின் கையைப் பிடித்துக் கொண்டு... எங்கே போகிறோம் என்று தெரியாமல்... அந்த வீட்டை விட்டு அகதிபோல் வெளியேறினாள்...

கன்னங்கரேலென்ற மையிருட்டு... பரதனுக்கும்... சாரதாவிற்கும் துணை செய்ய... அவர்கள் ஓட்டமும் நடையுமாகத் தோப்பை நோக்கி ஓடினார்கள்...

தோப்பு வீட்டின் கதவைத் திறந்து... விளக்கைப் போட்ட பரதன்... கதவைத் தாழிட்டான்... புரியாமல் பார்த்த சாரதாவின் கைப்பிடித்துக் கொண்டு... சங்கரன்... காமாட்சியின் படங்களின் முன்னால் கைகூப்பி நின்றான்...

'அம்மா... அப்பா... எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க..."

மகனின் குரல் கேட்டதும்... காமாட்சியின் படத்திலிருந்து ஒரு பூ உதிர்ந்து... சாரதாவின் மீது விழுந்தது... அவள் ஆச்சரியத்துடன் அதை எடுத்துக் கொண்டு பரதனைப் பார்க்க... அவன் புன்னகை செய்தான்...

"அம்மா உங்களை ஆசிர்வதிக்கிறாங்க..."

அவன் தன்னை மரியாதையுடன் அழைப்பதை உணர்ந்தவளுக்கு... அது என்னவோ போல் இருந்தது... ஆனால்... தன் எண்ணத்தை எப்படித் தெரியப்படுத்துவது என்று புரியாதவளாய் மௌனமாய் நின்றாள்... அவன் அவசரமாய் அவள் முன்னாலேயே பேன்ட்... சர்ட்டிற்கு மாறவும்... அவளுக்குச் சங்கடமாகி விட்டது...

"ஒரே நிமிடம்... நாம் கிளம்பி விடலாம்..."

அவன் காற்றை விட வேகமாகச் செயல்பட்டான்...

சொன்னபடி ஒரே நிமிடத்தில் அவனிடமிருந்த பெட்டியில் அவனுடைய துணிகளையும்... சான்றிதழ்களையும்... வேலை நியமன உத்தரவையும் அடுக்கிக் கொண்டன்... மேலாக அவனது பெற்றோர்களின் படத்தை... உடைந்துவிடாமல்... பழைய உடையொன்றில் சுற்றி எடுத்துவைத்தான்... அவனிடமிருந்த பணத்தை எண்ணி... செலவுக்குத் தேவையானதை பேன்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு... மீதியைப் பெட்டியில் துணிகளுக்கு அடியில் வைத்தான்... பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டான்...

"போகலாம். வாங்க..."

"கதவைப் பூட்டவில்லையா..."

"உங்கள் சின்ன அண்ணனுக்குப் பூட்டை உடைக்கும் வேலை மிச்சமாக இருக்கட்டுமே..."

அந்த நிலையிலும் அவனது பேச்சைக் கேட்டுச் சாரதாவிற்குச் சிரிப்பு வந்தது... கால்களில் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே வந்த பரதன்... அப்போதுதான்... சாரதா செருப்பில்லாமல் இருப்பதைக் கவனித்தான்...

"செருப்பு போடவில்லையா...?"

"எப்படி போட முடியும்...? அதைப் போட்டால் நான் எங்கே போகிறேனென்று கேட்க மாட்டாங்களா...?"

"ஓ... இந்தப் பாதையில் முள் இருக்குமே..."

"பரவாயில்லை..."

"அப்படி எளிதாக நினைத்துவிடக் கூடாது..."

பரதன்... வீட்டைச் சுற்றிப் பார்த்தான்... காமாட்சி உபயோகப்படுத்திய பழைய செருப்பு அவன் கண்ணில்பட்டது..

"இது என் அம்மாவின் செருப்பு... போட்டுக்கங்க..."

"இல்லை... வேண்டாம்.."

"பழையதுன்னு நினைக்கறீங்களா..."

"அப்படி நினைப்பேனா... இது பெரியவங்க போட்ட செருப்பு.. அதை மரியாதையில்லாமல் நான் போடலாமா..?"

பரதன் நெகிழ்ந்துவிட்டான்.. இதைவிடப் பெரும் பேறு தனக்குக் கிடைக்காது என்று அவளுக்குத் தோன்றியது...

"அம்மா... உங்க மருமகள் சொல்வதைக் கேட்டிங்களா..."

"இப்ப நீங்க வெறும் காலில் நடந்து முள் குத்தி விட்டால்தான் என் அம்மாவின் மனம் சங்கடப்படும்...

தெய்வமாய்ப் போய்விட்ட அவங்களின் மனதைச் சங்கடப்பட வைக்கப்பட வைக்கப் போறீங்களா...?"

சாரதா அவசரமாய் அந்தச் செருப்பைப் போட்டுக் கொண்டாள்... அவள் கால்களுக்குச் செருப்பு பெரிதாக இருந்தது.

"சேரவில்லையா...?"

"பரவாயில்லை..."

"அவசரத்திற்கு இதைப் போட்டுக்கங்க..."

பரதன் அவளது கைப்பிடித்து இழுத்துக் கொண்டு பெட்டியுடன் ஒற்றையடிப் பாதையில் வேகமாய் நடந்தான்... சாரதாவிற்கு நடந்து பழக்கமில்லாததால் அவள் தடுமாறி நின்றாள்...

"இன்னும் கொஞ்ச தூரம்தான்..."

"எங்கே போகிறோம்...?"

"மெயின் ரோட்டிற்கு..."

"அங்கே போய் பஸ்ஸிற்குக் காத்திருக்க வேண்டமா...?"

"முதல் பஸ் விடியற்காலை ஏழுமணிக்கு வரும்... அதுவரை நாம்... மெயின் ரோட்டில் உட்கார்ந்திருந்தால் பிடிபட்டு விடுவோம்..."

"ஐயையோ..."

"பயப்படாதீங்க... நான் வேறு வழி யோசித்திருக்கிறேன்..."

சாரதா... என்ன வழியென்று கேட்கவில்லை... அவளுக்குப் பரதனின் மேல் நம்பிக்கை இருந்தது... பதில் பேசாமல்... அவன் பின்னால் சென்றாள்... அவர்கள் மெயின் ரோட்டிலிருந்த டீக்கடையை அடைந்தார்கள்...

"சாரதா..."

முதன் முதலாகத் தன் பெயரைச் சொல்லி அழைக்கிறான்... அவள் மேனி சிலிர்க்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இங்கேயே நில்லுங்க... இதோ வந்து விடுகிறேன்..."

"என்னைத் தனியாகவா விட்டு விட்டுப் போகிறீங்க...?"

"அப்படிப் போவேனா...? அந்த டீக்கடைக்குள் என் சைக்கிள் இருக்கிறது... எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்... பயம் வேண்டாம்... நீங்க என் கண் பார்வையில்தான் இருப்பீங்க..."

பரதன் இதமாய் புன்னைகத்தான்... சாரதா நிம்மதியுடன் நின்றாள்... அவளைப் பார்த்துக் கொண்டே தூங்கிக் கொண்டிருந்த டீக்கடைக்காரனை எழுப்பினான் பரதன்.

"யாருப்பா அது... இந்த வேளை கெட்ட வேளையில் எல்லாம் டீ போட முடியாது... போய்விட்டு வா..."

"அண்ணே... நான் பரதன் அண்ணே..."

"பரதனா... என்னப்பா இது... நடுராத்திப் பொழுதில இந்தப் பக்கம் வந்திருக்கிற... என்ன விசயம்...?"

"என் சைக்கிளை எடுத்துக் கொள்கிறேன்..."

"எதுக்குப்பா... நீ கல்யாண வீட்டில் வேலையாய் அலைஞ்ச பயலாச்சே... இந்தப் பக்கம் எங்கே வந்தே...?"

"கல்யாண வீட்டு வேலைகளைக் கால்நடையாய் எப்படிப் பார்க்கிறது...? அதுதான் சைக்களில் பறந்து வேலை பார்க்கலாமுன்னு சைக்கிளை எடுத்துக் கொள்ள வந்தேன்..."

"இதைப் பாருடா... அவங்களே உன்னை மனுசப் பிறவியாய் நினைக்காமல்... கால்நடையாய்த்தான் நினைக்கிறானுங்க... அது தெரியுமா உனக்கு...?"

டீக்கடைக்காரன் எழுந்து... பரதனின் சைக்கிளை எடுத்துக் கொடுத்துவிட்டு... மீண்டும் படுத்துத் தூங்க ஆரம்பித்தான்...

அவன் தூங்கி விட்டதை உறுதிப் படுத்திக் கொண்ட பரதன்... சாரதாவின் அருகே சைக்கிளோடு வந்தான்...

பின்பக்க கேரியரில் பெட்டியை வைத்துக் கட்டியவன்... முன் பக்கத்தைக் காட்டி...

"ஏறிக்கங்க..."என்றான்...

"இங்கேயா...?" சாரதா தயங்கினாள்...

"என் கண் முன்னால் நீங்கள் இருக்கவேண்டும்... இல்லாவிட்டால் நிம்மதியாய் என்னால் சைக்கிள் ஓட்ட முடியாது..."

சாரதா தயக்கத்துடன் முன் பக்கக் கம்பியில் ஏறி அமர்ந்துகொள்ள... அவளது இருபக்கமும் அணைத்துப் பிடித்துப் பிடித்தபடி பரதன் சைக்கிளை ஓட்ட ஆரம்பித்தான்...

அவளின் தலையில் சூடியிந்த மல்லிகையின் மணம் அவனது நாசிக்கு வெகு அருகில் இருக்க... உரிமையுடன் அதை முகர்ந்தவனின் மனம் உல்லாச வானில் சிறகடித்தது...

அவனது வலிமையான கரங்கள் தனக்கு அரணாக இருபக்கமும் பாதுகாப்பதை உணர்ந்த சாரதாவின் மனம்... அவனது ஆண்மையின் ஆளுமையில் ஆகர்ஷிக்கப் பட்டது... அவள் மனம் பரவசம் கொண்டது...

அன்று இரவு வரை... ஒருவர் வாழ்வில் ஒருவர் குறுக்கிடப் போவதை அறியாமல் நடமாடிக் கொண்டிருந்த அந்த இருவரும்... இன்று ஒன்றுபட்ட மனத்தோடு... வாழ்வைத் தேடிப் பயணத்தை ஆரம்பித்திருந்தனர்...

11

அந்த இரவின் அமைதியில் ஆள் நடமாட்டமே இல்லாத அந்தச் சாலையில்... சைக்கிள் வரைந்து கொண்டிருந்தது... சாரதா... கண் மூடி அந்தப் பயணத்தை ரசித்தாள்... சற்றமுன் அவள் மனதில் குடி கொண்டிருந்த சஞ்சலம் மறைந்து போனது போல இருந்தது... தூரத்தில் ரயில் நிலையம் தெரிந்தது... அதன் அருகினில் போய் சைக்கிளை நிறுத்தினான் பரதன்...

"வாங்க..."

"டிரெயினில் போகப் போகிறோமா...?"

"ஆமாம்..."

அவன் ஸ்டேசன் மாஸ்டரிடம் சென்று... அடுத்த ரயில் எப்போது வரும் என்று விசாரித்தான்... அவர் அவர்கள் இருவரையும் ஒருமார்க்கமாகப் பார்த்தவாறு... அவன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல்...

"என்ன... காதலா...? ஊரைவிட்டு ஓடிப் போகப் போகிறீங்களா...?"என்று விசாரித்தார்...

"பொண்டாட்டியோடு ஊருக்குப் போகிறேன் சார்..."

பரதன் முறைத்தான்..

சாரதாவின் கழுத்தில் இருந்த தாலியைப் பார்த்து விட்டு வாயை மூடிக் கொண்ட ஸ்டேசன் மாஸ்டர்...

"அடுத்த ரயில் ஐந்து நிமிடத்தில் வந்துவிட்டு... சென்னைக்குப் கோகும் ரயில் அது... நீங்க... சென்னைக்கா போகிறீங்க...?" என்று துணைக் கேள்வி கேட்டார்...

"ஆமாம்... சென்னைக்கு இரண்டு டிக்கெட் கொடுங்க...

"ரயில் வரவும்... சாரதாவுடன் ஏறி அமர்ந்தான் பரதன்... அவனது சைக்கிள்... ரயில் நிலையத்தின் வெயியே

அநாதையாய் நின்றது... அதைப் பார்த்தவனின் மனம் வலித்தது...

"முதன் முதலாய் நான் என் சம்பளத்தில் வாங்கிய சைக்கிள்..."

அவனது நினைவை அவனது முகம் பிரதிபலிக்க... சாரதா இரக்கத்துடன் வினவினாள்...

"சைக்கிள் தனியாய் நிற்குது இல்லை..."

அவள் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள்... என்ற நினைவில் பரதன் மென்மையாய் முறுவலித்தான்...

"ஆனால்... நான் தனியாய் இல்லையே... உங்களுடன் சேர்ந்து இருக்கிறேனே..."

சாரதா முகம் சிவக்க... ஜன்னல் வழி... புள்ளியாய் மடிறயும் ஊர்களை வெறித்துப் பார்த்தாள்... பிறந்த ஊரைவிட்டுப் பிரியும் வேதனை அவள் மனதில் குடிகொண்டிது... அதை உணர்ந்தவனாய்... பரதன்...

"அது எனக்கும் பிறந்த ஊர்தான்..." என்று கூறினான்..."

சாரதா உதடுகடித்து... பதில் கூறாமல் மௌனித்தாள்... அடுத்த நிலையத்தில் அவர்களுக்கு அருகே வயதான தம்பதிகள் வந்து அமரவும்... பரதன் சாரதாவின் அருகே நகர்ந்து அமர்ந்தான்... சாரதாவிற்கு... ஊரைவிட்டுப் போவது மறந்துவிட்டது...

"குளிரடிக்குதா..." அவன் இதமாய் வினவ...

"இல்லை..." என்று தலை அசைத்தாள் அவள்...

விழுப்புரத்தில் அவன் எழுந்து கொள்ள... அவள் வியப்புடன் அவனைப் பின் தொடர்ந்தாள்... ரயில் நிலையத்தில் அவள் இறங்க... கை கொடுத்தவன்... அவளது முகத்தில் தெரிந்த கேள்வியைக் கண்டு... புருவம் உயர்த்தினான்...

"நாம் சென்னைக்குப் போகவில்லையா...?"

"இல்லை... நாம் எங்கே போயிருக்கிறோமென்று உங்கள் வீட்டில் இருப்பவங்களுக்குத் தெரிந்து விடக் கூடாது... அதனால் போக்குக் காட்டினேன்.. அத்தோடு... ஒரு பெரிய ஊருக்கு நாம் வந்து சேர வேண்டும்... இப்போது அவர்கள் சென்னைக்குப் போய்த்தான் நம்மைத் தேடுவார்கள்... நாமும்... நாம் போக வேண்டிய ஊருக்குப் போய்விடலாம்..."

"எந்த ஊருக்குப் போக வேண்டும்...? என்று சாரதா கேட்கவில்லை... பரதன்... அவளை ரயில் நிலையத்தில் இருந்த சாய்வான மர பெஞ்சில் அமரவைத்துவிட்டு... டிக்கெட் எடுக்கச் சென்றான்... திரும்பி வரும்போது... இரண்டு காகிதத் தட்டுக்களில் இட்லியையும்... சட்னியையும் கொண்டுவந்தான்..."

"என்ன இது...?"

"பார்த்தால் தெரியவில்லையா...? இட்லி..."

"பெரிய கண்டுபிடிப்புத்தான்... இது எதற்கு இப்போது...?"

"சாப்பிடத்தான்... வேறு எதற்கு...?"

"எனக்குப் பசிக்கவில்லை..."

"எனக்குப் பசிக்கிறதே... இப்போது மணி இரண்டு... இதுவரை வெறும் வயிற்றோடு ஓடி வந்திருக்கிறோம்... இனியும் ஓடத் தெம்பு வேண்டாமா...?"

பரதனின் சாதுர்யமான பேச்சைக் கேட்டுச் சாரதாவின் முகத்தில் மென்னகை வந்தது... அவள் இட்லியை வாங்கிக் கொண்டாள்... சாப்பிட்டு முடித்ததும்... எங்கே போடுவது என்று பேப்பர் தட்டுடன் அவள் திகைக்க...

"இங்கே வாங்க..." என்று குப்பைக் கூடையின் அருகே சென்றான் பரதன்...

ரயில் நிலையக் குழாயில் கை கழுவி... முகம் கழுவியவளிடம் கைக்குட்டையை நீட்டினான்...

"முகத்தைத் துடைத்துக்கங்க..."

அவள் தயக்கத்துடன் வாங்கி முகம் துடைத்துக் கொண்டாள்... அவளை அமர வைத்து விட்டுப் போனவன்... இரண்டு கப் காப்பியுடன் வந்தான்... சூடான காப்பி தொண்டையில் இதமாக இறங்குவதை அனுபவித்தவளுக்கு... அவன் பார்த்துப் பார்த்துத் தன்னைக் கவனித்துக் கொண்டது இதமாக இருந்தது...

"நம்ம டிரெயின் வந்து விட்டது.. வாங்க போகலாம்..."

எங்கே போகிறோம் என்பதை அறியாதவளாய்.. அவள் அவன் கைப் பிடித்து ரயிலில் ஏரினாள்... அவர்களது பெட்டியை வைத்து அவளைப் படுத்துக் கொள்ளச் சொன்னான... அவள் மறுத்தாள்.

"ஏன்...?"

"தூக்கம் வரவில்லை..."

"வராவிட்டாலும் பரவாயில்லை... பெட்டியில் தலை வைத்து கால் நீட்டிப் படுங்க... சோர்வு இருக்காது..."

"நீங்க...?"

"நான் இந்த சீட்டில் படுத்துக் கொள்வேன்..."

பரதன் அவளைப் பார்த்தபடி... படுத்துக் கொள்ள... சாரதா அவன் பக்கம் திரும்பி... அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"பயமாய் இல்லையா...?"

"எதற்கு பயம்?"

"இவனை நம்பி இவன் பின்னால் வந்து விட்டோமே... இவன் நம்மை எப்படி வைத்துக் காப்பாற்று வானோன்னுதான்..."

சாரதா புன்னகைத்தாள்... அவள் புன்னகைக்கும் போது தெரிந்த வரிசைப் பற்களின் வசீகரத்தில் மயங்கிப் போனான் பரதன்...

"இவள்தான் எத்தனை அழகாக இருக்கிறாள்...!"

"என்னைப் பத்திரமாய் நீங்கள் காப்பாற்றிக் கொண்டு வந்து விட்டதைத்தான் கண்கூடாய்ப் பார்த்துக் கொண்டு இருக்கிறேனே..."

"ஊஹும்... உங்களுக்காக உங்கள் சின்ன அண்ணனுடன் டிஷ்யூம்... டிஷ்யூம் என்று சண்டையா போட்டேன்...?"

"உங்களுக்கு இணையாகச் சண்டை போட அவரால் முடியுமா என்ன...?"

"பரவாயில்லையே... எனக்காக... உங்கள் அண்ணனையே குறை சொல்கிறீங்களே..."

"குறை யெல்லாம் சொல்லவில்லை... உண்மையைத்தான் சொன்னேன்... நீங்கள்தான்... அவருடன் சண்டை போடமலேயே போக்குக் காட்டிவிட்டுத் தப்பித்து விட்டீர்களே..."

"ஆயிரம்தான் இருந்தாலும்... அவர் என் முதலாளியில்லையா...?"

சாரதாவிற்கு... பரதன் கூறியது பிடிக்கவில்லை... அவள் பேசாமல் இருந்தாள்...

"என்ன பேச்சைக் காணோம்...? தூக்கம் வருகிறதா...?"

"இன்னும் என் அண்ணன் உங்களுக்கு முதலாளி மட்டும்தானா?"

அவள் 'இன்னும்...' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுக்கவும்... அதை உணர்ந்து கொண்டவனாய்ப் பரதன் சிரித்தான்...

கருமையான நிறத்தில்.. செதுக்கி வைத்த சிற்பம் போல இருந்தவனின் முகத்தில் வெண்மையான கீற்றாய் அந்தப் புன்னகை ஒளிர்ந்தது... அவள் அதை வியப்பிடன் பார்த்தாள்..

கருப்பு நிறம் அழகானது இல்லை என்று யார் சொன்னது? இதோ... எதிரே வரிசைப் பற்கள் தெரியச் சிரிக்கும் இவனது முகத் தோற்றம் ரேமானியச்

சிற்பத்தைப் போல இருக்கிறதே... செதுக்கிய முகமும்... ஆறடி உயரமும்... அளவான உடவலமைப்பும் கொண்ட களையான வடிவத்துடன் எதிரே படித்திருக்கும் இவன் அடிகிற்கு நிகர் உண்டோ...?

சாரதா அவனது அழகில் மயங்கினாள்... சற்றுமுன்வரை சம்பந்தம் இல்லாத வேலையாளாக இருந்தவன்... இப்போது எப்படி அவளுக்கு எல்லாமுமாக ஆகிப் போனான்... என்று நினைத்துப் பார்க்கையில் அவளுக்கு விந்தையாக இருந்ததது... இதுதான் இறைவனின் சித்தம் போல என்று எண்ணிக் கொண்ட அவனைப் பார்த்தாள்....

அப்போது அவனும்... அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவன் முகத்தில் கனிவு இருந்தது... காதல் இருந்தது... கடமை இருந்தது... கருணை இருந்தது...

"ஏன் அப்படிப் பார்க்கறீங்க...? அவள் முகம் சிவந்தாள்..."

அவளுடைய அந்த உரிமையான சிணுங்கலில் அவன் மனதில் தென்றல் அடித்தது... ரயில்ன் மெதுவான ஆட்டம்... அவர்களைத் தாலாட்டியது... அழகான அந்தப் பின்னிரவுப் பொழுதில்... புதிய வாழ்க்கையைத் துவக்கப் போய்க் கொண்டிருந்த அந்தப் பயணத்தை மிகவும் ரசித்தான் பரதன்...

"ஏன்... பார்க்கக் கூடக் கூடாதா...?"

அவன் வார்த்தைகளில்... 'எனக்கு அந்த உரிமையில்லையா?' என்ற கேள்வி மறைமுகமாய் ஒலித்தது.

"பார்க்கலாம்... பார்க்கலாம்.. நீங்கள் பார்க்காமல் வேறு யார் பார்ப்பது...?"

சாரதா சட்டென்று பதில் சொல்லவும்... பரதனின் கண்கள் மின்னின... அவன் மனதில் இனம் புரியாத கிளர்ச்சி தோன்றியது... அவன் அவளை... அன்றுதான் பார்த்தது போல் புதிதாகப் பார்த்தான்...

"இவள் என்னுடையவள்... இவள் அழகு எனக்காக மட்டும்... இவளை நான் மட்டுமே பார்த்து ரசிக்கலாம்... இன்னும் தொட்டு ஆளாலாம்..."

நினைக்கும் போதே அவனது நெஞ்சம் இனித்தது. அவளைப் பெயர் சொல்லி அழைத்தான்...

தன் பெயர் சொல்லி அழைத்தவனை உள்ளம் துள்ள அவள் ஏறிட்டாள்... அவள் விழிகளில் தெரிந்த ஒளியில் அவன் தன்னை இழந்தான்... ஒரு கோடிச் சூரியன்கள் ஒன்று சேர்ந்து ஜொலிப்பதைப் போன்றதொரு பிரகாசம் சாரதாவின் முகத்தில் தென்பட்டது.

12

"இப்போதுதான் என் பெயர் தெரிந்ததா...?"

அவள் பொய் கோபத்துடன் வினவ... அவன் கடகடவென்று சிரித்தான்...

"இப்போதுதான் பெயர் சொல்லி அழைக்கும் உரிமை வந்தது..."

"ஓ... அப்படியா...? எனக்கு ஒன்றும் புரியவில்லை..."

"என்ன புரியவில்லை...?"

"அப்படி என்ன உரிமை வந்திருக்கிறதுன்னு புரியவில்லை..."

"ஊஹும்...? உங்கள் கழுத்தைத் தொட்டுப் பாருங்களேன்... தெரிந்து விடும்..."

"என்ன தெரிந்துவிடும்...?"

"எந்த உரிடையில் என் கைப்பிடித்து... உங்கள் சொந்த பந்தம்... ஊர்... எல்லாவற்றையும் விட்டுவிட்டு... என் பின்னால் வந்தீர்களென்று தெரிந்து விடும்..."

ஊரையும்... உறவையும்... அவன் நினைவுபடுத்தி விட்டதில்... சாரதாவின் முகம் வாடிவிட்டது... அவளது

உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாய்ப் பரதன்... மௌனமானான்...

"ஒரே நாள் இரவில்... என் வீட்டிற்கும் எனக்கும் உள்ள சன்பந்தம் அறுந்து விட்டது, இல்லையா...?" சாரதாவின் குரலில் எல்லையற்ற துயரம் மண்டிக்கிடந்தது...

இதற்கு என்ன பதில் சொல்வது...? இவளை இந்தத் துயரக் கடலில் மூழக விடாமல் எப்படித்தடுப்பது...?

பரதன் அவளை ஆழகாகப் பார்த்தான்... கண் கலங்கிப் பேசிக் கொண்டிருந்தவள்... அவனது பார்வை கண்டு பேச்சை நிறுத்தினாள்...

"எப்படி இருந்தாலும் சாரதா நீங்கள் உங்கள் வீட்டை விட்டுப் பிரிந்துதானே ஆக வேண்டும்...?"

பரதனின் கேள்வியில் பொதிந்திருந்த பொருள் சாரதாவிற்குப் புரிந்தது... கல்யாண சுந்தரத்தின் தாலி கழுத்தில் ஏறியிருந்தாலும்... அவள்... பிறந்த வீட்டை வீட்டுப் பிரிந்துதானே ஆகவேண்டும் என்று சொல்கிறான்...

"உண்மைதான்..." சாரதா முணுமுணுத்தாள்...

"என்ன ஒன்று... உங்கள் பிறந்த வீட்டிற்கு அடிக்கடி நீங்கள் வந்து போயிருக்கலாம்... இப்போது ஒரேயடியாய்... அந்த உறவு அறுந்துபோய் விட்டதுன்னு நினைக்கும்போது மனதிற்கு கஷ்டமாகத்தான் இருக்கும்..." பரதன் உணர்ச்சி களைத் துடைத்த குரலில் கூறினான்...

சாரதா சட்டென்று அவன் முகம் பார்த்தாள்... அவள் மனம் விழித்துக் கொண்டது... தனக்காக நள்ளிரவில்... ஊரை விட்டு ஓடி வந்து கொண்டிருப்பவனின் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்று நொந்து போனாள்...

பரதன் இப்போது பேசாமல் அந்தப் பக்கம் திரும்பிக் கண்களை மூடிக் கொண்டாள்... அழகான நாதத்தின் இடையே அபஸ்வரம் ஒலித்துவிட்டதை உணர்ந்த சாரதா... எப்படி அவனைத் தன் பக்கம் திருப்பிப் பேசச் செய்வது என்று புரியாமல்... தவித்துக் கொண்டிருந்தாள்...

"என்னங்க..."மெதுவான குரலில் அழைத்தாள் சாரதா... பரதன் விழித்துக் கொண்டான்... அவள் பக்கம் ஆச்சரியத்துடன் திரும்பி...

"என்னையா கூப்பிட்டிங்க...?" என்று வினவினான்...

"உங்களைக் கூப்பிடாமல் வேறு யாரைக் கூப்பிடுவேன்..." சாரதா... ஸ்வரத்தின் நாடியைப் பிடித்து விட்டாள்...

"ஓ... இது... இப்படியா... பரதன் முகம் ஒளிர அவள் பக்கம் பழையபடி திரும்பிப் படுத்தான்..."

சரியாகிவிட்டான்...! மனதிற்குள் நிம்மதியாய் உணர்ந்த சாரதா... மெலிதாய்ப் புன்னகைத்தாள்...

"ஆமாம்... என்பெயர் என்ன... 'என்னங்க...'வா...?"

அவன் கேலியாக நகைத்தான்...

"பின்னே...உங்கள எப்படிப் கூப்பிடுவதாம்..."

"ஏன்..? பரதன்னு பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது..."

"நன்றாயிருக்கிறதே...?"

"என் பெயர் நன்றாய் இருக்குன்னுதான் எல்லோரும் சொல்கிறாங்க"

"நான் அதைச் சொல்லவில்லை..."

"வேறு எதைச் சொல்கிறீங்க...?"

"நீங்கள்தான் விபரமில்லாமல்... என்னை வாங்க... போங்கன்னு கூப்பிடுகிறீங்கன்னா... நானும் உங்களை அப்படியே கூப்பிடுவதா...?"

பரதனின் முகம் இப்போது பூவாய் மலர்ந்து விட்டது... தனி மரமாய் வாழ்ந்தவன்... கொடி மலரின் உறவு கண்டு நெகிழ்ந்தான்...

"சாரதா"

"ம்ம்ம்..."

"என்னைப் பிடித்திருக்கிறதா...?"

"உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா...?"

"உன்னைப் போய் யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்...?"

"நான் உங்களுக்குப் பிடித்திருக்கிறதான்னுதான் கேட்டேன்...ஊரைப் பற்றிப் பேசவில்லை..."

"ஹா ஹா..."

"இப்போது எதற்கு இந்தச் சிரிப்பு...?"

"இதுவரைக்கும்.. அதாவது என் அப்பா அம்மா போன பின்னால்... எனக்குச் சிரிப்பு மறந்துபோயிருந்தது..."

எதிரேயிருப்பவன் தாய்... தந்தையற்ற அநாதை என்ற உணர்வில் சாரதாவின் உள்ளம் நெகிழ்ந்தது... அவள் மனதில் தாய்மை உணர்வு பெருக்கெடுத்தது...

"இனித்தான் நான் வந்துவிட்டேனே..."

அந்த ஒரு வார்த்தைக்குத்தான் எத்தனை சக்தி...! 'இனி உனக்கு அனைத்துமாக நானிருப்பேன்... நான் வந்து விட்டபின்னால்... நீ இப்படி வருந்தலாமா...' என்று அவனைப் பார்வையால் வருடி அமைதிப்படுத்தும் அன்னையின் மடியல்லவோ... அவளது அன்பு...

"யாதுமாகி நின்றாய்...' என்ன மாதிரியான வார்த்தைப் பிரயோகம் இது... பாரதியின் உணர்வில் திளைத்து வந்த கவி வரியல்லவா இது..."

அந்த நொடியில் சாரதா... அவனுக்கு அனைத்துமாக ஆகிப் போனாள்... அவளில்லாத வாழ்வையா தான் இத்தனை நாள் வாழ்ந்தோம் என்று தோன்றியது.

ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தாலும்... ஒருவரை ஒருவர் ஏறிட்டுக் கூடப் பார்த்திராத அந்த இருவரும்... இன்று ஒருவர் முகத்திலிருந்து மற்றொருவர் விழியகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்...

"ஒரு பெண்ணைப் பார்த்து...

நிலவைப் பார்த்தேன்..

நிலவில் ஒளியில்லை..

அவள் கண்ணைப் பார்த்து...

மலரைப் பார்த்தேன்...

மலரில் அழகில்லை...

அவளிளல்லாமல் நானில்லை...

நானில்லாமல் அவளில்லை..."

பரதன் வாய்விட்டுப் பாடினான்... பெற்றவர்களையும் கூடப் பிறந்தவர்களையும்... ஊரையும் விட்டுவிட்டு... ஓடி வந்திருந்தால்... மனதில் ஓர் மூலையில் சோகம் கொண்டிருந்த சாரதா... அதை மறந்தவளாய் அவனை விழிவிரியப் பார்த்தாள்.

"நீங்க பாடடெல்லாம் பாடுவீங்களா...?"

"விவசாயி பெற்ற மகன்... விவசாய வேலைகள் செய்தவன்... எனக்குப் பாட்டு வராதா...?"

"விவசாயத்திற்கும்... பாட்டிற்க்கும் என்ன சம்பந்தம்...?"

"வேலையாள்களிடம் விவசாயத்தை விட்டுவிட்டு... வீட்டுக்குள் அடைந்து கிடந்தால்... இப்படித்தான் கேட்கத் தோன்றும்..."

"தெரியாமல் கேட்டுவிட்டேன்... வேண்டுமானால் கன்னத்தில் ஒன்று போட்டுக் கொள்ளவா...?"

"வேண்டாம்... வலிக்கும்..."

"எனக்குத்தானே வல்க்கப் போகிறது...?"

"உனக்கு வலித்தால்... உன்னை விடப் பத்து மடங்கு அதிகமாக எனக்கு வலிக்குமே..."

"ஹ... செம டயலாக்... இதையெல்லாம் கூடத் தெரிஞ்சு வைச்சிருக்கிறீங்களா...? உங்களுக்கு இப்படியெல்லாம் கூடப் பேச வருமா...? இந்தப் பூனையும் பால்குடிக்குமான்னு

ஊமைச் சாமியார் போல இத்தனை நாள் வேசம் போட்டு விட்டு... இப்பச் சமயம் பார்த்து போட்டுத் தாக்கறீங்களே..."

"இதோ பார், சாரதா..."

" பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்..."

"என்னை என்ன வேண்மானாலும் சொல்லு... ஆனால் சாமியார்ன்னு மட்டும் சொல்லாதே... இப்போது தான் உன் கழுத்தில் தாலியைக் கட்டிச் சம்சாரி ஆகியிருக்கிறேன்.. இனி மேல்பட்டு சாமியாராகப் போக என்னால் முடியாது..."

"ஐயோ சாமி... நான் அப்படியா சொன்னேன்..?"

"வேறு எப்படிச் சொன்னாலும்... சாமியாராக மட்டும் போகச் சொல்லாதே..."

"ஏங்க... உங்களை நம்பிப் பின்னால் வந்திருக்கிறேன்... இப்படிச் சாமியார்... அது இதுன்னு பயமுறுத்தலாமா...? நான் இப்ப என்ன கேட்டேன்... விவசாயத்திற்கும்... பாட்டிற்கும் என்ன சம்பந்த முன்னுதானே கேட்டேன்... அதற்குப் பதில் சொல்லாமல் வேறு எதையோ பேசுகிறீங்களே..."

சாரதாவின் விழிகளில் உண்மையாகவே கலக்கம் தெரிய பரதன் அவசரமாய் அவளைச் சமாதானப்படுத்தும் விதத்தில் பேசினான்...

"அடடா... உன்னைப் புத்திசாலின்னுல்ல நினைத்தேன்.."

"ஏன்... அந்த நினைப்பிறகு இப்போது என்ன குறை வந்துவிட்டதாம்... இப்போது மட்டும் மக்காக ஆகி விட்டேனா...?"

"உன்னைப் போய் அப்படிச் சொல்வேனா...? விளைய்hட்டுப்பேச்சுக்கெள்ளாட் பயப்படலாமா...? விவசாய வேலைகள் செய்யும்போது பாடிக் கொண்டே செய்வோம்... நான் அதைச் சொன்னேன்..."

"எனக்கென்று இப்போது இருப்பது நீங்கள் மட்டும் தான்... என் வாழ்வின் கடைசி வினாடி வரை உங்கள் நிழலில் வாழ

வேண்டும்... அது முடியாவிட்டால்... அந்த வினாடியே என் மூச்சு நின்று விடும்..."

"சாரதா இது என்ன பைத்தியக்காதத்தனமான பேச்சு.."

பரதன்... தன் சீட்டிலிருந்து எழுந்து... அவளருகே சென்று அமர்ந்து அவள் வாய் பொத்தினான்... அதற்காகவே காத்திருந்தது போல்... அவள் அழ ஆரம்பித்தாள்...

அவள் தலையைத் தன் மடியில் பரதன் தாங்கிக்கொள்ள... அவன் மடியில் முகம் புதைத்து... மனம் விட்டு அவள் அழுதாள்...

ஒரு நிமிடத்தில் தன் வாழ்வு மாறிப் போன சோகத்தை... உடன் பிறந்தவன் ஒருவன் சரியாக அமையாததால் ஒரு மிருகத்திடமிருந்து தப்பி ஊரைவிட்டு ஓடி வர நேர்ந்த அவலத்தை... தன் கண்ணீரில் கரைந்தாள்... 'இனி எல்லாமே நீதான்...! என்று அவன் மடியில் சரணடைந்து தலை சாய்த்தாள்...

13

அவள் அழுது ஓயட்டும் என்று பரதன விட்டு விட்டான்... அவளது முடிபோதி... மென்மையாக அமைதி காத்தான்.. அவள் மனதிலிருக்கும் பிரிவுத்துயர் கண்ணீரில் கரைந்து காணாமல் போகும் வரை காத்திருந்தான்... ஒரு வழியாய் அவளது கேவல் ஓயவும்... அவளது கண்ணீர் முகத்தைத் தன் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்தான்...

"அழக் கூடாது சாரதா... நான் உன் கூடவேதான் எப்போதும் இருப்பேன்... உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்... பயப்படாதே..."

"ம்ம்ம்..."

"ஒருவேளை என் உயிர் போகுமானால்... உன்னைக் கொன்று என்னுடன் அழைத்துப் போய் விடுவேன்..."

சாரதா உடல் தூக்கிப் போட, அவனைப் பார்த்தாள்... பரதனின் முகத்தில் தீவிரம் இருந்தது... அவன் குரலில் உறுதி தெரிந்தது...

"என்ன அப்படிப் பார்க்கிறாய்...? என்னைப் பற்றி உனக்குத் தெரியாது... உனக்கென்று இருப்பது நான் மட்டும்தான்னு சொல்கிறாயே... எனக்கென்று மட்டும் வேறு யார் இருக்கிறார்கள்? நீ மட்டும்தானே இருக்கிறாய்...?"

"தெரியாமல் பேசிவிட்டேன்..."

"இனி அப்படிப் பேசாதே... உன் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்... என் கடைசி மூச்சுவரை... ஏன்... அதற்குப் பின்னாலும் கூட நான் உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்..."

அவனின் மூர்க்கத்தனமான... ஆளுமை நிறைந்த அன்பு வார்த்தைகள்... அவளது சோகத்தை உடைத்துச் சுக்கு நூறாக்கிப் போட்டன...

அவள் அமைதியாய்...அவனது மடி சாய்ந்து... அவன் விரலோடு... தன் விரல் கோத்துக் கொண்டாள்...

ஜன்னலில் வந்த காற்றில் அவளது முன்பக்கக் கேசக்குழல் கற்றை கலைந்தாட... பரதன் அதை நீவிச் சரி செய்தான்... ரயில் 'தடக் தடக்' என்ற சத்தத்துடன் சீரான தாளகதியுடன் ஓடிக் கொண்டிருக்க... அவன் மடி சாய்ந்து அவளும்... எதுவும் பேசாமல்... அமைதியாய்க் கண்மூடி ஒருவரின் அருகாமையில் ஒருவர்... புதுச் சொந்தத்தை உணர்ந்து கொண்டிருந்தனர்...

தன்னையுமறியாமல் சாரதா கண் மூடித் தூங்கிவிட... பரதன் அவளது தூக்கத்தைக் கலைக்காமல்... அவளை அணைவாய்க் கரத்தினால் இறுக்கிய படி... இருக்கையில் சாய்ந்து தூங்கிவிட்டான்.

ஜன்னல் வழி சுளீரென்று வெயில் அடிக்க... முதலில் கண் விழித்தது பரதன்தான்... கண்களைக் கசக்கியபடி எதிரே பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது... அவர்களது பெட்டி முழுவதும் ஆள்கள் இருந்தார்கள்...

மெல்லிய சங்கடம் கலந்த வெட்கம் முகத்தில் சூழ... அவன் சாரதாவின் தோயசைத்து மெதுவாக எழுப்பினான்... கண் விழித்துப் பார்த்தவள் பதறி எழுந்தாள்... அவளது பதட்டத்தைக் கண்ட எதிர் சீட்டுக்காரர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துச் சிரித்துக் கொண்டனர்...

"அப்போதே ஏன் எழுப்பி விடவில்லை..." பரதனிடம் மெல்லிய குரலில் கேட்டாள்...

"நானே இப்போதுதான் கண் விழித்தேன்..." அவன் அவள் காதோரமாய்ச் சரிந்து கூறினான்...

"எல்லோரும் வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்..."

"பார்த்தால் என்ன...? இது எல்லோரின் வீட்டிலும் நடப்பதுதான்..."

அவன் குறுஞ் சிரிப்புடன் நகர்ந்து கொள்ள... அவள் எழுந்து ஜன்னலோரம் அமர்ந்து கொண்டாள்...

"காபி குடி..."

இரண்டு கப் காப்பியை வாங்கி அவன் நீட்ட... சாரதா... கோபத்தை மறந்து... காபியைப் பருகியபடி வெயியே வேடிக்கை பார்க்கலானாள்...

அவளையே பார்த்துக் கொண்டிருந்த பரதனின் மனம் கனிந்தது...

"எப்படி நிச்சிந்தையாய் வருகிறாள்...! எங்கே போகிறோம் என்று தெரியாது... இனிப் பிழைப்புக்கு என்ன வழியென்றும் இவள் கேட்கவில்லை... கட்டின புடவையோடு என்னை நம்பி... என் பின்னால் வந்து விட்டாளே... நேற்று வரை மாளிகையில் வாழ்ந்தவள்... பட்டை உடுத்தி... வைரத்தை அணிந்த கொண்டிருந்தவள்... மாற்றுப் புடவை கூட இல்லாமல்... நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக... போட்டிருந்த நகைகளைக் கூட அவிழ்த்துக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறாளே... என் மேல்தான் இவளுக்கு எவ்வளவு நம்பிக்கை..."

இது ஒரு ஆணைக் கௌரவப்படுத்தும் விசயம்... சாரதா பரதனைக் கௌரவப் படுத்திக் கொண்டிருந்தாள்...

யதேச்சையாய்த் திரும்பிப் பார்த்த சாரதா... பரதனின் பார்வையைக் கண்டதும் விழியால் வினவினாள்...

"ஒன்று மில்லை..."

"நிஜமாகவா..."

பொய் சொல்ல மனமில்லாமல் அவன் சிரித்தான்... அவர்கள் இறங்க வேண்டிய ரயில் நிலையத்தின் பெயர்ப் பலகை கண்ணில் பட... அவன் குனிந்து சீட்டுக்கடியில் இருந்த பெட்டியை எடுத்தான்...

"நாம இறங்கணும் சாரதா..."

அவள் பதில் பேசாமல் எழுந்து கொள்ளவும்... மீண்டும் அவன் மனம் நிறைந்தது... அவள் கண்களுக்குள் பார்த்தபடி அவன் கை நீட்ட... அவள் தயங்காமல் அவன் கரத்தைப் பற்றிக் கொண்டாள்...

14

"இது என்ன ஊர்ன்னு கேட்க மாட்டாயா...?"

"கேட்காவிட்டால் என்ன...?"

"நானாவது சொல்லலாமில்லையா...?"

"சொல்லுங்க..."

"இது ஓசூர்..."

"அப்படியா...?"

அவள் மிகச் சாதரணமாய்க் கேட்டுவிட்டு அமைதியானாள்... அவளின் அந்தத் தன்மையை ரசித்தபடி... அவன் பயணிகளின் அறைக்கு அவனை அழைத்துச் சென்றான்...

"ஒரு நிமிடம் காத்திரு, சாரதா..."

அவள் அவனது கைப் பிடித்து நிறுத்தினாள்... அவள் விழிகளில் மிரட்சி தெரிந்தது...

"எங்கே போகிறீங்க...?"

"உனக்கு மாற்றுச் சேலை வாங்கி வர..."

"நானும் வருகிறேன்..."

ஒரு நிமிடம் யோசித்தவன்... ஒரு முடிவோடு பொட்டியைத் திறந்து வேலை நியமன உத்தரவையும்... சான்றிதழ்கனையும் தனியே ஒரு கவரில் போட்டு எடுத்துக் கொண்டான்...

"சரி... வா..."

முதலில் ஜவுளிக் கடைக்கு அவளை அழைத்துச் சென்றான்... இரண்டு சேலைகளும்... உள்ளாடைகளும் மட்டும் வாங்கிக் கொண்டாள் சாரதா...

"ஏன்...?"

"இப்போதைக்கு இது போதும்..."

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்..."

"இப்போதைக்கு மட்டும்தான் இது போதும்ன்னு நானும் சொல்கிறேன்... நாளபின்ன... ஜவுளிக் கடையையே காலி பண்ணுகிறேனா... இல்லையானுனு பாருங்க..."

விளையாட்டாய் பேசியபடியே ஜவுளிக் கடையிலிருந்து வெளியே வந்து விட்டாள்... அவள்...

"சாரதா..."

"ஊம்..."

"இப்போதைக்கு ஹோட்டாலில் ரூம் எடுத்துத் தங்கிக் கொள்ளலாமா...?"

"வேண்டாம்... அதற்குப் பதில் வாடகைக்கு வீடு கிடைக்கிறதான்னு பார்ப்போம்..."

"நீ இன்னும் குளித்து சாப்பிடவில்லையே..."

"பரவாயில்லை..."

பரதன் யோசனையுடன் ஆட்டோ ஒன்றை அழைத்தான்... அவனுக்கு வேலை கிடைத்திருந்த கல்லூரியின் பெயரைச் சொன்னான்...

"வா... சாரதா..."

அவள் பதில் பேசாமல் அவனுடன் ஏறிக் கொண்டாள்... கல்லூரியின் வாசலில் அவர்கள் இருவரும் இறங்கினர்...ஆண்... பெண்... இருபாலரும் படிக்கும் கல்லூரி அது... இளம் பெண்களும்... ஆண்களும்... கல்லூரிகுள் சென்று கொண்டிருக்க... பரதன் சாரதாவின் கைப் பிடித்து அழைத்துக் கொண்டு கல்லூரிக்குள் பிரவேசித்தான்..

"இது காலேஜ் சாரதா... இந்த மரத்தடியில் இருக்கும் பெஞ்சில் பயமில்லாமல் நீ உட்காரலாம்... எனக்கு உள்ளே ஒரு வேலை இருக்கிறது... போய் விட்டு வந்து விடுகிறேன்... என்ன... போய் விட்டு வரவா...?"

சாரதா தயக்கத்துடன் அரை மனதாய்த் தலையாட்டினாள்... பரதன் அவளருகில் பெட்டியையும்... ஜவுளிக்கடையில் வாங்கிவந்த புதுத் துணிகளின் பைகளையும் வைத்துவிட்டு... அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி உள்ளே விரைந்தான்.

கல்லூரி முதல்வரின் அறைக் கதவை இரண்டு விரல்களால் தட்டினான்..

"யெஸ்... கமின்..." என்ற குரல் கேட்டது...

உள்ளே சென்று நின்றான்... கண்ணாடியைச் சரி செய்து கொண்டு நிமிர்ந்த ராமநாதன்...

"உட்காருங்க... என்றார்..."

"சார்... நான் பரதன்... இந்தக் காலேஜில் லெக்சரராக வேலை பார்க்க வந்திருக்கிறேன்..."

பரதன்... ரயில் நிலையத்தில்.. பயணிகள் அறையிலேயே பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வைத்திருந்த வேலை நியமண உத்தரவையும்... சான்றிதழ்களையும் நீட்டினான்...

"ஓ... மிஸ்டர் பரதன்...! வெல்கம் வெல்கம்..." ராமநாதன் கை நீட்டினார்... அவரது கரம் பற்றிக் குலுக்கிய பரதன்... தயக்கத்துடன்...

"எனக்கு ஒரு உதவி வேண்டும், சார்..." என்றான்...

"என்ன... சொல்லுங்க..."

"நான்... என் மனைவியுடன் வந்திருக்கிறேன்... இங்கே வந்து வீடு பார்த்து விட்டு அவளை அழைத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை... ஹோட்டலில் தங்க அவள் விருப்பப் படவில்லை... எனக்கு உடனடியாய்க் குடியிருக்க ஒரு வீடு வேண்டும், சார்..."

"காதல் கல்யாணமா...?"

"அவள் வீட்டில் எங்கள் கல்யாணத்தை"

"ஏறக்குறைய அப்படித்தான் சார்... அவள் வீட்டில் எங்கள் கல்யாணத்தை விரும்பவில்லை..."

பரதன் நாசூக்காய்த் தன் நிலைமையைக் கூறிய விதம் ராமநாதனைக் கவர்ந்தது... காதல் திருமணம் செய்து கொண்ட அவர்... பரதனையும் தன்னைப் போல் நினைத்துக் கொண்டு... உடனடியாக உதவிக் கரம் நீட்டினார்...

15

"நோ பிராப்ளம் மிஸ்டர் பரதன்... இங்கே காலேஜ்லேயே லெக்சரர்களுக்கும்... புரபசர்களுக்கும் குவார்ட்டர்ஸ் உண்டு... ஆனால் டவுனை விட்டு நம் காலேஜ் தள்ளியிருப்பதால்... நிறையப் பேர் இங்கே குவார்ட்டர்ஸில் குடியிருக்க விரும்புவதில்லை... காலியாக இருக்கும்

குவார்டர்ஸ் ஒன்றை உடனடியா உங்களுக்கு அலாட் பண்ணுகிறேன்..."

"தேங்க்யு சார்..."

"சாப்பிட்டு விட்டிங்களா...?"

"அது... வந்து..."

"சாப்பிடவில்லைன்னு தெரியுது... நீங்க குவார்ட்டர்ஸ்றிகுப் போய்க் குளித்து ரெடியாகுங்க... நான் ஹாஸ்டலில் இருந்து சாப்பாடு கொடுத்துவிட ஏற்பாடு செய்கிறேன்..."

"தேங்க்யு... சார்..."

"பாத்திரம்... ஸ்டவ்... இது எதுவும் இருக்கிறதா...?"

"அது வந்து சார்..."

"இல்லைன்னு தெரியுது... போகட்டும்... என் வீட்டிலிருக்கும் தேவையில்லாத ஸ்டவ் பாத்திரங்களைக் கொடுத்து விடுகிறேன்... நாளையிலிருந்து நீங்க ஏதாவது செய்துக்கங்க..."

"தேங்க்யு சார்..."

எத்தனை முறை நன்றி சொன்னாலும் போதாது என்ற உணர்வுடன்... தேங்க்யு சார்...' என்று ஜெபித்தபடி சாரதாவைத் தேடிச் சென்றான்... பரதன்...

பரதனைக் கண்டதும்... அவள் விழிகளில் தெரிந்த நிம்மதியைக் கண்டு... மன நெகிழ்வுடன்... அவளருகில் சென்று பெட்டியை எடுத்துக் கொண்டான் அவன்...

"வா சாரதா..." அப்போதும் அவள் எங்கேயென்று கேட்காமல் அவனைப் பின் தொடர்ந்தாள்... பியூன் ராஜாங்கம் முன்னே செல்ல... பரதன் சாரதாவை அழைத்துக் கொண்டு அவன் பின்னால் சென்றான்...

கல்லூரிக்குப் பின் பக்கம் வரிசையாகக் கட்டப்பட்டிருந்த வீடுகளில் ஒன்றைத் திறந்து விட்ட ராஜாங்கம்... சாவியைப் பரதனின் கையில் கொடுத்து விட்டு...

"ஹாஸ்டல் மெஸ்ஸிலிருந்து சாப்பாடு கொண்டுவரேன் சார்..." என்று கூறி விட்டுச் சென்று விட்டான்...

"உள்ளே வா, சாரதா... வரது காலை எடுத்து வைத்துவா..." பரதன் அழைத்தவுடன்... சாரதா வியப்புடன் அவனைப் பார்த்தபடி வலது காலை எடுத்து வைத்து வீட்டிற்குள் பிரவேசித்தாள்...

ஒரு பெரிய ஹால்... இரண்டு அட்டாச்சுடு பாத்ரூம்களுடன் கூடிய படுக்கையறைகள்... டைனிங் ஹால்... பூஜைரூம்... சமையல் அறை... என்று விஸ்தீரணமாகத் தோன்றிய அந்த வீட்டை ஆச்சரியத்துடன் பார்த்தபடி...

"அதற்குள் வீடு கிடைத்து விட்டதா...? இவ்வளவு பெரிய வீட்டிலா நாம் இருக்கப் போகிறோம்...?" என்று விழி விரியக் கேட்டாள்...

"ஆமாம்..." பரதன் கண் சிமிட்டிச் சிரித்தான்...

"ஆனால்... இது காலேஜ் குவார்ட்டர்ஸ் போல இருக்கிறதே..."

"ஆமாம்... இது காலேஜ் குவார்ட்டர்ஸ்தான்..."

"இங்கே எப்படி நம்மைத் தங்க விடுகிறாங்க...?"

"இந்த காலேஜின் லெக்சரரையும்... அவனின் பெண்டாட்டியையும் தங்கவிட மாட்டாங்களா...?"

"இந்த காலேஜ் ரெக்சரரா...? யார், நீங்களா...?"

"ஏன்... என்னைப் பார்த்தால் லெக்சரராகத் தெரியவில்லையா...?"

"திடீர்ன்னு எப்படி.. வேலைக்கு எடுத்துக் கிட்டாங்க...?"

"திடீர்ன்னு இல்லையே... எனக்கு இரண்டு நாள்களுக்கு முன்னாலேயே அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் கையில் கிடைத்து விட்டதே..."

"என்னிடம் நீங்கள் இதைச் சொல்லவேயில்லையே..."

"நீயும் என்னிடம் எதுவும் கேட்கவேயில்லையே..."

சாரதாவின் முகத்தில் ஒரு மலர்ச்சி வந்திருந்தது... அதை நிறைவோடு பார்த்த பரதன் கைகளை விரித்து... அவளைக் கண்களால் அழைத்தான்... அவள் விருப்பத்துடன் அவனுடைய கைகளுக்குள் புகுந்து கொண்டாள்...

"எந்த வித முன்னேற்பாடும் இல்லாமல் இந்த ஊருக்கு உன்னுடன் வந்திருந்தாலும்... எதிர் காலத்திற்கு வழி ஏற்படுத்திக் கொள்ளாமல் வரவில்லை..."

"அது எனக்குத் தெரியுமே..."

"அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது சாரதா... உன் கழுத்தில் நான் தாலி கட்டிப் பதினைந்து மணி நேரம்தான் ஆகிறது... அதற்குள்... காலம் காலமாய் என்னை அறிந்தவள்போல் நீ மௌனம் காத்ததுதான் எப்படியென்று எனக்குத் தெரியவில்லை."

"கட்டு தாலியைன்னு என் அண்ணன் சொன்னவுடன் மறு பேச்சில்லாமல்... தாலியைக் கட்டி... என் கைப்பிடித்து என் பொறுப்பை நீங்க ஏற்றுக் கொண்டபோதே... காலம்... காலமாய் உங்களுடன் வாழ்ந்தது போன்ற உணர்வு எனக்கு வந்துவிட்டது... மற்றதை எனக்குச் சொல்லத் தெரியவில்லை..."

அவர்கள் பேச மறந்த... சிலையாய் நின்றார்கள்...

## 16

பாத்திரத்தில் பால் பொங்கியதும்... சாரதா ஸ்டவ்வை அணைத்துவிட்டு... பால் பாத்திரத்தின் கைப்பிடியைப் பற்றித் தூக்கி இறக்கி வைத்தாள்... பூஜையறைக்குக் கொண்டு சென்று கடவுள் படங்களின் முன்னால் வைத்து வணங்கிவிட்டு... தம்ளர்களில் பாலை ஊற்றி... வரவேற்பறையில் இருந்த ராமநாதனுக்கும் அவரது மனைவிக்கும் கொண்டு போய்க் கொடுத்தாள்.

ராமநாதனின் வீட்டிலிருந்து பழைய ஸ்டவ்... பாத்திரங்கள் வாங்குவதைச் சாரதா விரும்பவில்லை... ஆட்சேபித்தாள்...

"சின்னதாய் ஒரு ஸ்டவ்... இரண்டு மூன்று பாத்திரங்கள்... மளிகைச் சாமான்கள் இருந்தால் போதும்... நான் சமாளித்துக் கொள்வேன்... உங்களுக்குச் சம்பளம் வந்த பின்னால் மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம்... ஆனால் புதிதாய்க் குடித்தனம் ஆரம்விக்கும்போது இரவல் சாமான்களில் ஆரம்பிக்க வேண்டாம்..."

அவளின் அந்த சுயமரியாதை பரதனுக்கு மிகவும் பிடித்திருந்தது... ராமநாதனிடம் தயக்கத்தடன் அதைத் தெரியப்படுத்தினான்...

"பரவாயில்லையே... சமர்த்துப் பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறீங்க... பரதன், பணம் ஏதாவது வேண்டுமா..? கடனாக வாங்கிக் கொள்ளுங்கள்... சம்பளம் வந்தவுடன் வாங்கிக் கொள்கிறேன்..."

"இல்லை சார்... என்னிடம் போதுமான அளவுக்குப் பணம் இருக்கிறது... வீட்டு அட்வான்ஸ் கொடுக்க வேண்டியது இல்லாமல் போய் விட்டதே... அதனால் எனக்கு உடனடியாக கேஸ் கனெக்சன் மட்டும் வாங்கித் தர முடியுமா...?

முடியுமே... இந்த ஊரில் நம்ம காலேஜிக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது... கேட்டதும் எல்லா உதவியும் கிடைக்கும்... வேறு என்ன வேண்டும்...?

"வேறு எதுவும் வேண்டாம், சார்... மற்றதையெல்லாம் சாயந்திரம் என் மனைவியுடன் கடைத் தெருவிற்க்குப் போய் வாங்கி வந்து விடுகிறேன்..."

"ஓகே... இன்றைக்கு மதியம்த ஹாஸ்டல் மெஸ்ஸிலேயே சாப்பிட்டுக்குகங்க... நைட்டிற்கும் கொடுத்துவிடச் சொல்கிறேன்..."

"நாங்கள் கடைத்தெருவிற்குத்தானே போகிறோம்... ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறோமே..."

"அது எதற்கு வீண் செலவு...? அந்தப் பணத்தில் வீட்டிற்குத் தேவையான வேறு பொருளை வாங்குங்கள்.."

ராமநாதன் உற்ற சொந்தம் போல் ஆலோசனை கூறினார்... பரதன் முதல் நாள் வகுப்பெடுக்கச் சென்றான்... வேலை செய்ய ஆரம்பித்தான்... மதியம் குவார்ட்டர்ஸிற்குத் திரும்பிய போது... சாரதா... வீட்டு வாசல்படியில் அமர்ந்திருந்நதாள்...

"ஓ..."

அவளுடைய ஆத்தூர் வீடு பரதனின் கண்முன் வந்து நின்றது... அரண்மனை போன்ற அந்த வீட்டில்... தாய்... தந்தை... பெரிய அண்ணன்... அண்ணி... அண்ணன் மகன்... சின்ன அண்ணன்... வீடு நிரம்பிய வேலையாள்கள் என்று கலகலப்பாக வாழ்ந்து பழகியவளுக்கு... இந்தத் தனிமை அச்சத்தைக் கொடுக்கத்தான் செய்யும்...

"என்ன பயம்...? நான்தான் வந்துவிட்டேனே... உள்ளே வா...?"

அவன் ஆதரவாய் அவளை அணைத்த உள்ளே அழைத்துச் சென்றான்... பியூன் ராஜாங்கம் மதிய உணவு கேரியருடன் வந்துவிட... அதை வாங்கிக் கொண்டு அவனை அனுப்பி வைத்துவிட்டு... கை... கால்... முகம் கழுவி வந்தான்... சாரதா.. இலையை விரித்து அவனுக்காகப் பரிமாற்க் கொண்டிருப்பதைப் பார்த்தும் நெகிழ்ந்து விட்டான்...

"உனக்கும் இலையைப் போடு..."

"நீங்க சாப்பிடுங்க... அப்புறமாய் நான் சாப்பிட்டுக் கொள்கிறேன்..."

"இந்த சென்டிமென்டெல்லாம் இங்கே வேண்டாம்... சேர்ந்தே சாப்பிடலாம்... இலையைப் போடு..."

"உங்களுக்கு யார் பரிமாறுவது...?"

"நமக்கு நாமே போட்டுக் கொள்ளலாம்..."

பிடிவாதமாய்ப் பரதன் தன்னுடன் சேர்ந்து அவளைச் சாப்பிட வைத்தான்... சாரதவிற்குக் கண்கள் கரிந்தன... முதல் நாள் முன்னிரவில் அவள் கழுத்தில் தாலியைக் கட்டி... கைபிடித்து இழுத்துக் கொண்டு ஓடி வந்ததில்

இருந்து.. அவன் தன்னைப் பார்த்துப் பார்த்துக் கவனித்துக் கொள்வதைக் கண்டு அவளின் மனம் காதலில் ததும்பியது... தன் முன்னால் அமர்ந்து பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தவனையே வைத்த கண் விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சாரதா...

"இவன் என்னுடையவன்..."

அவள்குக் அவனை முத்தமிட வேண்டும் போல் ஆசை மனதிற்குள் தோன்றியது... சாரதாவின்

ஆவலான பார்வையைக் கண்டு விட்ட பரதனின் கண்கள் மின்னின...

"என்ன இப்படிப் பார்க்கிறாய்...?"

"ஏன் பார்க்கக் கூடக் கூடாதா...?"

ரயிலில் அவன் சொன்ன அதே பதிலை இப்போது அவள் சொல்ல... அவன் கிளர்ந்தான்...

"ஏய்ய்..."

"அடடா... இது என்ன... சாப்பிட்ட வாயோடு..." ஆனாலும் சாரதா... அவனது அணைப்பினில் அடங்கி அவனது முத்தத்தை ஏற்றுக் கொள்ளத்தான் செய்தாள்.

17

ஓசூரின் கடை வீதியில் சாரதா... பார்த்துப் பார்த்து... பொருக்களைத் தேர்வு செய்து வாங்கினாள்... அவளின் சிக்கனமான பொருள் சேகரிப்பைக் கண்டு பரதனுக்குப் பெருமிதமாக இருந்தது.

"இப்போதைக்கு இரண்டு தட்டுகள் போதுமே..."

"ஆமாமாம்... நாளைக்குக் குடும்பம் பெருகிவிட்டால் பார்த்துக் கொள்ளலாம்..."

அவளைப் பருகி விடுவதுபோல் பார்த்துக் கொண்டே பரதன் பதில் சொல்ல... சாரதா முகம் சிவந்து... மற்றவர்கள்

அறியாமல் தன் முழங்கையால் அவன் விலாவினில் இடித்தாள்...

"பேசாமல் இருங்க..."

"ஓகே மேடம்..."

அத்தியாவசிய சாமான்களை வாங்கிக் கொண்டு அவர்கள் கிளம்பும்போது... பரதன் சாரதாவின் கைப் பிடித்து நிறுத்தினான்...

"என்னங்க..."

"முக்கியமானதை வாங்காமல் போகிறாயே..."

"எதை வாங்கவில்லை..."

"ஜமுக்காளம்... தலையணை... போர்வை இதெல்லாம் வேண்டாமா...? குடும்பம் அப்புறம் எப்படிப் பெருகும்...?"

இப்போது சாரதாவின் முகம் குங்குமமாகவே மாறிவிட்டது.. வெளிப்படையாய்ப் பரதனைக் கிள்ளினாள்..

"சே... இப்படியெல்லாம் கூட நீங்க பேசுவீங்களா...?"

"அப்படி நான் என்ன தவறாகச் சொல்லி விட்டேன்...?"

"என்ன சொன்னீர்கள் என்று தெரியாதா...?"

"தெரியாதே... நீதான் என்னவென்று சொல்லேன்..."

"என்னது நான் சொல்லுவதா...?"

சாரதா பரதனை முறைத்தாள்... அவளது முறைப்பினில் வெப்பம் இல்லை... வெட்கம் இருந்தது.. பரதன் அதை ரசித்துச் சிரித்தான்...

அவர்கள் வீடு திரும்பும்போது... வாசலில் ராமநாதன் நின்றிருந்தார்... அவசரமாய்ப் பரதன் அவன் அருகில் சென்றான்...

"வந்து ரெம்ப நேரமாகி விட்டதா, சார்...?"

"இல்லை பரதன்.... இப்போதுதான் வந்தேன்... நீங்க கதவைத் திறங்க... இவங்கதான் உங்க மனைவியா...?"

சாரதா மரியாதையுடன் கரம் குவித்தாள்...

"நல்லா இருங்கம்மா... ஓசூர் பிடித்திருக்கிறதா?"

"பிடித்திருக்கிறது..."

"சாமான்கள் வாங்கி வந்துவிட்டிங்க போல"

"ஆமாம், சார்... நாளைக்குப் பால் காய்ச்சி விடலாமுன்னு இருக்கிறோம்..."

பரதன் கதவைத் திறந்தவாறு பதில் சொன்னான்... அவர்கள் உள்ளே சென்றதும்... புதுப்பாயை ஹாலில் விரித்து விட்டான்...

"என் வீட்டிலிருந்து இரண்டு சேர்களைக் கொடுத்துவிடுகிறேன்னு சொன்னால் நீங்க கேட்க மாட்டேன் என்கிறீங்க..."

ராமநாதன் பாயில் அமர்ந்தார்... சாரதா சாமான்களை உள்ளே கொண்டு போய் வைத்தாள்...

"பரதன்! உங்கள் கல்யாணம் எங்கு நடந்தது...?"

திடீரென்று ராமநாதன் இப்படிக் கேட்கவும்... சாரதா உள் அறையின் கதவிற்குப் பின்னால் பாதி மறைந்ததும்... மறையாமலும் நின்று கொண்டு எட்டிப் பார்த்தாள்... பரதன் பரதன் திகைத்தான்...

"சாரதாவின் வீட்டில் தான் நடந்தது...""

"உங்களின் மனைவியின் வீட்டில் உங்கள் கல்யாணத்தை விரும்பவில்லைன்னு சொன்னீங்களே..."

பரதன்... ராமநாதனின் முகத்தைத் தீர்க்கமாகப் பார்த்தான்... "சார்... என் மேல் சந்தேகப் படுகிறீங்களா...?"

"நோ... நோ... நான் இதைக் கேட்பதற்கான காரணமே வேறு.... நானும் காதல் கல்யாணம் செய்து கொண்டவன்தான்... அவசரத்தில் என் நண்பர்கள்

முன்னால் வைத்து என் மனைவியின் கழுத்தில் தாலியைக் கட்டினேன்... பின்னால்... அதுபோதாதுன்னு என் நண்பர்கள் யோசனை சொன்னாங்க... அதன்படி என் கல்யாணத்தை முறைப்படி பதிவு பண்ணிவிட்டேன்..."

"ஓ... இப்படியும் ஒன்று இருக்கிறதா...! பரதனின் மூளையில் அந்த விசயம் அப்போதுதான் புலப்பட்டது.."

பூட்டிய அறைக்குள் சாரதாவின் கழுத்தில் பரதன் தாலிகட்டியதற்குப் பூபதி மட்டுமே சாட்சி... சட்டப்படி அந்தக் கல்யாணம் செல்லுமா...? ஐஏஎஸ் தேர்வு எழுதியிருக்கும் தனக்கு ஏன் இந்த விசயம் புலப்படவில்லை?

"சார்... எங்கள் கல்யாணத்தைச் சாரதாவின் பெரிய அண்ணன் நடத்தி வைத்தார்.. பூட்டிய அறைக்குள் அவர் ஒருவர் முன்னிலையில் மட்டுஅம... நான் சாரதாவின் கழுத்தில் தாலியைக் கட்டினேன்..."

"அப்படியா...? உங்கள் மனைவியின் பெரிய அண்ணன் மட்டுமே உங்களின் காதலுக்கு ஆதரவா...?"

"ஆமாம்..."

"அது போதாது, பரதன்... இங்கேயிருக்கும் ரெஜிஸ்ட்ரார் எனக்குத் தெரிந்தவர்தான்... நாளைக்கே நீங்கள் பதிவுத் திருமணத்தைப் பண்ணிக் கொள்ளுங்கள்..."

ராமநாதன் வழி சொல்லிவிட்டுப்போய் விட்டார்... பரதன் சாரதாவின் அருகே வந்து அவள் முகம் பார்த்தான்...

"ஆக... இன்னும் ஒரு நாள் தள்ளிப் போட வேண்டும்..."

"எதை...? கேட்டவள் என்னவோ அறியாமல் தான் கேட்டாள்... அவள் காதோரம் விளக்கம் சொன்னவனோ... அதை அவள் அறியச் சொன்னான்..."

18

பூஜையறையில் வாங்கி வந்திருந்த சுவாமி படங்களை வைத்துக் காமாட்சி விளக்வில் எண்ணெய் ஊற்றி...

திரியிட்டு விளக்கேற்றத் தயாராக வைத்தாள் சாரதா... கடவுள்களின் படங்களுக்கு மத்தியில் பரதனின் பெற்றோரின் படங்களை மாட்டி வைத்தாள்...

விளக்கேற்றி... கண் மூடி நின்றாள்...

அவளை அழைக்க வந்த பரதன்... அவளின் கண் மூடி நின்ற அந்தத் தோற்றத்தினால் கவரப்பட்டான்... அவளின் பூஜையை ஏற்று... சங்கரனும்... காமாட்சியும்... மன நிறைவுடன் அவர்கள் இருவரையும் ஆசிர்வதிப்பது போல் அவ;;ன்க்குத் கோன்றியது...

"கிளம்பலாமா சாரதா..."

"ம்ம்..."

பதிவுத் திருமணம்... ராமநாதனின் முன்னிலையில் நடைபெற்றது... பரதனின் சார்பாக... ராமநாதனும்... இன்னும் ஒரு பேராசிரியரும் கையொப்பம் இட... சாரதாவின் சார்பாக... ராமநாதனின் மனைவியும்... மற்மொரு பெண் லெக்சரரும் கையெழுத்துப் போட்டனர்...

தனியா அந்த ஊருக்குப் பிழைப்புத் தேடி... தன்னை நம்பி வந்தவளின் கையைப் பிடித்துக் கொண்டு வந்திருந்த பரதனுக்கு... கை கொடுக்கச் சிறு நண்பர் குழாமென்று உருவாக... அவன் மனம் நெகிழ்ந்து போனான்...

சாரதாவை வீட்டில் விட்டுவிட்டுக் கல்லூரிக்குப் போய்விட்டவன்... மதிய உணவு உண்ணத் திரும்பி வந்தான்... அவன் அழைப்பு மணியை அடித்ததும்... கதவைத் திறந்து விட்டவளைப் பார்த்து... புதிய சொந்தத்துடன் கண் சிமிட்டிச் சிரித்தான்...

"என்ன... கண் சிமிட்டல் எல்லாம் பலமாக இருக்கிறது..." அவள் புரியாதவளாகச் சிணுங்கினாள்...

"இப்போது பயம் போய் விட்டதா...?"

"எதைச் செல்கிறீங்க...?"

"தனிமைப் பயம் போய் விட்டதா...? இல்லா விட்டால் வாசலிலேயே உட்கார்ந்து இருப்பாயே... அதுதான் கேட்டேன்..."

"வேலை இருக்கிறதே... அத்தோடு இது பழகிய போய்விட்டது..."

"நான்தான் இன்னும் பழகவில்லை..."

இப்போது அவளுக்கு அவனது பேச்சின் திசை புரிந்து போக முகம் சிவந்தாள்... அவன் கதவை மூடிவிட்டு... தாகத்துடன் அவளை நெருங்கினான்...

"ச்சு... இது மதியம்..."

"இருக்கட்டுமே..."

"நீங்க சாப்பிட்டுவிட்டுக் காலேஜிற்குப் போக வேண்டாமா?"

"வேண்டாம்..."

"என்னது போக வேண்டாமா...?"

"லீவு சொல்லிக் கொள்வேன்..."

"நேற்று வேலையில் சேர்ந்துவிட்டு இன்றைக்கே லீவா... விளங்கி விடும்..."

"ஏய்... எங்கள் பிரின்ஸிபாலும் காதலித்துக் கல்யாணம் கட்டிக்கிட்டவர்தான்டி... அவருக்கும்... புதிதாய்க் கல்யாணம் கட்டிக்கிட்ட ஜோடிகளின் தவிப்புப் பற்றி தெரியும்..."

"உங்களோடு முடியாது.."

அவன்... ஆவேசமாய் அவளை அணைத்து... அவளின் இதழ்களில்... இதழ் பதித்தான்... முதல் முறையாய்... முழுமையாக அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு... அவள் கூந்தலில் முகம் புதைத்தான்... சாரதாவின் உடலில் உணர்வுகள் பொங்கி எழுந்தன... ஆக்டோபஸ் போல வளைத்த அவனது கரங்களில் இருந்து விடுபட விரும்பாமல் அவள் அவனுள் புதைந்தாள்... அவனது

தாபத்தை அனுமதித்துக் கொண்டே... மெல்லிய குரலில்... அவன் காதோரம் பேசினாள்...

"ப்ளீஸ்... சொன்னால் கேளுங்கள்..."

"நீ எதைச் சொல்லி நான் கேட்கவில்லை?"

"இப்போது சொல்வதைக் கேளுங்கள்..."

"இதை அப்புறமாய்ச் சொல்..."

அவளுக்கு அவனது பிடிவாதத்தை நினைத்துச் சிரிப்பு வந்தாலும்... தன்னைச் சிறைப் பிடித்திருந்த அவனது கரங்களை விலக்க மனமில்லாமல் விலக்கி... அவன் முகம் பார்த்தாள்... அவன் வேட்கையுடன் மீண்டும் அவன் முகம் நோக்கிக் குனிந்தான்... சற்றுப் பொழுது கழித்து... அவனிடமிருந்து விலகி... அவள் உள்ளே செல்ல.... அவன் தடுக்க முயன்றான்... அவள் விலகி ஓடி... சமையலறைக்குள் சென்று மறைந்தாள்...

சமையல் மேடையில் சமைத்தவைகளை எடுத்துக் கொண்டிருந்தவளின் பின்னாலிருந்து அவன் கட்டிக் கொள்ள இசைவாய் நின்றபடி...

"கை... கால்... முகம் கழுவிக் கொண்டு வாங்க..." என்றாள்...

"மாட்டேன்..." என்றான் அவன்...

அவள் திரும்பி... அவனது கழுத்தை வளைத்து... எம்பி அவன் கன்னத்தில் காதருடன் முத்தமிட்டாள்... பரதன் எல்லையற்ற தேடலுடன் அவளை அணைத்துக் கொள்ள... அவனது காதோரம் சமாதான வார்த்தைகளைக் கூறி அவனது கரம் விலக்கிச் சாப்பிடவைத்து... கல்லூரிக்கு அனுப்பி வைத்தாள்...

மாலையில் மல்லிகையின் மணத்துடன்... காபியைக் கொண்டு வந்து கொடுத்தவளின் கரம்பற்ற அவன் முயல... அவள் விலகி வாசலுக்குச் சென்று படியில் அடிர்ந்தாள்...

"சாரதா... இங்கே வா..."

"நீங்க இங்கே வாங்க..."

வேறு வழியின்றிக் கையில் காபித் தம்ளரோடு அவளருகே சென்று அமர்ந்தான் பரதன்...

"வாசலிலேயே குடியிருக்கணும்னு ஒரு முடிவோடு இருக்கிறாயா...?"

"ஐய்யே... சாயங்காலத்தில் வாசலில் காற்றாட உட்காரலாமேன்னுதான்... வாசலில் பார்த்தீங்களா... அhகாய்ப் பூச் செடிகள்..."

பரதன் பூக்களை விட்டு விட்டு அவள் முகத்தையே பார்க்க, அவள் முகம் சிவந்தாள்... இருந்தும் அவனைக் கண்டு கொள்ளாதவள் போல் வேறு பேச்சிற்குத் தாவினாள்...

"அந்த வானத்தில் சூரியன் எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்த்தீங்களா..!"

"பார்த்தேன்... பார்த்தேன்..."

"பறவைகள் கூட்டமாய்க் கூட்டுக்குத் திரும்புதே தனி அழகு... இல்லையா...?"

"இதற்கு என்ன பதிலைச் சொல்லுச் சொல்கிறாய்...? ஆமாம்ன்னு சொல்லவா...? இல்லை... இல்லைன்னு சொல்வ்வா?"

அவன் குரலில் எதிர்பார்த்தது கிடைக்காத ஏமாற்றம் தொனித்தது... அவள் கிளர்ந்தாள்... ஆனாலும் கிளர்சிசியை மறைத்துக் கொண்டு... பக்கத்திலிருந்த மற்ற வீடுகளைப் பார்த்தாள்...

"குவார்ட்டர்ஸில் காற்று நல்லாக் குளுகுளுன்னு வருதில்ல...?"

"உனக்குக் குளுகுளுன்னுதான் இருக்கு... எனக்குத்தான் அனலாய் இருக்கு..."

சாரதாவிற்குச் சிரிப்பு வந்துவிட்டது... பரதன் அவளுடன் சேர்ந்து சிரிக்காமல் முறைத்தான்..."

"சிரிக்கிறாயா...? உன்னை...உள்ளேவா... பேசிக் கொள்கிறேன்."

"ஏன்... அதே பேச்சை இங்கேயிருந்துதான் பேசுங்களேன்..."

"இது என்ன சாரதா பிடிவாதம்...?"

"ம்ம்... அது அப்படித்தான்.."

"ஏன்...?"

"அது... ஏனோ..."

அந்த நேரம் பார்த்து... பக்கத்து குவார்ட்டர்ஸில் குடியிருந்த லெக்சரர் ஒருவர் வந்துவிட... பரதன் காலித் தம்ளரைச் சாரதாவிடம் கொடுத்துவிட்டு... எழுந்து அவரருகே சென்றுவிட்டான்...

ஊர் நிலவரம்... நாட்டு நிலவரம்... உலக நிலவரம் எல்லாம் பேசி முடித்துவிட்டு அவர்கள் தங்களைச் சுற்றிப் பார்த்தபோது நன்றாக இருட்டிவிட்டிருந்தது... குவார்ட்டர்ஸில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன...

"அப்போ... காலையில் பார்க்கலாம், பரதன்..." அவர் சென்று விட்டார்...

பரதன் வீட்டிற்குள் வந்து கதவை தாழ் போட்டான்... சாரதாவை அவனது விழிகள் தேடின... அவள் சமையலறையில் சப்பாத்திக்குத் தேய்த்துக் கொண்டிருந்தாள்... வாய் தன்னிச்சையாய்ப் பாடிக் கொண்டிருந்தது...

"குத்து விளக்கெரிய...

கூடமெங்கும் பூமணக்க...

மெத்தை விரித்திருக்க...

மெல்லிடையாள் காத்திருக்க...

வாராதிருப்பானோ... வண்ணமலர்க்

கண்ணனவன்...

சேராதிருப்பானோ... சித்திரப்

பூம்பாவைதனை..."

பரதன் சமையலளைக் கதவின் மேல் சாய்ந்து நின்று கைகட்டிக் கொண்டு அவனையே அதிசயமாகப் பார்த்தான்... மாலையில் அந்திவானத்தின் சூரியனை ரசிக்கச் சொன்னவள்... இப்போது... வாவேன்று பாட்டால் அழைக்கிறாள்...

"நீ கூப்பிட்டால் உன் கண்ணன் வராமல் போய்விடுவேனா...?"

கதவோரம் ஒலித்த கணவனின் குரல் கேட்டு நிமிர்ந்மு பார்த்த சாரதா... வெட்கப் புன்னகையுடன் பாட்டை நிறுத்திக் கொண்டாள்... பரதன் அவளருகே நெருங்கி வர... ஒரு எதிர்பார்பபோடு... சப்பாத்திகளை எடுத்துத் தட்டில் வைத்தாள்...

அவள் எதிர் பார்த்ததைப் போலவே அவன் அவளைத் தன்னருகே இழுத்தான்... மறுப்புச் சொல்லாமல் அவன் கைகளுக்குள் அடங்கி... அவன் கழுத்தில்தன் கைகளை மாலையாக்கிக் கொண்டாள் அவள்...

"ஏன்டி... சாயங்காலம் போக்குக் காட்டினாய்...?"

"அது அப்படித்தான்..."

"இதைத்தான் அப்போதே சொல்லி விட்டியே... இப்போது காரணத்தைச் சொல்லு..."

"நாம் சாப்பிடலாமா..."

"நீ சொல்லு, சாப்பிடலாம்..."

"அது... வந்து... சாயங்காலம்..."

அவள் அவனது காதோரம் காரணம் சொன்னாள்... அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்... அவன் பார்வையின் வேகம் தாளாமல்... அவன் மார்பில் அவள் முகம் புதைத்துக் கொண்டாள்...

20

ஆண்... பெண் கூடலுக்கு... அந்தி மாலை நேரம் உகந்ததல்ல என்பது பெரியவர்களின் வாக்கு...

அந்தி நேரத்தில் மனைவியைக் கூடியதால் உக்கிர சேனனுக்குக் கம்சன் ராட்சஸ மகனாக வந்து பிறந்தான்... அவனைக் கிருஷ்ண அவதாரம் எடுத்து விஷ்ணு அழித்தார் என்று புராணம் சொல்கின்றது...

ஐஏஎஸ் தேர்வு எழுதியிருந்த பரதனுக்கு இது தெரியாமல் போனது... பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தவளுக்கு இது தெரிந்திருந்தது...

அதனால்தான்... அந்தியில் அவள் அவனுடன் தனித்து வீட்டிற்குள் அகப்பட்டுக் கொள்ளாமல்... வாசலில் போய் அமர்ந்து போக்குக் காட்டினாள்...

"ஏய்... இதுதான் நீ சொன்ன ஏனோவா...?" மோகக் கடலில் மூழ்கி முத்தெடுக்கத் துடித்துக் கொண்டிருந்த பரதன் வினவினான்...

"ஆமாம்... இப்போதாவது சாப்பிட வருகிறீங்களா..."

"எனக்குப் பசியில்லை..."

"எனக்குப் பசிக்குதே..."

"அடடா... வா... சாப்பிடலாம்..."

தன்பசியைச் சொன்னால்தான்... அவன் பசிக்குச் சாப்பிடுவான் என்பதைத் தெரிந்திருந்த சாரதா... கெட்டிக்காரத்தனமாய் அவனைச் சாப்பிட வைத்து விட்டதை அறியாமல்... அவன் சாப்பிட உட்கார்ந்தான்...

"சப்பாத்தி ரொம்ப டேஸ்ட் சாரதா... வீட்டில் பாத்திரம் பண்டம் அதிகமில்லை... ஆனால்... எப்படி நீ இவ்வளவு ருசியாகச் சமைத்தாய்..."

சாரதா பதில் சொல்லாமல் சிரித்தாள்... சமையலறைளை ஒழுங்கு செய்துவிட்டு அவள் போனபோது... பரதன் அவளுக்காகக் காத்திருந்தான்.

அந்தப் பெரிய அறையில்... தரையில் ஜமுக்காளம் விரித்து... அதில் இரண்டு தலையணைகள் மட்டுமே போடப்பட்டிருந்தன... ஆனால்... அதுவே பட்டு மெத்தையைவிடப் மெத்தையைவிடப் பரம சுகமாக அவர்கள் இருவருக்கும் தோன்றியது....

அதிக நேரம் பரதனைத் தவிக்கவிட்டுவிட்டதை உணர்ந்தவளாய் அவனருகே வந்தாள் சாரதா... உரிமையில்லாமல் இருந்தபோது... அவளிருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்காத பரதன்... உரிமையுள்ள மனைவியாக அவள் அவனது கையருகே வந்ததும்... விலகிச் செல்ல விடாமல் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்...

அந்த அறையில் மின் விசிறியில்லை... அவர்களைச் சுற்றி வசதியுமில்லை... பரதனுக்குக் கட்டாந்தரை பழக்கம்... ஆனால் சாரதா... பாதம் நோகும் என்று பளிங்குத் தரையில் பார்த்து நடந்தவள்...

அன்று அந்த வெறும் தரையில்... பூ மஞ்சத்தில் சயனித்திருப்பதைப் போல உணர்ந்தாள் அவள்... பரதன் அவளது காதோரம் புதிய கதைகளைச் சொன்னாள்... புரியாத ஒர் உலகிற்கு அவளை அழைத்துச் சென்றான்... திரும்பி வர மனமில்லாமல் அவர்கள் அந்த உலகின் தேடலில் ஈடுபட்டார்கள்... தேடித் தேடி ஓய்ந்து... அவர்கள் உறங்க முயன்ற போது... தெருவில் பால் வாங்கப் போகிறவர்களின் பேச்சுக் குரல் கேட்டது...

"விடிந்து விட்டதே..." சாரதா பதட்டமாக எழ முயன்றாள்...

"விடிந்து விட்டதா..." ஏக்கத்துடன் அவளைத் தடுத்துத் தழுவிக் கொண்டான் பரதன்...

அடுத்து வந்த நாள்களில்... அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டனர்... ஒருவரையொருவர் காதலிக்க ஆரம்பித்தனர்... பரதன் கைநிறையச் சம்பாதித்தான்... வாங்கிய சம்பளத்தை அப்படியே சாரதாவின் கையில் வந்து கொடுத்தான்... அவள் திகைத்தாள்...

"இவ்வளவு பணத்தையும் என்னிடம் ஏன் கொடுக்கறீங்க...?"

"நீ தானே என் பொண்டாட்டி... அதனால்தான்..."

"போதுமே... இதை வைத்து நான் என்ன செய்ய?"

"செலவு செய்..."

"எப்படி...?"

"அது உன் விருப்பம்..."

"இது அத்தனைக்கும் ஒரு புடவையை வாங்கி கொள்ள என்னால் முடியும்...

"அது எனக்கு தெரியும்... நீ பிறந்ததில் இருந்து அப்படிப்பட்ட புடவைகளைத்தானே உடுத்தியிருக்கிறாய்.."

"சேச்சே... ஏன்டி... இதற்குப் போய் முகத்தை என்னவோ போல் வைத்துக் கொள்கிறாய்... சாரதா... உன் பிறந்த வீடு நேற்றைய நினைவு... நானும் நாம் வாழும் நம் வீடும் இன்றைய நிஜம்... நீ என் மனைவியாகத் திட்டமிட்டுக் குடும்பத்தை நடத்து..."

"ஒருவேளை நான் செலவாளியாக இருந்து விட்டால்...?"

"யார் நீயா செலவாளி...? மாற்றுப் புடவையாக இரண்டே இரண்டு நூல் புடவை வாங்கிய மகராசியாயிற்றே நீ... உன்னை எனக்குத் தெரியாதா...?"

பரதன் சாரதாவை நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான்... அவனது எதிர் பார்ப்பின்படி... சாரதா அவனுக்கேற்ற

மனைவியாகச் சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தினாள்... சேமித்தாள்...

21

"ஆத்தே... ஆத்தே...

அடி... என்னாச்சோ..."

திரையில் பாடல் காட்சி ஓடிக் கொண்டிருந்தது... தியேட்டரின் மெல்லிய வெளிச்சத்தில் சாரதாவின் பக்கம் நெருங்கி அமர்ந்து... அவளது தோளைச் சுற்றிக் கை கோட்டிருந்தான் பரதன்... அவனுக்குக் குறையாத நெருக்கத்தைக் காட்டி... அவன் தோள்மேல் தலை சாய்த்திருந்தாள் சாரதா...

அவளிடமிருந்து வந்த இதமான நறுமணத்தையும்... மல்லிகையின் மணத்தையும் நுகர்ந்தபடி படம் பார்ப்பது பேரானந்தமாகப் பரதனுக்கு இருந்தது...

அவனது கைவிரல்களோடு... தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டு படம் பார்ப்பது சாரதாவிற்குப் பிடித்தமானதாக இருந்தது... இருவரும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர்... படத்தின் நகைச்சுவைக் காட்சிகளில் இணைந்து சிரித்தனர்...

இடைவேளையின் போது அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு வாங்கி வந்து கொடுத்தான் பரதன்... பிறந்த வீட்டில் எப்போதாவது ஒருமுறை குடும்பத்துடன் வெளியே சென்று பழக்கப்பட்டிருந்த சாரதாவிற்கு... பரதனுடன் வெளியே செல்ல மிகவும் பிடித்திருந்தது... பார்த்துப் பார்த்து அவன் அவளுக்குச் செய்தது புதுமையான அனுபவமாக இருந்தது...

தியேட்டர் வாசலில் அவளை நிற்க வைத்துவிட்டு அவர்களது இரண்டு சக்கர வாகனத்தை எடுக்கப் பரதன் போயிருந்தான்... லேசான குளிர் காற்றிற்காக கைகளை முன்னால் கட்டிக் கொண்டு நின்றிருந்த சாரதா...

"அத்தை..." என்ற அழைப்பைக் கேட்டு...அதிர்ந்து திரும்பினாள்...

யாரோ ஒரு சிறுவன்... ஒரு பெண்ணைத் தொட்டு அழைத்துக் கொண்டிருக்க... சாரதாவின் உள்மனம் விழித்துக் கொண்டு அரற்றியது...

பரதன் தன் ஹுரோ ஹோண்டாவை உயிர்ப்பித்து... அதன் வெளிச்சப் புள்ளிகளின் வட்டத்தை அவள் மேல் விழ வைத்து அருகே வந்து நிறுத்தினான்...

"ஏறிக்க சாரதா..."

அவள் பதில் பேசாமல்... தூரத்தில் சென்று கொண்டிருந்த சிறுவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்... பரதன் அவளது பார்வை போன திக்கில் தானும் பார்த்துவிட்டு... புரியாமல் வினவினான்...

"யார் அது, சாரதா...? யாரை அப்படிப் பார்க்கிறாய்...?"

"சுரேந்திரன்... என் சுரேந்திரன் போகிறான்ங்க..."

பரதன் அவளது நிலையைப் புரிந்து கொண்டான்.... அவளது பெரிய அண்ணனின் மகன் சுரேந்திரனின் சாய்லில் உள்ள சிறுவன் எவனையோ அவள் பார்த்திருக்கிறாள்...

"சாரதா... இங்கே என்னைப் பார்..."

"சுரேந்திரனைக் கூப்பிடுங்க..."

"வண்டியில ஏறு... கிட்டே போய்க் கூப்பிடலாம்..."

சாரதா மறுபேச்சின்றி வண்டியில் ஏறிக் கொண்டாள்... பரதன் குவார்ட்டர்ஸ் வாசலில் போய் வண்டியை சிறுத்தினான்...

"இறங்கு... வீட்டிற்குள் போகலாம்..."

"சுரேந்திரன்..."

"வருவான்... நீ உள்ளே வா..."

இதமாகப் பேசி... அவளை வீட்டிற்குள் அழைத்துப் போய்விட்hன் பரதன்... அவன் வீடு இப்போது தேவையான பொருட்களுடன் அழகாக இருந்தது... முன்னறையில் இருந்த சோபாவில் அவளை உட்கார வைத்துவிட்டு அருகே அமர்ந்து அவளத தலை கோதியவன்...

"என்னடா..." என்றான் ஆதரவாக...

"எனக்குச் சுரேந்திரனைப் பார்க்க வேண்டும் என்றாள் அவள் குழந்தையாக..."

அது எப்படி முடியும்...? இதை அவளிருக்கும் மனநிலையில் எப்படிக் கூறுவது... பரதன் சங்கடப்பட்டான்... அவள் மனதிற்கு இதமாகப் பேசி... அவளைச் சமாதானப்படுத்த முயன்றான்...

"சுரேந்திரனைத்தானே பார்க்க வேண்டும்...? பார்க்கலாம்... இப்போது தூங்கு..."

"எப்போது பார்ப்பது...?"

"விடிந்ததும் போகலாம்"

"நிஜமாய்...?"

"நிஜமாய்..."

"சுரேனை எனக்குக் காட்டுவீர்கள்தானே..."

"கட்டாயம் காட்டுவேன்..."

அவள் குழந்தையாய் அவனுடன் ஒன்றிக்கொண்டு... உறங்கிப் போனாள்.. பரதன் உறக்கத்தைத் தொலைத்தான்..

அவன் தாய்... தந்தை உற்றார்.... உறவினர் என்று யாருமில்லாத அநாதை... ஆனால் சாரதா...? அவளால் எப்படி உறவுகளை மறக்க முடியும்...? அவர்களது நினைவுகளைத் துறக்கமுடியும்...? மீண்டும் அவளுக்கு இழந்த பிறந்த வீட்ச் சொந்தங்களை மீட்டுத் தர அவனால் முடியுமா...?

காலையில் கண் விழித்ததும்... அவனது கைகள் அருகில் துழாவின... வெறுமை தட்டுப்படவும்... அவசரமாய்க் கண்விழித்துப் பார்த்தான்... சாரதா அங்கு இல்லை... எழுந்து சென்றான்... சமையலறையில் அவனுக்கு முதுகு காட்டி நின்று காபி போட்டுக் கொண்டிருந்தாள் சாரதா... குளித்திருந்தாள்... பூஜையறையில் காமாட்சி விளக்கு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தவன்... விடியும்போதே அவள் தெய்வத்தைச் சரணடைந்து விட்டாள் என்பதைப் புரிந்துகொண்டான்... காபியுடன் திரும்பியவள்... சமையலறை வாசலில் பரதனைக் கண்டதும் மலர்ச்சியாகச் சிரித்தாள்...

"இவளா நேற்று இரவு அப்படி அடம் பிடித்தவள்..."பரதனுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"என்ன ஆச்சு இன்றைக்கு... எப்போதும் காபியோடு வந்தால்தான் எழுந்திருப்பேன்னு அடம் பிடிப்பீங்க... இப்ப என்னடான்னா... எழுப்பி விடாமலே எழுந்து வந்துவிட்டிங்க... எப்போதிருந்து குட்பாயாய் மாறினீங்க..."

"ஆக... என்னை உன் பையனாக்கப் பார்க்கிறாய்..."

"பின்னே இல்லையா...?"

"ஏன்டி... நான் என் பையனுக்கு உன்னை அம்மாவாக்கணும்னு நினைத்தால்... நீ இப்படித் தப்பிக்கப் பார்க்கிறாயா...?"

பரதனின் கரங்கள் அவளது இடுப்பை வளைத்து அருகில் இழுக்க... அவள் காபி தளும்பி விடாமல் இருக்க... சமையல் மேட¡யில் அவசரமாய்க் காபியை வைத்தாள்...

"காலையிலேயே ஆரம்பித்தாகி விட்டதா..."

"ஆமாம்... அதுக்கு என்னாங்கிற இப்போ...?"

"அப்பா... அச்சு அசல் ரவுடிதான்..."

"ஆமாம்... காதல் ரவுடி..."

"முரடு... நீங்கள் இத்தனை முரடன்னு எனக்குத் தெரியாமல் போச்சே..."

"ஆமாம்... நான் முரடன்தான்..."

"எதுக்கெடுத்தாலும் ஆமாம் தானா... இப்போது என்னதான் வேண்டும் உங்களுக்கு...?"

"நீதான் வேண்டும்..."

முதல் நாளின் நினைவை அவள் மனதிலிருந்து மறக்கடிக்க ஆரம்பித்தான் பரதன்... அவனின் வேகத்தில் மூச்சுத் திணறிய சாரதாவின் மனது மெல்ல ஆழத்தில் அமிழ்ந்தது... சுரேந்திரனின் நினைவு... அவளின் மனதில் வேறு நினைவுகளை எழவிடாமல்... அவளை மோக வெள்ளத்தில் தள்ளி விட்டான் பரதன்... அதில் மூழ்க ஆரம்பித்தவளின் மனதில் பரதனின் ஆண்மை மட்டுமே நிறைந்திருந்தது...

பரதனிக் வெப்பமான மூச்சுக்காற்று கன்னத்தில் படுவதும்... அவனின் சூடான முத்தங்கள் முகம் முழுவதும் பதிவதும் மட்டுமே உணர்வில் இருக்க... சாரதா கிறங்கிப் போனாள்... அவன் கைகளுக்குள் அடங்கிப் போனாள்...

அன்று காலை கல்லூரிக்குத் தாமதமாகப் போன பரதன்... அடுத்து வந்த நாள்களில் சாரதாவின் முகத்தில் சிறிதளவு சோர்வு தெரிந்தாலும்... இதே வழிமுறையைக் கையாண்டு அவளைத் தன்னை மட்டுமே நினைக்க வைத்தான்... அவனது ஆண்மையின் ஆவேசத்தில்... அவளது பெண்மை நிறைவைக் கண்டதில் அவனுக்குள் பெருமிதமும்... கர்வமும் உதித்தது... அவளது மனதையும்... உடலையும் ஜெயித்த வெற்றிப் பெருமிதம் அது...

"எப்படிடீ... இப்படிப் பட்டுப் போல இருக்கிறாய்..."

உழைத்து உரமேறிய அவனது இரும்புக் கையின் வலிமையில் தன்னை இழக்கும் அவள் கண் மூடி அவன் மார்பில் உன்றிக் கொள்வாள்.. அவனது கன்னத்தின் ரோமத் துணுக்குகள் முகத்தில் உராய...

"அப்பா... என் கன்னம் போச்சு..."என்று முறைப்பாள்.

சாரதா பிறந்த வீட்டை மறந்து... பரதனுடனான வாழ்வில் முழுமையாகக் கலந்துபோனாள்...

இருவராக அந்த ஊர் மண்ணை மிதித்தவர்கள்... மூவராகப் போவதின் அறிகுறி... சாரதாவிடம் தென்பட்டது... அவள் தாய்மை அடைந்தாள்...

22

"எப்படியிருக்கிறான், டாக்டர்...?" பூபதியின் குரலில் கவலை தொனித்தது...

"ம்... ஜுரம் நூறு டிகிரியைத் தாண்டியிருக்கு... எப்படியிருக்கிறான்னு என்னிடம் கேட்டால் நான் என்ன சொல்ல...?" டாக்டரின் குரலில் கோபம் தெரிந்தது...

"நாங்க என்ன செய்வது டாக்டர்...? ஒருவாரம் நன்றாக இருக்கிறான்... மறுவாரமே காய்ச்சலில்

விழுந்து விடுகிறான்... என்ன செய்வதுன்னு ஒன்றும் புரியவில்லையே..." காயத்ரி சுரேந்திரனைத் தன் மடியில் இறுக்கி கொண்டு கண் கலங்கிக் கேட்டாள்.

அவளது விழியிலிருந்து வடிந்த நீர் முத்துக்கள்... கன்னத்தில் கோடாக இறங்க... மனைவியின் துயரம் கண்டு சகிக்க முடியாமல் முகம் திருப்பிக் கொண்டான் பூபதி...

"அழுது ஒன்றும் ஆகப் போவதில்லை மிஸஸ் பூபதி... உங்க மகனின் நினைவு பூராவும் அவனுடைய அத்தையின் மேல் இருக்கு... ஒரு முறை அவனுடைய அத்தையைக் கண்ணில் காட்டினீங்கன்னா... எல்லாம் சரியாகிவிடும்..." டாக்டர் ஊசி மருந்தைச் சிறுவனின் தோள்ப்பட்டையில் ஏற்றியபடி இதமாகக் கூறினார்...

"அந்த ஓடுகாலியை எங்கே போய்த் தேடிப் பிடிப்பது டாக்டர்... அவள்தான் போன இடம் தெரியாமல் மாயமாய்

மறைந்துவிட்டாளே..." காயத்ரி ஆத்திரத்துடன் கூற...

"காயத்ரி.. ஜாக்கிரதை.." என்று அதட்டினான் பூபதி..

"என்னையேன் அதட்டுகிறீங்க..."

"யாரைப் பார்த்து ஓடுகாலி என்கிறாய்... பல்லைக் கழட்டி விடுவேன்... ஒழுங்காய் பேசு..."

"முதலில் உங்களுடைய தங்கையை ஒழுங்காய் வளர்க்கத் தெரியவில்லை... என்னை அதட்ட வந்மு விட்டிங்களா..."

"என் தங்கையின் வளர்ப்பைப் பற்றி நீயெல்லாம் பேசக் கூடாது... உனக்கு என்னடி தெரியும்... என் தங்கையைப் பற்றி..."

"அதுதான் ஊருக்கே தெரியுமே... தோப்பைக் காவல் காத்த வேலைக்காரனோடு அவள் ஓடி விட்டான்னு..."

"காயத்ரி..."

ரத்தம் கொதிக்க பூபதி கை ஓங்கப் போக...

"வெரிகுட்..." என்றார் டாக்டர்...

"டாக்டர்..."

"இப்படித்தான் இந்தச் சின்னப் பையனின் முன்னால் வீட்டில் நடந்து கொள்கிறீங்களா... பின்னே... இவன் மனதளவில் பாதிக்கப்படாமல் என்ன செய்வான்...?"

குற்ற உணர்வுடன் பூபதி தலை குனிந்து கொண்டான்... டாக்டர் இப்போது காயத்ரியைப் பார்த்துக் கண்டிப்புடன் பேச ஆரம்பித்தார்.

"நீங்கள் உங்களைக் கண்ட்ரோல் பண்ணிக் கொள்ள வேண்டும், மிஸஸ் பூபதி... உங்கள் கணவரின் தங்கையின் மீது உங்களுக்கு இருக்கும் கோபத்தை வெளிப்படுத்த இது நேரமில்லை... உங்கள் மகன் அந்தப் பெண்ணை நேசிக்கிறான்... அதை நினைவில் வையுங்கள்..."

"அவள் மாயக்காரி டாக்டர்.. கைகாரி... என் புருசனை என்னிடமிருந்து பிரித்தது போதாதுன்னு என் மகனையும்

என்னிடம் ஒட்டவிடாமல் செய்துவிட்டாள் அந்த ஜாலக்காரி..."

"ஓ நோ... சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களுடைய நாத்தனாரைத் திட்டுவதையே நீங்கள் குறிக்கோளாக வைத்திருக்கிறீங்க... இந்தப் போக்கை நீங்க மாற்றிக் கொள்ளாவிட்டால்... பாதிக்கப்படப் போவது உங்கள் மகன்தான்..."

"அவளை மறந்தால்தான் என் பிள்ளை தேறுவான் டாக்டர்..."

"மறக்க நீங்கள் விடமாட்டேன் என்கிறீங்களே..."

"நானா அவனை மறக்க விட மாட்டேன் என்கிறேன்..."

"ஆமாம்... தினமும் அந்தப் பெண்ணைத் திட்டுவதாய் நினைத்துக் கொண்டு... அந்தப் பெண்ணின் நினைவை உங்கள் மகனின் மனதில் நீங்களே உண்டாக்குகிறீங்க... இது உங்களுக்குப் புரியுதா... இல்லையா...?"

"அந்தப் பழிகாரி பண்ணிவைத்த வேலையால்... என் பிள்ளை இப்படிக் காய்ச்சலில் படுத்துவிட்டானே டாக்டர்..."

"இப்போதுதானே சொன்னேன்... ட்ரீட்மென்ட் உங்கள் மகனுக்குக் கொடுக்க வேண்டுமா...? இல்லை உங்களுக்குக் கொடுக்க வேண்டுமா...?"

டாக்டர் கடுமையாய்க் கேட்கவும்... காயத்ரி வாயை மூடிக் கொண்டாள்... மருந்து... மாத்திரைகளை எழுதிக் தந்தபின்... சுரேந்திரனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்த டாக்டர் கவலையுடன் பூபதியைப் பார்த்தார்...

"நீங்கள் கொஞ்சம் வெளியே இருங்கம்மா..."

காயத்ரி வெளியேறும்போது... சுரேந்திரனை வாங்கிப் பூபதியிடம் கொடுத்தார் டாக்டர்...

"அவன் இருக்கட்டும்..."

அந்த நிலையிலும் டாக்டரைச் சந்தேகப் பார்வை பார்த்துக் கொண்டே அறையை விட்டு அகன்றாள் காயத்ரி...

"பூபதி..."

"சொல்லுங்க டாக்டர்..."

"உங்கள் தங்கை இருக்கும் இடம் உங்களுக்கு தெரியுமா?"

"உண்மையிலே தெரியாது டாக்டர்... அவள்... இவர்கள் எல்லோரும் நினைப்பதுபோல் வேலைன் காரனுடன் ஓடிப் போகவில்லை... அவளுக்குப் பாத்திருந்த மாப்பிள்ளை செய்த அயோக்கியத்தனத்தை... கல்யாணத்திற்கு முதல் நாளிரவு அவள் கண்கூடாய்ப் பார்த்துவிட்டாள்... என்னிடம் வந்து கல்யாணத்தை நிறுத்தச் சொல்லி கதறி அழுதாள்... இந்தப் பாவிகள் கல்யாணத்தை நிறுத்தவிட மாட்டான்களே... அதனால்... நான்தான்... என்னிடம் வேலைபார்த்த பையன் கையில் தாலியைக் கொடுத்து என் கண் முன்னால் அவள் கழுத்தில் கட்டச் சொன்னேன்... அவள்.. அவளுடைய புருசனுடன்தான் ஊரைவிட்டுப் போனாள். ஓடிப் போகவில்லை..."

"ரிலாக்ஸ் பூபதி... ரிலாக்ஸ்... அவங்க செல் நம்பர் ஏதாவது தெரியுமா...?"

"தெரியாதே..."

"அட்லீஸ்ட்... உங்கள் நம்பருக்கு அவங்க கூப்பிடலாம், இல்லையா...?"

"அதை வைத்து அவர்கள் இருக்கும் இடத்தை இவங்க கண்டு பிடிக்கத் திட்டம் தீட்டினாங்க டாக்டர்... நான்தான் அந்த செல்லையே சுக்கு நூறாய் உடைத்துவிட்டு... புது செல்... புது சிம்கார்டு வாங்யிப் போட்டேன்..."

எதுவும் செய்ய முடியாமல் அனுதாபத்தோடு பார்த்த டாக்டரிடம் விடைபெற்று... மகனைத் தோளில் தாங்கியவாறு வெளியே வந்தான் பூபதி... அவன் மனதில் அந்த நாளின் நினைவு வந்தது...

பரதனும்... சாரதாவும்... பின் வாசல் வழியாக வெளியேறி... இருளில் கலந்து மறைந்ததும்... பூபதியின் மனதில் துக்கம் பொங்கியது...

எல்லாமும் இருந்தும்... எதுவும் வேண்டாமென்று... கட்டிய புடைவையோடு... கணவனின் பின்னால் சென்றுவிட்ட தங்கையை நினைக்கையில் மனதை யாரோ ஒரு இரும்புக் கை ராட்ஸஸன் பிசைவதைப் போல உணர்ந்தான் பூபதி...

"சாரதா... என் கண்மணியே..." வாய்விட்டு இனி அவளது பெயரை அந்த வீட்டில் சொல்ல முடியாது என்று அறிந்தவனாய் மனதிற்குள்ளேயே அரற்றிக் கொண்டான் அவன்.

"என்ன... இப்படி மசமசன்னு நின்னுக்கிட்டு இருக்கீங்க..." காயத்ரி வேகமாக வந்து கொண்டிருந்தாள்...

அவசரமாய்த் தன் முகபாவனையை மாற்றிக் கொண்டு இயல்பாய் இருக்க முயற்சி செய்தவாறு...

"வேறு என்னத்தடி செய்யச் சொல்கிற...?" என்று கேட்டான் பூபதி...

"மாப்பிள்ளையும்... அவருடைய பிரண்ட்ஸும் மொட்டை மாடியில் பேசிக்கிட்டு இருங்காங்க... அவங்களுக்கு என்ன வேண்டும்... எது வேண்டும்ன்னு கேட்டுச் கொடுங்க..."

"அவன் ஊற்றிக் கொடுக்கச் சொல்வான்... என்னை அதைச் செய்யச் சொல்கிறாயா...?"

மனதிற்குள் கேட்டுக் கொண்டு... மனiவியிடம் இருந்து தப்பிக்க மாடிப் படியை நோக்கிச் சென்றான் பூபதி...

"சாரதா... சாரதா..." என்று அழைத்தபடி காயத்ரி... சாரதவின் அறையை நோக்கிப் போகவும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது...

"எங்கேடி போகிற...?"

"சாரதாவைச் சாப்பிட வைக்க வேண்டாமா...?"

"அவள் இப்போதுதான் என்கூடச் சாப்பிட்டாள்..."

"நீங்கள் சாப்பிட்டு விட்டிங்களா...?"

தங்கை வெறும் வயிறோடு வீட்டை விட்டு வெளியேறி இருக்கையில்... தான் மட்டும் சாப்பிடமனமின்றி....

"ஆமாம்..."என்று பொய் சொன்னான் பூபதி...

"அது எப்படி நானில்லாமல் நீங்கள் அவளோடு சேர்ந்து சாப்பிடலாம்?"

"ஏன்டி... நாளைக்குக் கல்யாணமாகிப் புருசன் வீட்டுக்குப் போகப் போகிறாள்... கடைசியாய் அண்ணனுடன் சேர்ந்து சாப்பிட ஆசைப்பட்டாள்... கூடச் சாப்பிட்டேன்... அது ஒரு பெரிய தப்பா...?"

அப்படிச் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஆற்றாமையில் மனைவியிடம் எரிந்து விழுந்தான் அவன்...

"இதற்காகவே அவளை வீட்டை விட்டு ஓட்ட வேண்டும்..."

தன்னையுமறியாமல் காயத்ரி புலம்பிவிட... பூபதி ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான்...

அதுதான் ஆகாத் மாப்பிள்ளையை உன் கொழுந்தன் கூட கூட்டுச் சேர்ந்துக்கிட்டு பார்த்து வைத்து... என் தங்கையை வீட்டை விட்டு ஓட்டி விட்டாயேடி.... பாவி...! அவன் மனம் எரிந்து கொண்டிருந்தது...

திருமண வீடென்றும் பாராமல் கணவன் கை நீட்டி அடித்துவிடவும்... காயத்ரி கன்னத்தைப் பிடித்துக் கொண்டு சிலையாக நின்று விட்டாள்...

"காயத்ரி.. சாரதாவைக் கூப்பிடும்மா.. சாப்பிடட்டும்.."

பூங்கோதை நேரம் காலம் தெரியாமல் சொல்லிக் கொண்டு வர... கணவனிடம் காட்ட முடியாத கோபத்தை மாமியாரிடம் காட்டினாள் காயத்ரி...

"உங்கள் மகளைக் கூப்பிட உங்களுக்கு வாயில்லையா...? நான்தான் போய்க் கூப்பிடணுமா...? நானென்ன சேடிப் பெண்ணா...?"

"ஏம்மா... இப்போது நானென்ன குத்தமாகச் சொல்லி விட்டேன்?" ""

"உங்களுக்கும்... உங்கள் மகனுக்கும் எதுவுமே குத்தமாய்த் தெரியாது... மகாராணிக்குப் பசித்தால் தானாய் வந்து சாப்பிட்டுக் கொள்ள மாட்டாளா...? நான்தான் போய் அழைக்கணுமா..?"

காயத்ரி... வேகமாய் மாடியேறி... அவர்களது அறைக்குப் போய்விட்டாள்...

பூபதிக்குத் தெரியும்... அவள் மனம் விட்டு அழத்தனிமையைத் தேடிப் போயிருக்கிறாள் என்பது... இனிக் காலைவரை காயத்ரி சாரதாவைப் பற்றிக் கேட்க மாட்டாள் என்ற நிம்மதி உணர்வோடு தாயைப் பார்த்தான் அவன்...

"ஏம்ப்பா... நான் இப்ப என்ன சொல்லி விட்டேன்னு இப்படி சடைத்துக்கிட்டுப் போகிறாள் உன் பெண்டாட்டி... கல்யாண வீட்டில் இப்படி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இவள் பேசினால் பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க...?"

பூங்கோதை சாரதாவை மறந்துவிட்டு... மருமகளைப் பற்றி மகனிடம் பஞ்சாயத்து வைத்தாள்...

24

காயத்ரியைச் சமாளித்ததுபோல்... பூங்கோதை யையும் சமாளிக்க அவசரத் திட்டமொன்று... பூபதி மனதில் உதயமானது...

"ஏம்மா... நீங்க... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வாங்கன்னு சொல்லி... நன்றாகக் கவனித்துக் கொண்டிங்களா...?"

"அதில் குறை வைப்பேனா, ஐயா... பெண் எடுத்தால்கூட ஏனோ தானோன்னு இருந்துவிடலாம். பொண்ணைக் கொடுக்கப்போகிறோம்... கவனமாய் வரவேற்க வேணாமா?"

"அதில்தான் இப்ப பிரச்சனை..."

"என்ன பிரச்சனைடா..."

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை நீங்க வரவேள்கிற ஜோரில... காயத்ரியின் குடும்பத்து ஆளுகளைக் கண்டுகொள்ளவே இல்லையாம்... அவளுக்கு அது வருத்தம்..."

"அப்படியா சமாச்சாரம்... இது எனக்குத் தெரியாமல் போச்சே... ஆனாலும் தம்பி... நான் சம்பந்தி வீட்டு ஆளுகளை நல்லபடியாத்தான் கவனிச்சுக் கிட்டேன்..."

"நீங்களா அப்படி நினைத்துக் கொண்டால் அதற்கு யார் பொறுப்பு... போதாக் குறைக்கு... அவள் வீட்டு மனிதர்களை நான் சாப்பிட வைப்பதற்குப் பதில் சாரதாவோடு சேர்ந்து சாப்பிட்டு விட்டேன்னு சொன்னேனா... அதுவும் அவளுக்குத் தாங்கவில்லை..."

"இது வேறயா...? அப்போ... சாரதா உன்கூடச் சேர்ந்து சாப்பிட்டு விட்டாள்ன்னு சொல்லு..."

"ஆமாம்மா... நான்தான் காலையில் சீக்கிரமே கண் விழிக்கணும்ணு தூங்கப் போகச் சொன்னேன்..."

"அதுவும் சரிதான்... நீ நல்ல வேலை செய்தே..."

"நீங்க இப்ப என்ன வேலை செய்யப் போகிறீங்க...?"

பூங்கோதை அவசரமாய் அந்த இடத்தைவிட்டு அகல... 'அப்பாடி...' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் பூபதி...

இரண்டாவது ஆளையும் திசை திருப்பி விட்டாச்சு...

""பூபதி... பூபதி...

மணிவாசகத்தின் குரல் அழைக்க... அடுத்த சமாளிப்பிற்குத் தன்னை ஆயத்தப் படுத்திக்கொண்டு... தந்தையிடம் போய் நின்றான்...

"என்னப்பா...?"

"சாரதாவைக் கொஞ்சம் கூப்பிட்டுக் கொண்டு என் ரூமிற்கு வாப்பா..."

"எதுக்குப்பா..."

"குடும்ப நகைகளில் அவளுக்கானதை இப்போதே கொடுத்து விடலாமுன்னு நினைக்கிறேன்டா..."

"அப்பா... இதுவோ கல்யாண வீடு... ஜன சந்தடி அதிகமாக இருக்கு... நாளைக்குக் கல்யாணத்தில் போட்டுக் கொள்ளப் புதுமாடல் நகைகளை ஏற்கெனவே வாங்கி வைத்து விட்டோம்...அதையே சாரதா போட்டுக் கொள்ளட்டும்... பரம்பரை நகைகள் பழைய கால டிசைனில் இருக்கும்... அதை இப்போதே ஏன் கொடுக்க வேண்டும்...?"

"பழைய வைரத்திற்கும்... மரகதத்திற்கும் மதிப்பு அதிகம்டா..."

"நான் இல்லைன்னா சொன்னேன்... மதிப்பானவைகளை அவள் மறுவீடு வந்து... சீர்வரிசையோடு போகும்போது... அவள் புகுந்த வீட்டிற்கு முன்னால் வைத்துக் கொடுக்கவேண்டும்... அதுதான் நமக்கும் பெருமை... நகைகளுக்கும் பாதுகாப்பு..."

வாய்க்கு வந்ததைச் சொல்லி... மணிவாசகத்தைச் சமாளித்தான் பூபதி... ரொம்பவும் அக்கறையாய்... அவரை அழைத்துக் கொண்டு மாடிப் படியில் ஏறினான்..

"வாங்கப்பா... மாப்பிள்ளைக்கு வசதி சௌகர்யமாயிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்டுவிட்டு வந்து விடுவோம்..."

"அப்படியா... அதுக்கு நாள் வரணுமா...? நீ போய்க் கேட்டால் பத்தாதா...?"

"பெண்ணைப் பெற்றது நீங்களா...இல்லை... நானா?" பூபதி எரிச்சலுடன் முறைக்க... வாயை மூடிக் கொண்டு மகனைப் பின் தொடர்ந்தார் மாணிக்கவாசகம்...

"ஏனப்பா... மாப்பிள்ளை குடும்பத்திற்கு.. அந்தப் பக்கம் இருக்கிற ரூம்களைக் கொடுத்திருந்தோமே... நீ என்னவோ மொட்டை மாடிக்குப் போகிற...?"

"மாப்பிள்ளை மொட்டை மாடியில்தான் காற்றாட நின்று கொண்டிருந்தாராம்... காயத்ரி சொன்னாள்..."

பூபதி வன்மத்துடன் தகப்பனாரின் முகத்தைப் பார்த்துப் கொண்டேமாடியேறினான்.

"வாங்க... வந்து பாருங்க... உங்க மகளுக்காக நீங்க தேர்ந்தெடுத்திருக்கிற மாப்பிள்ளையின் லட்சணத்தை நீங்களே வந்து நேரில் பாருங்க..!"

மணிவாசகமும்... பூபதியும் மொட்டை மாடிக்குப் போனபோது... முழுப்போதையில் கல்யாண சுந்தரம் அவர்களை எதிர் கொண்டான்.

25

அங்கே கண்ட காட்சியைக் கண்டு... அவர்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சைக் கேட்டு... மணிவாசகம் அதிர்ச்சியடைந்தார்... ஆனால்.. அவரால் கல்யாண சுந்தரத்தைக் கண்டித்துப் பேச முடியவில்லை... கராணம்... கல்யாண சுந்தரத்தின் தோளின் மீது கை போட்டுக் கொண்டு... போதையில் குழறிக் கொண்டிருந்தது அவர் பெற்ற இரண்டாவது மகனும்... மறுநாள் மாப்பிள்ளையாக மணமேடை ஏறப் போகிறவனுமான ரகுபதி...

"இந்தா மாப்பிள்ளை... இன்னும் கொஞ்சம் ஊற்றிக்க..."

"உனக்குத் தாராள மனசுடா மச்சான்... நான் கேட்காமலே பாட்டிலை என் பக்கம் கொடுக்கிறாயே..."

"என் தங்கச்சியையே உனக்குக் கொடுக்கப் போகிறேன்... பாட்டிலை என்னடா மாப்பிளை... பிசாத்து பாரின் சரக்கு..."

"மெல்லப் பேசுடா மச்சான்... உன் அண்ணன்காரனுக்குக் காது கேட்டுவிடப் போகிறது..."

"கேட்டால் கேட்கட்டும்... அவன் இருப்பான் சைவப் பட்சியாய்... அவனைப்போல நானும் இருக்கணும்னு நினைத்தால் அது நடக்குமா...?"

"உன் அப்பன் வந்து விட்டால் என்னடா செய்வாய்...?"

"அவனுக்கும் ஒரு கிளாஸில் ஊத்தும்பேன்... இது எப்படி இருக்கு..? ஹா..ஹா.."

மணிவாசகத்திற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை... அவர் முன்னால் வாயைத் திறக்கக் கூடப்பயப்படும் ரகுபதியா இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறான்...?

"கேட்டிங்களா அப்பா.. உங்க சின்ன மகன்... உங்களுக்கும் ஒரு கிளாஸில் ஊற்றிக் கொடுக்கிறேன் என்கிறான்... போய் அவனுக்கு கம்பெனி கொடுக்கறீங்களா..?"

பூபதி வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினான்... அதன் வேதனை தாங்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டு மடமடவென்று... மாடிப்படிகளில் இறங்கி விட்டார் மணிவாசகம்...

"என்னப்பா...இறங்கி வந்துட்டிங்க..."

"வேறு என்னத்தைடா செய்யச் சொல்கிற...? அந்தக் கண்ராவியைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லையே..."

"அப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்த்துப் பார்த்துப் பொறுக்கி எடுத்துவிட்டு... இப்போது விடிந்தால்

கல்யாணம் என்கிறபோது கண்கொண்டு பார்க்கமுடிய வில்லைன்னா என்ன அர்த்தம்...? அவனை அங்கேயே சட்டையைப் பிடித்து நான்கு கேள்வி கேட்கிறதை விட்டு

விட்டு... இப்படிக் கையாலாகாமல் பேசுகிறீங்களே... உங்களிடம் இருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை அப்பா..."

மணிவாசகம் அவசரமாய்ச் சுற்று முற்றும் பார்த்துவிட்டுப் பெரிய மகனைக் கண்டித்தார்...

"அடக்கி வாசி பூபதி... இது நம் வீட்டு விவகாரம். வெளியில் தெரியக் கூடாது..."

"என்னப்பபா... நீங்க போய் இப்படிப் பேசுகிறீங்க... கோவிலாய் இருந்த வீடுப்பா... இது... இங்கே போய்க் குடித்துவிட்டுக் கும்மாளம் போடுகிறான்... அவனை என்னன்னு தட்டிக் கேட்காமல் என் வாயை அடைக்கப் பார்க்கிறீங்க..."

"அவன் குடிக்க மட்டுமா செய்தான்...? தோட்டத்தில் நடந்த நிகழ்வின் ஞாபகத்தில் பூபதி பல்லைக் கடித்தான்..."

"அவன் மட்டும் கொட்டம் அடிச்சான்னா ஏன்னு கேட்கலாம்... நம்ம வீட்டில் பிறந்திருக்கும் கருமாந்திரமும் சேர்ந்தில்லடா கொட்டம் அடிக்குது...? இதில் அவனை மட்டும் எப்படிக் குற்றம் சொல்ல முடியும்...?"

"அதுக்காக கேட்காமல் விட்டு விடுவீங்களா?"

"கேட்டால் என்ன சொல்வான்? உன் மகன்தான் என்னைத் தண்ணியடிக்கக் கூப்பிட்டான்னு சொல்வான்... நாம எங்கே போய் முகத்தை வைத்துக் கொள்வது?"

"சரிப்பா... இப்படி ஒருகுடிகாரனுக்குப் போய் நம் சாரதாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பது...?"

"நம்ம பயலும் குடிகாரனா இருக்கானேடா... இவனுக்கு அவங்க வீட்டில் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் போது... நாம மட்டும் எப்படி... மாட்டேன்னு சொல்வது...?"

'நல்லவேளை... சாரதா தப்பித்து விட்டாள்...!' என்று நினைத்துக் கொண்டான் பூபதி...

அவன் எதிர் பார்த்ததுபோல்தான் மணிவாசகம் நடந்து கொள்கிறார்... கல்யாண சுந்தரம் சாதுர்யமானவன்... கெட்டிக்காரத்தனமாய் ரகுபதியைத் தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறான்...

சாரதாவின் எதிர்காலம் சிதிலமடைவதைப் பற்றி அந்த வீட்டில் யாரும் கவலைப்படப் போவதில்லை என்பதை நன்றாக உணர்ந்திருந்தும்... அதை நேரடியாய்க் கண்ட பின்பு... பூபதிக்கு... அந்த வீடே... சூன்யமாய்த் தோற்றமளித்தது....

26

எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால்... ஒரு மனிதன்... விடிந்தால் திருமணம் என்ற நிலையில்... பெண் வீட்டிலேயே... பெண் வீட்டில் வேலைக் காரியோடு தோட்டத்தில் சல்லாபிப்பான்...? அதற்கும் அடுத்து... பெண் வீட்டு மொட்டை மாடியிலேயே மது அருந்திக் களிப்பான்...?

கல்யாண சுந்தரத்திற்கு அந்தக் கல்மனம் இருந்தது.. அவன் எதற்கும் துணிந்தவனாக... எதைச் செய்யவும் அஞ்சாதவனாக இருந்தான்...

குடித்துக் கும்மாளமிட்ட அயர்வில் உறங்கி எழுந்தவன்... விடியலின்போது... எழுந்து குளித்து... முதல் நாளின் இரவின் சுவடு தெரியாமல்... புது மாப்பிள்ளையாய்ப் பட்டுவேட்டி... பட்டுச் சட்டைபோட்டு... சென்டில் குளித்து.. கழுத்தில் மாலையோடு... மணமேடைக்கு வந்துவிட்டான்...

காயத்ரி... எழுந்ததும்... மாமியார் சாரதாவை எழுப்பித் தயார் பண்ணட்டும் என்ற நினைவுடன்... தன் மகனைக் குளிக்க வைத்து... தானும் ஒப்பனை செய்து கொண்டு தயாராகிக் கொண்டிருக்க... பூங்கோதையோ மருமகளின் கோபத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக... அவளின் பிறந்த வீட்டை உபசரிப்பதில் கவனமாக இருந்தாள்...

"சாரதாவிற்கு வாங்கிய புது நகை செட்டை நான் இன்னும் பார்க்கவில்லையே..." என்று காயத்ரியின் அம்மா கேட்கவும்.. அங்கு வந்த மருமகளை அழைத்து...

"காயத்ரி... சாரதா ரெடியாகிவிட்டான்னா... உன் அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு போய்... அவளின் நகைகளைக் காட்டு..." என்று கூறினாள்...

"சாரதாவை நீங்க ரெடி பண்ணவில்லையா...?"

"இல்லையேம்மா.. நான் உன் வீட்டு ஆளுகளுடன் பேசிக் கொண்டில்ல இருந்தேன்..."

கவனமாய்... தான்... தன் மருமகளின் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிட்டதை மருமகள் உணரும் படி பூங்கோதை கூற... காயத்ரி அவசரமாய்... சாரதாவைத் தேடிப் போனாள்...

"சாரதா... சாரதா..."

அவள் அறைக்கதவில் கை வைக்கும்போகே... கதவு திறந்துகொள்ள... உள்ளே அவசரமாய்ப் போய்த் தேடினாள். பாத்ரூமிலும்... மற்ற எல்லா இடங்களிலும் சாரதாவைக் காணோம் என்பதை உணர்ந்து கொண்டபோது அவள் முகம் பயத்தில் வெளுத்து விட்டது...

"பெண்ணை அழைத்துக் கொண்டு வாங்க..."

தங்கைக்கு முதலில் திருமணம்... அதற்குப் பின்னால்தான் தன் திருமணம் என்று பெரிய தியாகசீலன் போல் ரகுபதி வசனம் பேசியிருந்தான்... முதலில் மணமேடை ஏறிய கல்யாண சுந்தரம்.... காயத்ரி... வியர்வை பொங்கும் முகத்துடன் கணவனைத் தேடி ஓடினாள்...

"என்னங்க... இங்கே கொஞ்சம் வாங்க..." மற்றவர்களுக்குச் சந்தேகம் வராமலிருக்க... எல்லோரையும் போல உடை உடுத்தி... உறவினர்களுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வளையவந்து கொண்டிருந்து பூபதி...

"என்னடி... ஏன் இப்படிப் பதட்டமாய் ஓடி வருகிறாய்...?" என்று ஒன்றும் அடிறயாதவன் போல் கேட்டான்...

"ஸ்ஸ்... சத்தம் போடாமல் கிட்ட வாங்க..."

காயத்ரி அவன் காதோடு... சாரதாவைக் காணோம் என்று அவனுக்கு மட்டும் தெரிந்த ரகசியத்தைப் புதிதாய்ச் சொல்கிதாய் நினைத்துக் கொண்டு சொல்ல..

"அப்படியா..." என்று... வராத பரபரப்பை வரவழைத்துக் கொண்டே கேட்டான் பூபதி...

""ஆமாம்... இப்ப என்ன செய்வது...?

"எல்லா இடத்திலும் தேடிப் பார்த்துவிட்டியா?"

"தேடிட்டேன்ங்க... அவளைக் காணோம்..."

நேரம் நகர்ந்தது... மணவறையில் இருந்த ஐயர் அவசரப்பட... எல்லோரும் பெண்ணைத் தேட ஆரம்பித்தனர்... அடுத்த ஒரு மணி நேரத்தில்... திருமணப் பெண் அங்கே இல்லையென்ற செய்தி ஊர்ஜிதமானது...

குணசேகரனுக்கு மனம் குளுகுளுவென்று இருந்தது. பூபதி கூட அறியாத ரகசியம் ஒன்று உண்டு...

அது.. சாரதாவையும்... பரதனையும் பின் வாசல் வழியாக பூபதி அனுப்பிக் கொண்டிருந்ததைக் குணசேகரன் பார்த்து விட்டான்... அவன் மனதில் பூபதியின் நடவடிக்கையின் மேல் நல்ல மதிப்பு உண்டானது... ஒன்றும் அறியாதவன் போல் அவன் உள்ளே போய்விட்டான்...

## 27

நடக்காத திருமணத்தில் கலந்து கொள்ளக் குணசேகரன்... மன அமைதியுடன் அங்கேயே மாப்பிள்ளைத் தோழனாக ஒட்டிக் கொண்டிருந்தான்...

அவனுக்குக் கல்யாண சுந்தரத்தின் முகம் போகும் போக்கைக் காண வேண்டுமென்று ஆவல் இருந்தது...

இவன் நினைத்ததெல்லாம் நடக்கிற தெனாவெட்டுத்தானே இவனை இப்படித ஆடவைக்கிறது... முதல் முதலாய்.. இவன் நினைக்காதது நடக்கப் போகிறது... பெண்களைக் கிள்ளுக் கீரையாக நினைத்தானே... இவனைக் கிள்ளுக்கீரையாய்த் தூக்கிப் போட்டுவிட்டு ஒருத்தி கல்யாண வீட்டைவிட்டே ஓடிப்போய் விட்டாள்... இப்போது இவன் என்ன செய்வான்...?

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கல்யாண சுந்தரம் மாலையைக் கழட்டிப் போட்டுவிட்டு... மணவறையை விட்டு எழுந்துவிட்டான்... சிவந்த நிறமுடைய அவன் முகம் கருத்துவிட்டது...

"என்னைய்யா பெண்ணைப் பெத்து வைச்சிருக்கிறீரு..."

தாண்டவராயனின் குடும்பம் தாண்டிக் குதித்தது... மணிவாசகத்தை கண்டபடி ஏசியது... பொறுக்கமாட்டாத பூபதி... வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு... தாண்டவராயனின் சட்டையைப் பிடித்தான்... இரண்டு பக்கமும் கட்டி உருண்டு கொண்டு இருந்த போது நல்லகுடி நாணயமாய்க் கல்யாண சுந்தரம் தலையிட்டுச் சண்டையை ஓய்த்து வைத்தான்...

"இப்ப எதுக்கு தேவையில்லாம நமக்குள்ளேயே நாம சண்டை போட்டுக்கணும்... நடக்கிறதைப் பார்ப்போம்..."

"ஏன்டா... இனிமேல் நடக்க என்னடா பாக்கியிருக்கு?"

"ஏம்ப்பா இல்லை... நம்ம மேனகாவின் கல்யாணம் பாக்கியிருக்கே..."

"இத்துணைக்கும் மேலாய் இந்த வீட்டில் நாம பொண்ணு கொடுப்பதா...?"

"இப்ப என்னப்பா நடந்துவிட்டது? பெண்ணைக் காணோம்ன்னா... அது ஓடித்தான் போயிருக்குமன்னு எப்படி நாம நிச்சயமாய்ச் சொல்ல முடியும்...?"

"வேறு எப்படிடா சொல்லச் சொல்கிற...?"

"என்னாச்சோ.. ஏதாச்சோ... பொறுமையாய் விசாரிப்போம் அப்பா... எனக்குத் தொழில் எதிரிகள் யாராவது பெண்ணைக் கடத்தியிருக்கலாம்..."

மகனின் கண் சமிக்ஞையைத் தாண்டவராயன் புரிந்துகொண்டார்... மேனகா மணமேடை ஏறினாள். ரகுபதி கல்யாண சுந்தரத்தின் பெருந்தன்மையை மனதில் பூப்போட்டுப் போற்றிக் கொண்டேமேனகாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்...

பூபதி இதை எதிர் பார்க்கவில்லை... திருமணம் நின்போனால்... இரண்டுமே சேர்ந்துத்தான் நின்று போகும் என்றே அவன் கணித்திருந்தான்... இப்படி... தியாகத்தின் மறு உரவமாய்க் கல்யாணசுந்தரம் தன் பெரியப்பாவின் மகளை ரகுபதியின் தலையில் விடாமல் கட்டி விடுவதற்கு நிச்சயம் பலமான காரணம் இருக்க வேண்டும் என்று பூபதியின் உள் மனம் கூறியது...

இருந்தது... கல்யாண சுந்தரம் மேனகாவைத் தன் குடும்பத்தினரின் மத்தியில் வைத்துச் சந்தித்துப் போதனை செய்துவிட்டான்...

"நம் குடும்பத்திற்குத் தீராத களங்கத்தை உண்டு பண்ணிவிட்டாள் அந்தப் பழிகாரி... அவளை எந்தக் காலத்திலும் உன் புருஷன் வீட்டுப் படியேற விட்டுவிடாதே, மேனகா..."

"விடமாட்டேன், அண்ணா... அவள் நிழல்கூட இனி அந்த வீட்டை நெருங்க முடியாது..."

"அவளைப் பற்றி நினைக்கக் கூட அந்த வீட்டில் இருக்கிறவங்க பயப்படவேண்டும்... மறந்துவிடாதே..."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

மேனகா கல்யாண சுந்தரத்தின் குடும்பத்து ரத்தம் தன் உடலில் ஓடுவதை நிரூபித்தாள்... ரகுபதியை ஓர் இரவு முடியு முன்னரே தன் வசப்படுத்திக் கொண்டாள்... அவள் கண்ணசைத்தால் அவன் பிறந்த வீட்டையே கொளுத்திவிடத் தயாரானான்...

சாரதாவின் புகைப் படம் கூட வீட்டில் இல்லாமல் அப்புறப்படுத்தப்பட்டது... அவளது நகைகளை நல்ல வேளையாகப் பூபதி கைப்பற்றி வங்கியின் லாக்கரில் வைத்துவிட்டான். சாரதாவின் பிறந்த வீட்டின் கதவு அடைத்துக் கொண்டது.

## 28

ரகுபதியை வேறு வகையில் தன் வசப்படுத்தினான் கல்யாண சுந்தரம்...

"என்னதான் இருந்தாலும்... உன் தங்கையை நான் கட்டிக்கப் போகிற பெண்டாட்டியாய் நான் நினைத்து விட்டேன் ரகு... அதனால்... அவள் எங்கேயிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துக் கூப்பிட்டுக் கொண்டு வா... அவளை நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்..."

மேனகா தன் அண்ணனிடம் தனிமையில் சீறினாள்...

"ஏண்ணே உன் புத்தி இப்படிப் போகுது? உன்னை என் சித்தப்பன் மகன்னு சொல்லிக் கொள்ளவே எனக்கு வெட்கமாயிருக்கு... இழுத்துக் கிட்டு ஓடினவளைப் போய்க் கட்டிக்கணும்னு யாராவது நினைப்பாங்களா..."

"மேனகா... நான் ஒன்றும் உத்தம புத்திரனில்லை... நான் குறி வைத்த பெண்ணை இதுவரை தொடாமல் விட்டதில்லை... இவள் ஒருத்திதான் தப்பிப்பிறந்து விட்டாள்..."

"போகிறாள்ன்னு விட்டுத் தொலை..."

"அதுக்குப் பதில் வீட்டுக்குள் அடைத்துக் காலமெல்லாம் சித்ரவதை பண்ணினால் என்ன...?"

அவனின் குரூர புத்தியைக் கண்டு மேனகாவிற்கே குலை நடுங்கியது...

"இதைப் பாருண்ணே... வேண்டாதவளை வீட்டுப் படியேற விட வேண்டாம்ன்னு சொன்னே... சரின்னு

கேட்டுக்கிட்டேன்... இது வில்லங்கம் பிடிச்ச வேலை. விட்டுவிடு..."

ஆனால் கல்யாண சுந்தரம் விட்டாலும் ரகுபதி அதை விடத் தயாரில்லை...

"என் வீட்டில் வேலை செய்த பயல்... அவனை இழுத்துக் கொண்டு ஓடிப் போயிருக்கிறாள் இந்தக் கடன்காரி... அவளைத் தேடிப் பிடித்து வெட்டிப் போட்டாத்தான் என் மனம் ஆறும்..."

"அவள் அந்த வேலைக்காரனோடுதான் போனாள்ன்னு உங்களுக்கு நிச்சயமாய்த் தெரியுமா?"

"தெரியும் மேனகா... ஊரெல்லை டீக்கடையில் இவன் நடுராத்தியில் சைக்கிளை எடுத்திருக்கிறான்... ரயில்வே ஸ்டேசனில் அவன் சைக்கிள் அநாதையாய் நிற்குது... ஸ்டேசன் மாஸ்டர் கிட்ட கேட்டால் இந்த இரண்டு கழுதைகளும் சென்னைக்கு டிரெயின் ஏறிப் போயிருச்சுன்னு தெளிவாய்ச் சொல்கிறார்... இதுக்கு மேலே என்னடி வேணும்...?"

அவர்கள் கும்பல் கும்பலாகச் சென்னைக்கு ரயிலேறினார்கள்... சென்னையைச் சுற்றிச் சல்லடை போட்டுத் தேடினார்கள்... ஏமாந்து போய் வெறுங்கையுடன் திரும்பி வந்தார்கள்...

"உன் பெரியண்ணனின் மேல் உன் தங்கைக்குப் பாசம் அதிகமில்லையா...?" கல்யாண சுந்தரம் யோசனையுடன் கேட்டான்...

"ஆமாம்..." ரகுபதி வெறுப்புடன் பதில் கூறினான்...

"அப்போ... உன் பெரியண்ணனின் செல்போனைக் கைப்பற்ற... அவள் எங்கேயாவது இருந்து... நிச்சயம் உன் அண்ணனுக்குப் போன் பண்ணுவாள்..."

கல்யாண சுந்தரம் வழி சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த பூபதி... தன் செல்போனை எவருக்கும் தெரியாமல் சுக்கு நூறாய் உடைத்தான்...

"சாரதா... நீ எங்கேயிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டும்... என் செல்போன் கூட உன்னைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது... உன் குரல் கேட்க முடியாமல் போய்விட்டாலும்... நீ இருக்கும் இடத்தை இவர்கள் அறிந்துகொள்ளக் கூடாது... அதுதான் எனக்கு முக்கியம்..!" மனதிற்குள் கண்ணீருடன் தங்கையிடம் கூறினான்...

சாரதா புகை போலத்தான் மறைந்த இடத்தைப் பலரும் கண்டுபிடிக்க முடியாமல்... சென்றுவிட்டாள்... பூங்கோதை நடைதளர்ந்து போய்ப் படுத்த படுக்கையாய் ஆகிவிட்டாள்.. மணிவாசகம் மனதிற்குள் உடைந்து விட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் நடமாடிக் கொண்டிருந்தார்...

மேனகாவும் காயத்ரியும் சாரதாவை வெறுக்கும் ஒன்றுபட்ட மனத்தோடு... ஒற்றுமையாகச் செயல்பட்டனர்... மெல்ல... அந்த வீட்டில் சாரதா என்ற பெண் ஒருத்தி பிறந்து வளர்ந்தாள் என்ற விசயம் மறக்கடிக்கப்பட்டு விட்டது.

## 29

சுரேந்திரன் அந்த வீட்டின் சாமான்கள் போட்டு வைக்கும் அறைக்குள் யாரும் அறியாமல் சென்றான்... மூலையில் கிடந்த சாரதாவின் புகைப்படத்தை எடுத்துத் தனது கைக்குட்டையால் துடைத்தான்...

"அத்தை..." என்று அன்போடு அழைத்தான்...

தான் அழைத்ததை யாரும் கேட்டு விட்டார்களா என்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு... கண்களைத் துடைத்துக் கொண்டவன்... கீழே கிடந்த சாரதாவின் புகைப்படங்கள் நிரம்பிய ஆல்பத்தை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்...

சாரதாவிற்குப் பரிசவ வலி வந்து... மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டாள்... பரதன் பதட்டத்துடன் துடித்துக் கொண்டிருக்க... ராமநாதன் ஆறுதலாக அதட்டினார்...

"இது என்ன சிறுபிள்ளைத்தனம் பரதன்... நாமும் நம் அம்மாவின் வயிற்றில் இருந்து பிறந்து வந்தவங்கதான்..."

"இருந்தாலும் சார்... அவள் வலி தாங்க மாட்டாள்."

ராமநாதனின் மனைவி பரிமளத்திற்குச் சிரிப்பதா இல்லை அழுவதா என்று புரியவில்லை...

'இப்படியும் ஒருமனிதன் பினாத்துவானோ...' என்று பரதனை விசித்திரப் பார்வை பார்த்தபடி... கணவரிடம் முணுமுணுத்தாள்...

"பெண்டாட்டி மேல பிரியம் இருக்க வேண்டியதுதான்... ஆனால்... இது கொஞ்சம் ஒவர்தான்..."

"பெண் குழந்தை பிறந்திருக்கு..."

நர்ஸ் வெளியே வந்து கூறியதும்... பரதன் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டபடி... மனைவியைக் காண அறைக்குள் ஓடினான்...

"எப்படியிருக்க சாரதா...?"

அவள் பதில் பேச முடியாமல் சோர்ந்த முகத்துடன் முறுவலிக்க, "முதலில் உங்கள் பெண் எப்படியிருக் கிறாள்ன்னு பாருங்க சார்..." என்றபடி... குளிக்க வைத்த... கைகளில் பூக்குவியல் போல் ஏந்தி வந்த குழந்தையைக் காண்பித்தாள் நர்ஸ்...

பரதன் ஆசையுடன் குழந்தையைக் கைகளில் ஏந்தி வாங்கிக் கொண்டான்...

"இவள் என் குழந்தை... நான் இந்தக் குழந்தையின் அப்பா..." மனம் இனிக்கக் கூறிக் கொள்ளும் அழகுடன் இருந்தாள் குழந்தை...

மீண்டும் சாரதாவைக் கனிவுடன் பார்த்த பரதன்...

"ரொம்பவும் கஷ்டப் பட்டுவிட்டாயா...? என்று கேட்டான்..."

அவன் கேட்ட விதத்தில் பட்ட வலியும் வேதனையும் மறந்துபோய்... பஞ்சு போல மனம் லேசாவதை

உணர்ந்தாள் சாரதா...

பெண்ணின் வலி புரிந்த கணவன் கிடைப்பது அரிது... அப்படி வலி புரிந்தவன்... அதை அனுதாபத்துடன் அனுசரணையாக விசாரிப்பவனாகவும் இருப்பது ஒரு வரம்... சாரதா... அந்த வரத்தைப் பெற்றவளாகத் தன்னை உணர்ந்தாள்...

சாரதா மருத்துவ மனையிலிந்து வந்தவுடன்...வீட்டு வேலைக்கும் சமையலுக்கும் சேர்த்து ஒரு ஆளைப் போட்டான் பரதன்... வேலையாள் இல்லாத சமயத்தில்... தானே சாரதாவையும்... குழந்தையையும் கவனித்துக் கொண்டான்...

அந்தக் குவார்ட்டர்ஸில் இருப்பவர்கள் அனைவரையும் அழைத்து... பெயர் சூட்டும் விழா நடத்தி... விருந்து கொடுத்தார்கள்.. குழந்தைக்கு.. பரதனின் தாய் காமாட்சியை நினைவூட்டும் வகையில் 'கா..' என்ற எழுத்தில் ஆரம்பித்த 'காவ்யா..' என்று பெயரைச் சூட்டினார்கள்..

"சாரதா... நான் ஜெயித்து விட்டேன்..."

"நிஜமாகவா...?"

"நிஜமாகத்தான்... என் அம்மாவும்... அப்பாவும் கண்ட கனவு பலித்து விட்டது..."

சாரதா பூஜையறைக்கு ஓடினாள்... பரதன் பின் தொடர்ந்தான்... மாலைக்கு நடுவில் இருந்த... சங்கரன்... காமாட்சியின் படத்திற்கு முன்னால் நின்று

கொண்டு கண்மூடி மானசீகமாய்ப் பெற்றவர்களிடம் பேசினான்...

சந்தோசம்தான் என்பதுபோல்... அவர்களின் புகைப்படங்களில் இருந்த மாலையில் இருந்து பூ உதிர்ந்தது...

"நாங்க இத்தனை பேர் இருக்கிறோம்... நீங்க கவலைப்படாமல் டிரெயினிங்கிற்குக் கிளம்புங்க... பரதன்... நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்..."

"இல்லை சார்... இது காலேஜ் குவார்ட்டர்ஸ்... நான் இப்போது காலேஸில் வேலையில் இல்லை..."

"அதனால் என்ன...? சாரதாவிற்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்கிறேன்..."

"என்ன சார் சொல்கிறீங்க...?"

"யெஸ் பரதன்... சாரதா பட்டதாரிதானே... கம்ப்யூட்டர் தெரிந்து பொண்ணு... நம்ம ஆபிஸிஸ் வேலை பார்க்கட்டும்... காலேஜில் வேலை பார்ப்பவர்கள்... காலேஜ் குவார்ட்டர்ஸில் தங்கலாம் என்பது... இப்போது சாரதாவிற்குப் பொருந்திவரும் இல்லையா...?"

"ஆனால் சார்... அவள் பச்சை உடம்போடு... மூன்று மாதக் குழந்தையை வைத்துக் கொண்டு எப்படி வேலை பார்ப்பாள்?"

"நீங்க டிரெயினிங் முடிந்து வருகிறவரை சாரதாவிற்கு இந்த வேலை அவசியம், பரதன்... குழந்தையை என் மனைவி பார்த்துக் கொள்வாள்... காலையில் இரண்டு மணி நேரம்... மதியம் இரண்டு மணிநேரம்தான் வேலை இருக்கும்..."

எத்தனை கோடிப் பணம் வேண்டுமானாலும் சம்பாதித்து விடலாம்... ஆபத்தில் கை கொடுத்து உதவும் உண்மையான நண்பர்களின் நட்பைச் சம்பாதிக்க முடியாது... அந்தவகையில் தன்னை மிகப் பெரிய அதிர்ஷ்டசாலியாக உணர்ந்தான் பரதன்... சிறுவயதில் பூபதி... இப்போது ராமநாதன்...

"நான் பட்ட கடன் எத்தனையோ...

பூமியில் பிறந்து...."

கண்ணதாசனின் பாடல் வரிகள் நினைவிற்கு வந்தன... நெகிழ்ச்சியான மனத்துடன் சாரதாவைப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றாள் பரதன்...

"பத்திரமாக இருக்க வேண்டும் சாரு..."

"அதெல்லாம் பத்திரமாய் இருப்பேன்..."

"வேலைக்கார அம்மாளை ராத்திரிக்குப் படுக்கத் துணைக்கு வரச் சொல்லி விடு..."

"ம்...ம்...சொல்லி விடுகிறேன்..."

"பேங்கில் பணம் இருக்கிறது... தேவைப்படும் போது எடுத்துக்கொள்... சிக்கனம் பார்க்காதே..."

"சரி..."

"காலேஜ் குவார்ட்டர்ஸில் நீயும்... குழந்தையும் இருப்பதுதான் உங்களிருக்கும் பாதுகாப்பு... அந்த ஒரு காரணத்திற்காகவே உன்னை வேலைக்குப் போக அனுமதித்து இருக்கிறேன்... மற்றப்படி... அந்தச் சம்பளத்தில் நீ செலவு பண்ண வேண்டிய அவசியம் இல்லை..."

பரதன் மறுகி... மறுகிப் பேச... சாரதா அவனை நெருங்கி அவன் கழுத்தைச் சுற்றி... கைகளால் வளைத்து... அவன் விழிகளுக்குள் பார்த்தாள்...

"நான் உங்கள் சாரதா... உங்களுடைய டிரெயினிங் முடிஞ்சு திரும்பி வருகிற வரைக்கும்... நானும்... உங்கள் பெண்ணும் இங்கே பத்திரமாய் உங்களுக்காகக் காத்திருப்போம்... நீங்க கவலையில்லாமல் போய் வாங்க..."

"சாரு... என் சாரதா..."

அவன் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டான்... சாரதாவிற்கு... மனம் உடைந்து போயிருந்தது... என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகாதே என்று

சொல்ல வேண்டும் போல இருந்தது... என்னையும் உன்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடு... உன்

பிரிவை நான் தாங்க மாட்டேன் என்று கதற வேண்டும் போல இருந்தது...

ஆனால் மனதை அடக்கிக் கொண்டு... அவனைப் பார்த்து... மெலிதாகச் சிரித்தாள்...

"நீங்கள் லட்சியவாதி... உங்கள் அப்பா அம்மாவின் லட்சியத்தை நிறைவேத்தப் போறீங்க... இதை மனதில் வைத்துக் கொண்டு, போய் விட்டு வாங்க..."

பரதன் அவள் நெற்றியில் முத்த மிட்டுவிட்டுக் கிளம்பினான்... அவன் கண்ணிலிருந்து மறையும் வரை சிரித்த முகத்துடன் கையாட்டிக் கொண்டிருந்தவள்... அவன் கண் மறைந்ததும் பொங்கி அழுதாள்...

"சாரதா... என்னம்மா இது... நாங்கள்லாம் இருக்கும்போது... இப்படி பச்சைப் புள்ளையாட்டம் அழுகலாமா...?" பரிமளம் சமாதானம் செய்தாள்...

"முடியலையே அக்கா... என்னால் அவரை விட்டுவிட்டு இருக்க முடியும்ன்னு தோணலையே அக்கா..."

"அப்புறம் ஏன் சிரித்த முகமாய் வழியனுப்பினாய்...?"

"என் கண்ணில் ஒரு சொட்டு நீர் வந்தாலும்... அவன் அவருடைய ஐஏஎஸ் கனவைத் தூக்கி எறிந்துவிட்டு... என் கூடவே இருந்து விடுவார்... அதனால்தான் அப்படிச் செய்தேன்..."

சாரதா... சரிந்த சுவரில் சாய்ந்து அமர்ந்தாள்...

## 31

வாழ்க்கையின் விசித்திரங்களில் இதுவும் ஒன்று... எங்கோ பிறந்து... வளர்ந்து... வந்த இருவர் வாழ்க்கையில் ஒன்று சேர்வார்கள். அவர்கள் கைப்பிடித்த கணத்திலிருந்து இறுதிவரை இணைபிரியாமல் வாழ்வுப் பாதையில் சேர்ந்து பயணிக்கிறார்களே, அது எப்படி...?

பரதனால் பெற்றவர்கள் இருவரையும் ஒரே நாளில் பிரிந்த துயரத்தைத் தாங்கி நின்று வாழமுடிந்தது. ஆனால் சாரதாவின் பிரிவைத் தாங்கி நின்று வாழும் சக்தி அவனுக்கு இல்லை...

திருமண வீட்டில்... மணப்பெண்ணாக இருந்தவளின் வாழ்க்கை ஒரு நொடியில் திசை மாறிப்போய்விட... பெற்றவர்கள்... கூடப் பிறந்தவர்கள்... உற்றவர்கள்... அனைவரையும் விட்டுவிட்டு... கட்டிய புடைவையுடன்... பரதனின் கைப்பிடித்து ஓடி வந்த சாரதாவால்... உயிரோடு அனைவரையும் பிரிந்துவிட்ட தக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடிந்தது.

ஆனால்... அவளது கைப்பிடித்து அழைத்து வந்த தினத்திலிருந்து... கண நேரம் கூட அவளை விட்டுப் பிரியாமல் காதல் மழையைப் பொழிந்து... தாய்ப் பறவையாய்த் தன் சிறகுக்கடியில் அவளை வைத்து அடைகாத்த பரதனை விட்டுப் பிரிய முடியவில்லை... துடித்து விட்டாள்...

கடைசிவரை இணை பிரியாமல் வாழும் இந்த பந்தம்தான்... இந்திய மண்ணின் மேன்மையை மற்ற நாடுகளுக்கு உணர்த்தும் அடையாளம்...

சாரதா... தன் மன உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பரதனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தான் மட்டும்... துயரத்தில் புதையுண்டு மறுகினாள்...

பரதனோ... சாரதாவின் வார்த்தைக்காகவே அவளைப் பிரிந்து ஐஏஎஸ் பயிற்சிக்குப் போனாள்... ஒரு வார்த்தை அவள் மறுகிப் பார்த்திருந்தாலும்... ஐஏஎஸ் கனவையும்... எதிர்காலத்தையும் தூக்கிப் போட்டுவிட்டு அவளோடு கடைசிவரை கல்லூரி விரிவுரையாளராகவே காலத்தைக் கடத்தியிருப்பான் அவன்... பெற்றவர்கள் வாழ்ந்தமண்ணை விட்டுப் போக மாட்டேன் என்று வைராக்கியமாய் இருந்தவன்... சாரதாவின் கைப்டிக்க வேண்டிய சூழ்நிலை வந்ததும்... கடைசிவரை அந்த

மண்ணைத் திரும்பிக் கூடப் பார்க்க முடியாது என்ற நிலைமை வந்ததைத் தயங்காமல் ஏற்றுக் கொண்டு அந்த மண்ணைத் துறந்து ஓடி வரவில்லையா...?

சாரதா தன் மனதிலிருப்பதை மளைத்துத் தன் கணவனை லட்சியத்தை நிறைவேற்றப் பயிற்சிக்கு அனுப்பிவிட்டு... மூன்று மாதக் குழந்தையுடன் தனித்து நின்று வாழ்வைச் சந்தித்தாள்...

பிறந்தது முதல்... சுற்றிலும் உறவென்று பலர் இருக்க... ஆள் படையுடன் ஒரு இளவரசியாய் வாழ்ந்து வந்தவள்... தனியாக வீடு எடுத்துத் தங்கினால்... கல்லூரியின் குவார்ட்டர்ஸில் கிடைத்த பாதுகாப்பு கிடைக்காது என்பதற்காகக் கல்லூரியில் வேலைக்குச் சென்று கொண்டே... குழந்தையை வளர்க்க ஆரம்பித்தாள்...

காவ்யாவின் தலை நின்று... அவள் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போது... மகளின் போட்டோவைக் கணவனுக்கு அனுப்பினாள்... அவள் குப்புறப்படுத்து... எழுந்த தளர் நடை போட ஆரம்பித்தபோது... பரதன் பயிற்சியை முடித்துவிட்டுத் திரும்பி வந்தான்...

"நார்த் சைடிலேயே போஸ்டிங் வந்திருக்கே, பரதா..."

"நான்தான் தமிழ்நாடு வேண்டாமுன்னு சொல்லி விட்டேன், சார்..."

"எதுக்குப்பா... நாங்கள்லாம் இங்கே இருக்கிறோ முன்னா இங்கே போஸ்டிங் வேண்டாமுன்னு சொன்னே...?"

"இல்லை சார்... எங்களின் நிழல் இங்கே இருக்கிறது... அது நிம்மதியாய் எங்களை வாழவிடாது..."

"இப்போது ஆட்சித் தலைவர்ங்கிற அதிகாரம் உனக்கு இருக்கேப்பா..."

"அது மக்களைக் காப்பற்ற... என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இல்லை..."

அத்தனை நாளும் பழகியதால் ஒருமையில் அழைக்கும் உரிமையைப் பெற்றுவிட்ட ராமநாதன்... தன் உடன்

பிறந்தவனைப் பிரியும் சொந்தத்துடன் கண் கலங்கினார்...

"ஆக... எங்களை விட்டுவிட்டுப் போகணுமுன்னு ஒரு முடிவோடு இருக்கே..."

"அப்படியெல்லாம் இல்லை சார்... யாருமில்லாத அநாதையாய் இங்கே ஓடிவந்தோம்... எங்களுக்காக ஒதுங்கிக் கொள்ள ஒரு கூரை கூட அப்போது இல்லை... நீங்கள் உடனடியாக குவார்ட்டர்ஸில் வீடு கொடுத்து... எங்களுடைய கல்யாணத்தை ரெஜிஸ்டர் பண்ணவைத்து... எங்களுக்கு வாழ வழி காட்டினீங்க... நான் ஐஏஎஸ் டிரெயினிங் போக வேண்டி வந்தபோது... சாரதாவிற்கு வேலைபோட்டுக் கொடுத்து, பாதுபாப்பாய் இங்கேயே தங்க வைத்தீங்க... எங்களுக்கென்று இருக்கும் சொந்தம் நீங்கள் மட்டும் தான்... உங்களை எப்படி நாங்கள் விடமுடியும்..."

பரதன்... குடும்பத்துடன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டான்...

32

பரதன் குவார்ட்டர்ஸைக் காலி செய்தான்... வரும்போது வெறும் கையுடன் ஓசூருக்கு வந்து இறங்கிய பரதனும் - சாரதாவும் லாரி நிறையச் சாமான்களுடனும் கழுத்து நிறைய நகையுடனும்... கையில் காவியாவுடனும் ஓசூரை விட்டுக் கிளம்பிச் சென்றனர்...

"போய்விட்டு வருகிறோம், பரிமளாக்கா..."

"குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள் சாரதா... அடிக்கடி கடிதம் போடு... முடிந்தபோது போனில் பேசு..."

சாரதா வேலைக்குச் சென்ற போதெல்லாம் காவ்யாவை மடி தாங்கிய ராமநாதனின் மனைவி பரிமளம் கண்கலங்கினாள்... சாரதாவும் அவள்தோள் சாய்ந்து விசும்பினாள்...

"தலைப் பிரசவம் தாய் வீட்டில்தான் நடக்கனும்னு சொல்வாங்க... நிங்க... தாய்கருத்தாயாய் இருந்து

என்னைக் கவனித்துக்கொண்டிங்க... இந்த நன்றிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்."

"பைத்தியம் போல் பேசாதே... கொலைக் குற்றத்தைக் கூட மன்னித்து விடும் நம் ஊரில் காதலை அதைவிடப் பெரிய குற்றமாக நினைக்கிறாங்க... நானும் இவரும் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டபோது... எங்களுக்கும் நட்புன்னு இந்த அன்னியத்து மனுசங்கதான் அடைக்கலம் கொடுத்தாங்க... நாங்க... அதை உங்களுக்குச் செய்தோம்... இதை ஒரு பெரிய விசயமாய் நினைத்துப் பேசாமல் போய்விட்டுவா..."

புனாவின் சூழ்நிலையே வேறு மாதிரி இருந்தது... இந்தி பேசும் மக்களிடையே சாரதா மிரட்சியாய் விழிக்க, பரதன் ஆதரவாய்ப் புன்னகைத்தான்...

"போகப் போகப் எல்லாம் பழகிவிடும்..."

"பேசாமல் நம் ஊர்ப் பக்கமே போயிருக்கலாமே..."

"வேண்டாம் சாரு... கொஞ்ச நாள் நிம்மதியாய் இருக்கலாம்... உன் பெரிய அணன்னுக்கு இல்லாத தைரியமா? அவர் ஏன் ஊரைவிட்டு நம்மை ஓடிவிடச் சொன்னார்...? இப்போதும் அவருடைய செல் நம்பரில் நம்மால் அவருடன் பேச முடியவில்லை... அது ஏன்...? பயப்பட வேண்டிய விசயங்களுக்குப் பயந்துதான் ஆக வேண்டும்..."

"என் புருசன் வீரனென்று நினைத்தேன்..."

"இப்போது அந்த நினைவிற்கு ஒரு குறையும் வரவில்லை... ஒதுங்கிப் போவதற்குப் பெயர் கோழைத் தனமில்லை..."

"இது சப்பைக்கட்டு..."

"நீ வாத்திற்குப் பேசுகிறாய்... ஆயிரம்பேர் வந்தாலும் தனி ஆளாய் எதிர்த்து நிற்கும் தைரியசாலிதான் உன் புருசன்... எனக்கென்று நீயும்... காவ்யாவும் இருக்கும்போது... நான் உங்களுக்காக வாழவேண்டாமா...? போர் புரிய ஒருமுறை

கத்தியை எடுத்துவிட்டால்... அதைத் திரும்பவும் கீழே போடவே முடியாது..."

"எனக்கென்னவோ நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அப்படி அவங்க நம்மை என்னதான் செய்து விடுவாங்க...?"

"நம் நிம்மதியைக் குலைப்பாங்க... மகாபாரதத்தில் குருக்ஷேத்திர யுத்தத்திற்கு முதலில்... கிருஷ்ணன் பாண்டவர்களின் சார்பாய்... ஐந்து கிராமங்களை மட்டும் கொடு என்றுதான் துரியோதனனிடம் கேட்டாராம்... ஏன் தெரியுமா?"

"ஏன்...?"

"அமைதிக்கு விலையாய் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்கலாம் என்பதே கிருஷ்ணனின் வாக்கு... நானும் அதைத்தான் செய்கிறேன்..."

புனாவிலிருந்த கலெக்டர் பங்களாவில் அவர்கள் சென்ற கார் நுழைந்து போர்டிகோவில் நின்றது... சாரதா விழிவிரிய அந்த வீட்டைப் பார்த்தாள்.

"எங்கள் வீடு போலவே இருக்கிறதே..."

"உங்கள் வீடா...?"

பரதனின் குரல் ஒரு மாதிரியாய்க் குற்றம் சாட்டும் பாவனையில் ஒலிக்க... அவசரமாய்ச் சாரதா கன்னத்தில் போட்டுக் கொண்டாள்...

"தப்புத்தான் சாமி... தெரியாமல் சொல்லி விட்டேன்... அது என் பிறந்த வீடு..."

"போகட்டும்... மன்னித்தேன்... இது உன் புருசனுக்காக கவர்மென்ட் கொடுத்திருக்கும் வீடு... இதுதான் இனிமேல் உன்வீடு... புரிந்ததா...?"

"புரிந்தது..."

"வலது காலை எடுத்து வைத்து உள்ளேவா..."

சாரதா மனம் நிறையப் பெருமையுடன்... வலது காலை எடுத்து வைத்து உள்ளே சென்றாள்...

"இது வேலு... இவள் பொன்னி... நம் வீட்டில் வேலை செய்கிறவங்க... இவங்க..."

"தமிழ் ஆளுகளா?..."

சாரதா முகம் மலர்ந்தான்... அந்நிய மொழி பேசும் மனிதரைக் கண்டால் உண்டாகும் சந்தோஷம் அவள் முகத்திலும் உண்டானது... பரதனைக் காதலுடன் அவள் பார்க்க... அவன் கண் சிமிட்டினான்...

33

பூபதி காரை விட்டு இறங்கி... வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு... வயலின் வரப்பின் மீது நடந்தான்... சற்று தூரத்தில் அடர்த்தியான கென்னந் தோப்பும்...அதன் நடுவிலிருந்த ஓட்டு வீடும் தெரிந்தன...

ஒரு நிமிடம் புகை போல... சங்கரனும்... காமாட்சியும் தோப்பிற்குள் வேலை செய்து கொண்டிருப்பதைப் போன்ற காட்சி பூபதியின் கண்ணிற்குத் தெரிந்து மறைந்தது...

பூபதியைக் கண்டு விட்டால்... தலையிலிருக்கும் முண்டாசைக் கழற்றி... கக்கத்தில் இடுக்கிக் கொண்டு... கும்பிடு போடுவான் சங்கரன்...

"ஏம்புள்ள காமாட்சி... யாருவந்திருக்காங்கன்னு பாரு... ஐயாவுக்கு ஒரு தம்ளர் நிறைய மோரு கொண்டு வந்து கொடு."

சேலை முந்தானையை மரியாதையாய்த் தோளைச் சுற்றிப் போட்டுக் கொண்டு... பவ்யமாய் மோர் தம்ளரைக் கொண்டு வந்து நீட்டுவாள காமாட்சி...

'இன்றைக்கு அவங்க இல்லை...' ஒரு நெடிய பெருமூச்சு பூபதியிடமிருந்து கிளம்பியது...

தோப்பின் நடுவிலிருந்த... மோட்டார் ரூமின் திட்டில் அமர்ந்து... யாரும் குடிவர விரும்பாத தோப்பு வீட்டைப்

பார்த்தான்...

"இது என் அம்மா... அப்பா வாழ்ந்த வீடுங்கய்யா... இது என் தாயின் மடி... என் அப்பாவின் காலடிபட்ட மண். இதை விட்டு நான் எங்கேயும் போகமாட்டேன்..."

பரதன் சொன்னது... காதில் ஒலிக்க, பூபதி கண் கலங்கினான்...

அதைச் சொன்னவன்... பூபதியின் வார்த்தைக்காக... அவனின் தங்கையின் வாழ்வைக் காப்பாற்ற... அன்னை பூமியை மறந்து... அவனது பிடிவாதத்தைத் துறந்து ஓடிவிட்டான்.

அவன் போன பின்னால்... அந்தத் தோப்பே வெறிச்சோடிவிட்டது... சதா ஆள் நடமாட்டம் இருந்த தோப்பில் இப்போது அந்தகாரம் சூழ்ந்திருந்தது...

உழைப்பும் எஜமான விசுவாசமும்... உப்பைத்தின்ற நன்றியும் கொண்ட ஜீவன்கள் நடமாடிய வரை... அந்தத் தோப்பில் ஜீவகளை இருந்தது...

என்று அந்த மூன்று ஜீவன்களில் முதிய ஜீவன்கள் இரண்டும் உயிரை விட்டனவோ... அன்றே பாதிக்களை குறைந்துவிட்டது... மீதியை மூன்றாவது ஜீவனான பரதன்... தன்னோடு கொண்டு சென்று விட்டான்...

"ம்ஹூம்... வந்திருக்கிறவள் பேரு மட்டும் மேனகை இல்லை... ஆளும் அச்சு... அசல் அந்த மேனாமினுக்கி மேனகைதான்... உங்க தம்பியை மயக்கிக் கைக்குள் வைத்திருக்கிறாள்... அவள் நில்லுங்கன்னா உங்க தம்பி நிக்கிறார்... உட்காருன்னா உட்காருகிறார்... அவ சமத்து எனக்கும் இல்லை... உங்க தம்பியைப் போலப் பெண்டாட்டி செபல்லைக் கேட்கிற புருசனாய் நீங்களும் இல்லை...."

மணமாகி வந்த இரண்டு ஆண்டுகளிலேயே வீட்டில் பாகப் பிரிவினையை ரகுபதி மனைவி மேனகா கொண்டுவந்தபோது... காயத்ரி... பூபதியிடம் புலம்பினாள்... யாருக்கு வந்த விருந்தோ என்பது போல் ஒரு பார்வை

பார்த்துக் கொண்டே விட்டேற்றியாய்ப் பதில் சொன்னான் பூபதி...

"என்றைக்கு இருந்தாலும் சொத்தைப் பிரிச்சுத்தானேடி ஆகணும்... அது இன்றைக்கே நடந்தால் நடந்துவிட்டுப் போகட்டும்..."

"ம்ஹூம்...உங்களை நம்பி... எனக்கொன்றும் மிஞ்சப் போவதில்லை... எல்லாச் சொத்தும் எனக்கு... உனக்கு மீதி இருக்க உலக்கை... என்கிறாள்... உங்க தம்பி பொண்டாட்டி... இவள் புருசன்தான் இந்த வீட்டில் பிறந்தானா...? நீங்கள் பிறக்கவில்லையா...?"

"நானும்தான் பிறந்தேன்... என்கூட மூன்றாவதாய் சாரதாவும் இந்த வீட்டில் பிறந்திருக்கிறாள்... அவள் பேரை மட்டும் விட்டு விட்டாயே... நீ கெட்டிக்காரிடி..."

"ஆடி... ஓடி... நீங்க இந்த இடத்திற்குத்தான் வருவீங்கன்னு எனக்குத் தெரியுமே... ஆக... அந்த ஓடுகாலிக்கு சேர்த்து மூன்று பங்காய் சொத்தைப் பிரிக்கணும்கறீங்க...?"

"அதுதானே நியாயம்..."

"உங்க நியாயத்தைத் தூக்கி உடைப்பில் போடுங்க... நீங்க பேசுகிற நியாயம் எல்லாம் இப்படித் தான் இருக்கும்... நான் என் பிறந்த வீட்டு மனுசங்களை வரச் சொல்கிறேன்... அவங்க வந்து பஞ்சாயத்து பண்ணினால்தான்... நம்ம பங்கு நமக்கு ஒழுங்காகக் கிடைக்கும்..."

சாரதாவை வீட்டுப் படியேற விடக்கூடாது என்பதில் ஒற்றுமையாகச் செயல்பட்ட மேனகாவும்... காயத்ரியும்... சொத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் விவகாரத்தில் எதிரும் புதுருமாய்... சண்டைக் கோழி போல் சிலிர்த்துக் கொண்டு நின்றார்கள்...

மணிவாசகம் நொந்து போய்விட்டான்... அவர் பேச்சுக்கு எதிர்ப் பேசாத மகன்கள் இருவரும்... இன்று அவர் பேச்சைச் சட்டை செய்யாமல்... தத்தம்... மாமனார் வீட்டை மத்தியஸ்தத்திற்கு அழைத்ததை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை..

இருமகன்களுமே அந்த ஏற்பாட்டைச் செய்திருக்க மாட்டார்கள்... மருமகள்கள்தான் தங்களின் பிறந்த வீட்டை அழைத்திருப்பார்கள் என்பது அவருக்குத் தெரிந்ததுதான் இருந்தத... ஆனாலும்... மருமகள்களின் அந்தச் செய்கையை மகன்கள் தடுத்திருக்க வேண்டாமா... என்றுதான் அவரது மனம் குடைந்தது...

"தங்கம் தங்கமாய் வளர்த்த என் மகளையே உயிரோடு நான் பிரிந்துவிட்டேன்... இந்தச் சொத்தைப் பிரித்தால் எனக்கு என்ன... பிரிக்காவிட்டால் எனக்கென்ன..." பூங்கோதையின் முகம் திரும்பிக் கொண்டது... அதைவிட அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது... என்று சாரதா வீட்டைவிட்டு ஓடிப்போனாளோ... அன்றிலிருந்து... பூபதி... தன் தகப்பனாருடன் பேசுவதை நிறுத்திக் கொண்டான்... கணவனின் சொல்லே வேதமென்று இருந்த பூங்கோதை... மணிவாசகம் எதைச் சொன்னாலும் அதை மறுத்துப் பேச ஆரம்பித்தாள்... அவள் உறங்கிப் பல மாதங்களாகி விட்டன... அவள் உள்ளத்தை வேதனை அரித்துக் கொண்டிருந்தது...

"பெரியவன் தலை தலையாய்அடிச்சுக்கிட்டான்... குணம் கெட்டவன் குடும்பத்தில் பொண்ணு கொடுக்க வேண்டாமுன்னு... கேட்டிங்களா... அவன் சொன்னதைக் காது கொடுத்துக் கேட்டிருந்தால் இந்த நிலைமை வந்திருக்குமா...?"

"ஏன்டி... அதுக்காக வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரனோடு அவ ஓடிப் போகலாமா..."

"ஓடிப்போக வச்சது யாரு... நீங்கதானே... உங்க வறட்டுக் கௌவரவம்... என் பெண்ணோட வாழ்க்கையோடு விளையாடிப் புடுச்சே..."

பூங்கோதையின் புலம்பல் நாளுக்கு நாள் அதிகமாக... ஒரு கட்டத்தில் மனiவியின் தூண்டுதலைக் கேட்டு... ரகுபதி தாயுடன் சண்டைக்கு வந்தான்... அதைக் கண்ட மணிவாசகம் கோபத்துடன் சின்ன மகனைக் கண்டித்தார்..

"ரகு... ஆயிரம்தான் இருந்தாலும் அவள் உன் அம்மா... பெற்ற பெண்ணை நினைத்து அவ மனசு தாங்காமல் நாலு வார்த்தை பேசத்தான் செய்வாள்... உனக்கு இஷ்டமிருந்தால் கேளு..."

"எனக்கும் இதைக் கேட்க சகிக்கவில்லை... என் பெண்டாட்டிக்கும்... சகிக்கவில்லை..."

"அப்போ... உன் பெண்டாட்டியோடு... தனியாய்ப் போய்விடு..."

"சொத்தைப் பிரித்துக் குடுங்க... நாங்க போய் விடுகிறோம்... ஒன்றாய் இருந்து கும்மியடிக்கணும்னு எங்களுக்கு ஒன்றும் தலையெழுத்தில்லை..."

"ஆக இந்தக் குறிக்கோளுடன்தான்... நீ உன் அம்மாவிடம் வம்பு வளர்த்திருக்கிறாய்..."

மணிவாசகத்திற்கு வெறுத்துப் போய்விட்டது... நியாயவாதியான பெரிய மகன் அவருடன் பேசுவதில்லை... சுயநலவாதியான சின்ன மகன்... மனைவியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு... அவள் சொல்படி... தஞ்சாவூர் பொம்மைபோல் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறான்...

"கடவுளே... இதுதான் என் விதியா..?"

வீட்டில் இரண்டு மகன்களின் மாமனார் வழிச் சொந்தங்கள் வந்து இறங்கின... இருதரப்பும்...அவரவர் வீட்டுப் பெண்களோடு... தனித்னி அறைகளில் மந்திர ஆலோசனை செய்தனர்... கடைசியில் சபை கூடியது...

"கரும்பு மில் எனக்கு வேண்டும்..." என்றான் ரகுபதி...

"அதை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்...? என் வீட்டுக்காரர் ஆரம்பித்து வைத்த மில் அது..." காயத்ரி ஆட்சேபித்தாள்.

"கைக்காசைப் போட்டு ஆரம்பித்தாரா...? இல்லை உங்கள் கழுத்தில் - கையில் கிடந்த நகைகளை விற்று ஆரம்பித்தாரா...? குடும்பச் சொத்து அண்ணி அது..." ரகுபதி முறைத்தான்...

"ஏங்க.. உழைச்சது நீங்க... உரிமை கொண்டாடுவது உங்க தம்பியா...? வாயில் என்ன... வாழைப் பழத்தையா வைத்திருக்கிறீங்க... வாயைத் திறந்து உங்கள் தம்பியை நறுக்குன்னு நாலு வார்த்தை ஏன்னு கேளுங்க... காயத்ரி கொதித்தாள்..."

பூபதி வாயைத் திறந்தான்...

"இதோ பாருடா ரகு... உனக்கு என்ன வேண்டுமோ... என் பொண்டாட்டிக்கு என்ன வேணுமோ... அது உங்கள் பஞ்சாயத்து, என் பெண்டாட்டியின் தாய் தகப்பனாச்சு... நீயாச்சு... எப்படியோ பங்கைப் பிரித்துக் கொண்டு ஒழிங்க... எனக்கு வேண்டியது... அந்தத் தோப்பும்... அதைச் சுற்றியிருக்கும் வயலும் மட்டும்தான்... அதை நான் உனக்கு விட்டுத் தர மாட்டேன்..."

"நீ சும்மா கொடுத்தாலும் எனக்கு அது வேண்டாம்..."

"ரொம்ப சந்தோசம்... மத்ததை நீங்க பேசி முடிங்க..."

பூபதி சம்பந்த மில்லாதது போல் அங்கிருந்து கிளம்பிவிட முன்னளை யுத்தகளமானது... விட்டுக் கொடுக்காத இரு தரப்பும் வாய்ச் சண்டை போட்டு முடித்து... கைகலப்பிற்கும் தயாராகி ஒருவழியாய்ப் பாகப் பிரிவினை பண்ணி முடித்தனர்...

35

ஆத்தூரில் இருந்த ஜவுளிக் கடையும்... கரும்பு மில்லும்... தென்னந்தோப்பும் பூபதியின் பங்கிற்கு வர... டிபார்ட்மென்டல் ஸ்டோரும்... பால் பண்ணையும்... அடுக்கு மாடி வீடுகளும் ரகுபதியின் கைக்குப் போய்விட்டன... பரம்பரையாய் வாழ்ந்த பெரிய வீட்டைப் பெரிய மகனுக்கு

விட்டுக் கொடுத்து விட்டு... புதிதாய்க் கட்டின புது பங்களாவிற்கு.. ரகுபதி மனiவியுடன் தனிக் குடித்தனம் போய்விட்டான்...

"மாசம் பிறந்தால் வாடகைப் பணம் வசூலாகும்... பால் பண்ணையிலயும்... ஸ்டோரிலயும்... தினசரி வருமானம் கொட்டும்... அதை விட்டுக் கொடுத்து

விட்டு... தோப்பை வாங்கும் பிறவியை எங்கேயாவது பார்த்திருக்கிறோமா...?"

"வாயை மூடுடி... உன் பங்குக்கு ஜவுளிக் கடையும்... கரும்பு மில்லும் வந்திருக்குது இல்ல.. அது ஏன் உன் கண்ணுக்குத் தெரியலை..."

"புதுசா சலவைக் கல்லாலேயே இழைச்சுக் கட்டின வீட்டில் அவள் குடியிருப்பாள்... நான் மட்டும்... பாடாவதியாய் இருக்கும் இந்தப் பழைய வீட்டில் ஒட்டடையை அடிச்சுக்கிட்டுக் கிடக்கணும்..."

"பரம்பரை வீடு பெரிய மகனுக்குத்தான்ன உங்க அப்பாதான்டி வாய்விட்டார்..."

"அவள் மட்டும் தனியாய் புருசன் கூட குடித்தனம் செய்வாள்... நாய் மாடு... கன்று... மாமனார்.. மாமியார்ன்னு எல்லாத்தையும் கட்டி மேய்க்கணம்..."

"அடித்துப் பல்லைப் பேர்த்து விடுவேன்டி... சந்தடி சாக்கில் மாட்டையும்... மனுசலையும் ஒன்றாக்கிப் பார்க்கிறாயா...? இதை வேறு யாரிடமாவதுபேசு... என்னிடம் வேண்டாம்... ஜாக்கிரதை..."

வழக்கு... வழக்கு... வழக்கைத் தவிர வேறு எதுவும் வீட்டில் இல்லை... பெருமூச்சுடன் தோப்பைச் சுற்றி வந்தான் பூபதி... அங்கேயே குடியிருக்க ஆள் வரமறுத்து விட்டார்களே தவிர... பகலில் வயலில் வேலை செய்யவும்... இரவில் தோப்பைக் காவல் காக்கவும்... ஆள் கிடைக்கத்தான் செய்தார்கள்... பூபதியும் விவசாயத்தை லாபகரமாகவே செய்து வந்தான்...

ஒரே ஒரு விசயத்தில் மட்டுமே மிகவும் கண்டிப்பாக இருந்தான்... அது... அந்த தோப்பு வீட்டில் யாரையும் கால் வைக்க விடுவதில்லை...என்பது...

"ஐயா... ராப்பொழுதில் மழை வந்தால்... குளிரடித்தால் தோப்பு வீட்டுக்குள் படுத்துக் தூங்கலாமேன்னு..."

"இல்லை முனியா... அந்த வீட்டில் முக்கியமான சாமான்கள் கிடக்குது... இந்தா மோட்டர் ரூம்சாவி... வீட்டை விட... மோட்டார் ரூம் வெதுவெதுப்பாய் வசதியாக இருக்கும்... நீ அங்கே படுத்துக் கொள்..."

"இது பரதனின் வீடு... அவன் ஒருநாள் கட்டாயம் என் தங்கையோடு என்னைத் தேடி வருவான்... அப்போது... இதோ... உன் தாயின் மடி... உன் தந்தையின் காலடி பட்ட பூமியென்று... இந்த வீட்டை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்... எனக்காக... என் தங்கையின் வாழ்வைக் காப்பாற்றியவனுக்கு நான் தரும் தரும் சிறு காணிக்கை இது ஒன்றுதான்..."

இதுவே பூபதியின் நினைவாக இருந்தது... அவன் மனம் பூராவும் இந்த எண்ணமே வியாபித்திருந்தது... எப்போதெல்லாம் அவனுக்குள் பரதனின் நினைவும்...

சாரதாவின் நினைவும் பொங்கிப் பிரவாகமாய் எழுகிறதோ... அப்போதெல்லாம் அவன்தோப்புக்கு வந்துவிடுவான்... அங்கு இருக்கும்போது அவன் மனம் பரதனின் அண்மைமணை உணரும்... சாரதாவின் பாசத்தை நுகரும்...

அந்தி மயங்கி... இருள் பரவ ஆரம்பித்துவிட்டது... இரவுக் காவல்காரன் வந்துவிட்டான்...

"என்னங்கய்யா... வீட்டுக்குப் போகவில்லையா?"

"போகணும் முனியா..."

பூபதி மெதுவாக நடந்து தோப்பை விட்டு வெளியே வந்தான்... காரில் ஏறி... வீட்டை நோக்கிச் செலுத்தினான்... வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டு படியில் ஏறியபோது...

வராண்டாவில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த மணிவாசகம் லேசாக இருமினார்... கண்டுத கொள்ளாமல் வீட்டிற்குள் போய் விட்டான்...

ஒரு மனிதரைப் புறக்கணிப்பதைவிட மிகப் பெரிய தண்டனையை அவருக்குக் கொடுத்துவிட முடியாது... அந்தத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த மணிவாசகம் வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டார்...

"அந்தத் தோப்பில் அப்படி என்னதான் இருக்குன்னு உன் அப்பா அர்த்தஜாமம் வரைக்கும்... அங்கேயே அடைகாத்து விட்டு வருகிறார்..."

காயத்ரி கத்திக் கொண்டிருக்க... பூபதி அதை அலட்சியப் படுத்தினான்.

36

காரைப் படுவேகமாய் வீட்டு போர்டிகோவில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு வேகமாக இறங்கி... வீட்டுப் படிகளில் தாவியேறிக் கொண்டிருந்த மகளைப் பார்த்தபடி... தன் பிஏ பின் தொடர வீட்டை விட்டு வெளியே வந்தான் பரதன்...

"ஹாய்... டாட்..."

"என்னம்மா... காலேஜ் முடிந்து விட்டதா...?"

"அது அப்போதே முடிந்துவிட்டது டாடி..."

ஓஹோ... நீ லேட்டாக வரவும்... ஸ்பெசல் கிளாஸ் எதுவும் இருந்ததோன்னு கேட்டேன்.

"இதற்கு நேராகவே ஏன் லேட்டுன்னு கேட்டு விடலாமே டாடி... என் ப்ரண்ட்ஸுடன் கொஞ்சநேரம் டைம் ஸ்மென்ட் பண்ணினேன். போதுமா...?"

படபடப்பாய் பேசிய காவ்யா... இருபது வயதைத் தொட்டிருந்தாள்... ஜீன்ஸ் அணிந்து.. டெரிம் சட்டை அணிந்து கூந்தலை விரித்து விட்டிருந்தாள்... கண்களில்

குளிர் கண்ணாடி. கழுத்து... கைகளில் நகை இல்லை... கொஞ்சம் கம்யூனிசம் பேசுவாள்... சற்று நேரத்தில் அதை மறந்து... டில்லியின் தியேட்டர்களில் மசாலா இந்திப் படங்களை ரசித்துப் பார்ப்பாள்... தகப்பனாரைப் போலவே ஐஏஎஸ் கனவு உண்டு... அதனால்... அரசியல் பொருளாதாரத்தில் பட்டம் வாங்கி விட்டு... அதே பாடத்ததில்... முதுகலைப் பட்டப் படிப்பில் சேர்ந்திருந்தாள்...

"உன் பிரெண்டின் பெயர் என்ன சொன்னே...?"

"இன்னும் சொல்லவில்லையே டாடி..."

"சொன்னதாக நினைவு..."

"உங்களுக்கு கேட்கவேண்டுமென்ற நினைவு..."

"இரண்டும் ஒன்றுதானே காவ்யா...?"

"ஊஹூம்... இது இரண்டுமே வேறு வேறு... இது என் சுதந்திரத்தில் நீங்கள் தலையிடும் செயல்... என்னை வேவு பார்க்கும் நடவடிக்கை... இருந்தாலும்... நீங்கள்... என் செல்ல அப்பா என்பதால் போனால் போகட்டும்ன்னு மன்னித்து விட்டு விடுகிறேன்..."

"இன்னும் உன் ப்ரெண்டின் பெயரை நீ சொல்லவில்லையே..."

"விட மாட்டிங்களே... தீபா... ஜான்ஸி... சுனிதா... போதுமா..."

"எனக்குப் போதும்... உன் அம்மாவிற்கு போதுமான்னு போய்க்கேளு..."

பரதன் அதே கம்பீரம் குறையாத அழகுடன் இருந்தான்... முகத்தில் வயது கூடியதால் ஒரு அனுபவரேகை பிரதிபலித்தது... அவன் ஏற, பியூன் கார் கதலைத் திறந்துவிட...

"பை... காவ்யா..." என்றபடி... காரில் ஏறிப் பறந்துவிட்டான்...

காவ்யா தோளைக் குலுக்கியபடி வீட்டிற்குள் சென்றாள்... சற்றுச் சதைப் பிடிப்பான தேகத்துடன்... காதுகளில்

வைரத்தோட்டுடன்... டைனிங் டேபிளின் அருகே நின்று கொண்டிருந்தாள் சாரதா...

"ஹாய்... மாம்..."

"ஏன் லேட்..."

"பிரெண்ட்ஸோடு பேசிக் கொண்டிருந்தேன்ம்மா..."

உன்னை விட மூன்று வயதுதான் இளையவன் சஞ்சய்... மெடிகல் காலேஜில் முதல் வருசம் படிக்கிற சின்னப் பையன்... ஆண்பிள்ளை... அவன் உன்னைப் போல ஊர் சுற்றுகிறானா? டாண்னு காலேஜ் விட்டதும் வீட்டுக்கு வந்து நிற்கலை...? நீ மட்டும் ஏன்டி இப்படி இருக்கிற...?

"மாட்டிக் கொண்டாயா...?" என்று ரகசியமாய்த் தமக்கையைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்த சஞ்சய்... பரதனின் ஜாடையில் இருந்தான்... ஜீன்ஸ் பேன்ட்டும்... கார்கோ சர்ட்டும் அணிந்திருந்தான்... அமைதியான முகத்தில் ஒரு துறுதுறுப்பு இருந்தது... அன்னையின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தம்பியின் அருகேஅமர்ந்து... சாப்பிடுவதில் ஈடுபட்டாள் காவ்யா...

37

"எனக்குச் சென்னைக்கு மாறுதல் வந்திருக்கிறது சாரதா..."

"நிஜமாகவா..."

"என்னடி... இப்படி முகத்தில் எக்ஸ்பிரசனே இல்லாமல் சொல்கிறாய்.."

"உங்களைப் போல நேர்மையான கலெக்டரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால்... ஊர் ஊராய்ச் சுற்ற ரெடியாக இருக்க வேண்டும்தானே... இரண்டு வருசத்துக்கு ஒரு ஊர்ன்னு ஆகிப்போச்சு... இதில் நான் என்னத்தை எக்ஸ்பிரசன் காண்பிப்பது...?"

"சென்னை... நம் தமிழ்நாட்டின் தலைநகரில்லையா...?"

"வடக்கு... தெற்கு பேததெல்லாம் மறந்மு போச்சு... இந்தியும் பழகிப் போச்சு... இப்ப எந்த ஊராய் இருந்தாலும் சரின்னு ஆகிப்போச்சு... என்ன... பிள்ளைகளுக்குக் காலேஜில் இடம் பிடிக்கணும்..."

அவர்கள் சென்னையில் கால்வைத்தார்கள்... பத்தொக்பது வருடங்களுக்குப் பின்னால்... தாய் மாநிலத்தின் மண்ணில் கால் பதிக்ம் சிலிர்ப்பு...அவர்கள் இருவருக்குமே இருந்தது... சஞ்சய் தன் வழக்கப்படி...சூழ லோடு ஒன்றிப் போக... காவ்யாதான் மகத்தை தூக்கி வைத்தக் கொண்டு இருந்தாள்.

"என்ன ஊரப்பா இது...?"

"சென்னைம்மா... நம் சொந்த மண்..."

"என்னவோ போங்க டாடி... நார்த்தில் இருக்கிற என்டர்டெயின்மென்ட் இங்கே கிடையாது..."

"நீ அதிலேயே இரு... படிக்கும் வழியைப் பார்க்காதே..."

ஒரு வார காலம் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்த காவ்யா... பின்னர் தன் போக்கில்... காரில் சென்னைனை வலம்வர ஆரம்பித்தாள்...

கல்லூரியில்... அவளது கலகலப்பான சுபாவத்தால் உடனடியாகத் தோழிகள் கிடைத்து விட்டார்கள்... ஒருநாள் மாலையில்... தோழிகளுடன் மெரினா பீச்சிற்குச் சென்றிருந்தபோது... சுண்டல் சாப்பிட்டு விட்டு... காகிதத்தை அலட்சியமாய் காவ்யா வீச அது அருகில் நடந்து வந்த கொண்டிருந்த வாலிபனின் முகத்தில் காற்றின் வேகத்தில் போய்ப் படிந்தது...

"ஹலோ..." அவன் தன் முகத்திலிருந்த காகிதத்தை எடுத்துக் கொண்டே அவளை அழைத்தான்.

"என்ன மிஸ்டர்...?" காவ்யா அலட்சியமாய் நின்று கேட்டாள். அவளுடைய முகத்தைப் பார்த்ததும்...கோபமாய் அவளுடன் சண்டைபோட வந்த அந்த இளைனின் வேகம் குறைந்தது... ஆனாலும் முகச் சுழிப்பு மாறாமல்...

"பக்கத்தில் வருகிறவங்க மேல் படும்ன்னு யோசிக்காமல் இப்படி குப்பையை வீசி எறிகிறீங்களே... உங்களுக்குக் கொஞ்சம் கூட மேனர்ஸ் கிடையாதா...?" என்று கேட்டான்..

அவன் கேட்ட விதத்தில் காவியாவின் கூட வந்த தோழி ரீத்தா சிரித்து வைக்க... காவ்யாவிற்கு அவமானமாகப் போய்விட்டது..

"ஏன்... எனக்கு இல்லையேன்றால்... உங்களிடமிருக்கும் மேனர்ஸில் கொஞ்சம் கடன் கொடுக்கப் போகிறீங்களா..." என்று பதிலுக்குக் காவ்யா கேட்டாள்...

"இதெல்லாம் கொடுத்து வரும் சமாச்சாரமில்லை... கற்றுக் கொடுக்க வேண்டிய சமாச்சாரம்... உங்கள் வீட்டில் இதையெல்லாம் சொல்லி வளர்கக்வில்லையா...?" அவன்விடாமல் பதிலடி கொடுக்கவும் காவ்யாவின் முகம் சிவந்து விட்டது.

"ஷிட்... அப் மேன்..." என்றபடி... வேகமாய்க் காருக்கு விரைந்து அவள் ஏறிக் கொண்டபோது... அவளின் தோழி ரீத்தாவிடம் அவன் எதையோ விசாரித்துக் கொண்டிருந்ததைக் காவ்யா பார்த்தாள்.

38

"அவன் உன்னிடம் என்னடி கேட்டான்...?" காவ்யா காரை வேகமாய் ஓட்டியபடி கோபமாய்க் கேட்டாள்...

"நம் காலேஜ் எது என்று கேட்டான்..." ரீத்தா பதில் சொன்னாள்...

"அவன் எதற்கு அதைக் கேட்கிறான்...?"

காவ்யாவின் கேள்விக்கு பதில் ரீத்தாவிடம் இல்லை... ஆனால் மறு நாளில் இருந்து... காலேஜ் வாசலில் காருடன் தென்பட்டவனைக் கண்டதுடம்... எதற்கு அவன் அதைக் கேட்டான் என்பதற்கான பதில் காவ்யாவுக்குக் கிடைத்துவிட்டது... அத்தோடு அவன் கொடுத்த பதிலடிக்குச்

சரியான பதிலடியைத் திருப்பிக் கொடுக்கச் சந்தர்ப்பமும் கிடைத்துவிட்டது.

"ஹலோ... மிஸ்டர்..."

"என்னையா கூப்பிட்டிங்க...?"

"ஆமாம்..."

"என் பெயர் மிஸ்டர் இல்லைங்க... சுரேந்திரன்..."

"நான் கேட்டேனா...?"

"நீங்க கேட்காவிட்டாலும் சொல்ல வேண்டியது என் கடமை..."

"என்ன ஒரு கடமையுணர்ச்சி...!"

"தேங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமென்ட்..."

"ஹலோ... போதும்.. ரொம்பவும் குளிர்ந்து போகாதீங்க... உங்களுக்கு வேலை வெட்டியே இல்லையா...?"

"ஏன் இல்லை... நான் பி.ஈ. முடித்த கம்ப்யூட்டர் சாப்ட்வேர் இன்ஜினியர்ங்க... தாமஸ் கம்ப்யூட்டர்ஸில் வேலை பார்க்கிறேன்... மாதம் அறுபதாயிரம் சம்பளம்..."

"இதையெல்லாம் ஏன் என்கிட்ட சொல்கிறீங்க?"

"நீங்கதானே... என் வேலையையும்... வெட்டியையும் தெரிந்து கொள்ளணும்னு ஆசைப்பட்டிங்க..."

"ஆசைப் பட்டேனா..."

"பின்னே இல்லையா...?"

"கேர்ள்ஸ் காலேஜ் வாசலில் நின்று கொண்டு போகிற வருகிற பெண்களையெல்லாம் சைட் அடித்துக் கொண்டிருக்கும் நீங்கள்தான் மேனர்ஸை... மொத்தமாய்க் குத்துகைக்கு எடுத்ததுபோல... எனக்கு மேனர்ஸ் கற்றுக் கொடுக்க வந்தீங்களா...?"

"ஒரு சின்ன திருத்தம்..."

"என்ன திருத்தம்..."

"நான் ஒன்றும் போகிற... வருகிற பெண்களையெல்லாம் பார்த்து ஜொள் விடவில்லை... ஒரேயொரு பெண்ணைத்தான் பார்க்க வந்தேன்..."

"அவள் எந்தப் பெண்...?" என்று காவ்யா கேட்கவில்லை... அவளுக்குத்தான் பதில் தெரியுமே...

"என்ன சார்... கண்டதும் காதலா..?"

"ம்ம்... இது ஒரு வகையில் காணாமல் வந்த காதல்..."

"ஆர் யு ஆல்ரைட்...?"

"ஹன்ட்ரெட் பெர்ஸென்ட்... ஐ ஆம் ஆல்ரைட்..."

"அப்புறம் ஏன்... மண்டையில் நட்டுக் கழன்டுவிட்டது போல பினாத்துகிறீங்க..."

"மிஸ் காவ்யா..."

"என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"எப்படியோ தெரியும்... இப்போது அதுவல்ல பிரச்சனை..."

"வேறு எதுதான் பிரச்சனை?"

"நீங்கள் எனக்கு நெருக்கமான யாரையோ நினைவு படுத்தகிறீங்க... உங்கள் முகம் எனக்குப் பரிச்சயமானதாகத் தோன்றுகிறது.. நீங்கள் யார்..?"

காவ்யா திகைத்தாள்... அவள் இப்படியொரு கேள்வியை அவனிடமிருந்து எதிர்ப்பார்க்கவில்லை... அவன் முகத்தில் உண்மை இருந்தது... ஒருதேடுதல் இருந்தது... அவள் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்த அவனது விழிகளுக்குள் புதுச் சொந்தம் இருந்தது.

## 39

அவர்கள் இருவரும்... கடற்கரை மணலில் கால் புதைய நடந்து கொண்டிருந்தார்கள்... தூரத்தில் கடல் அலை

தாலாட்ட... அதன் அருகே இருந்த மணல் திட்டில் அமர்ந்தார்கள்...

"சொல்லுங்கள் சுரேந்திரன்... உங்களுக்கு என்ன தெரியவேண்டும்...?" காவ்யா வினவினாள்...

"முதலில் உங்களுக்கு என் நன்றி காவ்யா... நான் கேட்டதும் மறுக்காமல் என் உணர்வுகளை மதித்து என்னுடன் பேவ வந்ததற்கு..." சுரேந்திரன் நன்றியுடன் கூறினான்...

"இட்ஸ் ஆல்ரைட்... உங்கள் கண்களில் பொய்யில்லை... நீங்கள் வேண்டுமென்றே பேசிப் பழகுவதுகோல் எனக்குத் தோன்றவில்லை..."

"இப்போது சொல்லுங்கள்... நீங்கள் யார்...?"

"நான் ஐஏஎஸ் ஆபிஸர் பரதனின் மகள்..."

"ஓ... ஐஸீ... உங்க அம்மா பெயர் என்ன...?"

இதைக் கேட்கம்போது ஏன் சுரேந்திரனின் முகம் பரபரத்தது என்று காவ்யாவிற்குப் புரியவில்லை..

"அம்மா பெயர் சாரதா..."

"நினைத்தேன்..."

சுரேந்திரன் சட்டென்று எழுந்துகடலோரம் சென்று நின்று கொண்டான்... அருகே சென்ற காவ்யா... குழப்பத்துடன் அவன் முகம் பார்த்தபோது... அவனது விழிகள் கலங்கியிருந்தன...

"வாட் இஸ் ராங் வித் யு சுரேந்திரன்..."

"நத்திங்... உங்க அம்மாவின் பிறந்த ஊர் எது காவ்யா...?"

"எனக்குத் தெரியாது..."

"வாட்...?"

"யெஸ் சுரேந்திரன்... என் பேரண்ட்ஸ் லவ் மேரேஜ் பண்ணிக் கொண்டவங்க... என் அப்பாவின் பேரண்ட்ஸ் இறந்து விட்டாங்களாம்... அவங்க படம்தான் எங்க

வீட்டிப் பூஜை அறையில் இருக்கும்.. அம்மாவின் வீட்டில்... அவங்க மேரேஜை அக்செப்ட் பண்ணிக் கொள்ளவில்லையாம்... அதனால் அம்மா அவங்க வீட்டைப் பற்றி எதுவும் பேச மாட்டாங்க..."

சுரேந்திரன் தன் அருகில் நின்று கொண்டிருந்தவளை ஆசையுடன் பார்த்தான்... அவனது பார்வையின் மாற்றத்தை உணர்ந்த காவ்யா முகம் சுழித்தாள்...

"என்ன பார்வை சுரேந்திரன்...? ஐ டோன்ட் லைக்கிட்."

"பட்...ஐ லவ்யு..."

"வாட்...?"

"யெஸ் காவ்யா.. ஐ நீட் யு..."

"உங்களுக்கென்ன பைத்தியமா...? எதையோ விசாரிப்பது போலத் தோன்றவும்... உண்மையிலேயே உங்களுக்கு ஹெல்ப் பண்ண வேண்டும் என்றுதான் நான் உங்களுடன் பேச வந்தேன்... அதை நீங்கள் தவறாகப் பயன்படுத்த நினைக்கறீங்களா...?"

"சேச்சே... அப்படியெல்லாமில்லை... அவசரப் பட்டு எதையும் பேசிவிடாதே... காவ்யா... ஐ திங்க்... நீ என் அத்தையின் மகள்..."

"புரியவில்லை"

"உன் அம்மாவை எனக்குத் தெரியும்... நான் அவங்க கூடப் பிறந்த அண்ணன் மகன்... நீ வேண்டுமனால் உன் அம்மாவிடம் போய்... ஆத்தூர் என்ற ஊரைப் பற்றித் தெரியுமான்னு கேளு... பூபதி யார்ன்னு கேளு... பூபதியின் மகன் சுரேந்திரன்... அவங்களுக்கு என்ன உறவு முறையாகணும்ன்னு கேளு... அதுக்குப் பின்னால் என்னிடம் வந்து பதில் சொல்லு..."

அலை கால் நனைக்க, காவ்யா அசையாமல் நிற்க, சுரேந்திரன் போய்விட்டான்.

காவ்யா சாரதாவிடம் கேட்டாள்... சுரேந்திரன் சொன்ன அத்தனை கேள்விகளையும் மறக்காமல் கேட்டாள்... சாரதாவின் முகத்தில் முதலில் பதட்டம் வந்தது... அடுத்துப் பரவசம் வந்தது... இன்ப... துன்பம் இரண்டையும் மாறிமாறிப் பிரதிபலித்த முகத்துடன்... மகளைப் பார்த்தாள்...

"உனக்கு இது எப்படி தெரியும்...?"

தாயின் கேள்வியில் மகளின் விழிகள் விரிந்தன... அப்படியென்றால்... சுரேந்திரன் சொன்ன அத்தனை செய்தியும் உண்மைதானா...?

"எப்படியோ தெரியும்... என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க..."

"ஆத்தூர் நான் பிறந்த ஊர்... பூபதி என் அன்பான பெரிய அண்ணன்... சுரேந்திரன் நான் தூக்கி வளர்த்த என் அண்ணனின் மகன்..."

அவன் பொய் சொல்லவில்லை... ஏன்இதை எண்ணித் தன் மனம் துள்ளுகிறது என்பது காவ்யாவிற்கே விளங்கவில்லை...

"அம்மா... உங்க அண்ணன் மகனை நான் பார்த்தேன்..."

சாரதா அவசரமாய் மகளை அணுகி... அவளது கரம் பற்றித் தன் அருகே அமர வைத்துக் கொண்டாள்...

"சொல்லு காவ்யா... அவனை எங்கே பார்த்தாய்... நீ யாருன்னு அவன் எப்படிக் கண்டுபிடித்தான்...?"

காவ்யா சொன்னாள்... சாரதவின் விழிகளில்கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது... அவளால் இதை நம்ப முடியவில்லை... பூபதி அவளைத் தேடி வருவது நடக்கம் கூடிய ஒன்று...

ஆனால் பூபதியின் மகன்... அந்தச் சின்னஞ்சிறு பாலகன்... நான்கு வயது வரை சீராடிய அத்தையின் மடியை நினைவு

வைத்துக் கொண்டு... அவளது ஜாடையை... அவள் மகள் முகத்தில் கண்டு... அதை வைத்துத் தன் அத்தையைத் தேடி விடுவது நடக்கக் கூடியதா...?

ஆனால் இங்கு அது நடந்திருக்கிறதே... சாரதாவின் அண்ணன் மகன் அவளைத் தேடிக் கண்டு பிடித்து விட்டானே...

"என்ன விசயம் சாரதா... என்றுமில்லாத புதுப் பிரகாசம் உன் முகத்தில் தெரிகிறது...? இரவின் தனிமையில் பரதன் கேட்டான்..."

அவனது விரலோடு விரல் கோத்து... சாரதா விவரம் சொன்னாள்... அவனிடமிருந்து பதில் இல்லை... திகைத்து முகம் பார்த்தாள்...

"ஸோ.. நீ இன்னும்... உன் தாய் வீட்டை மறக்கவில்லை..."

"என் அண்ணனையும்... அண்ணன் மகனையும் மறக்கவில்லை..."

"அவன் நம் காவ்யாவிடம் ஐலவ்யு சொல்லியிருக்கிறான்..."

"ம்ம்ம்..."

"அதை நீ ஏற்றுக் கொள்கிறாயா...?"

"அவன் யாரோ ஒருவனில்லை... சுரேந்திரன்..."

"இருக்கட்டும்... அவன் யாராய் இருந்தால் எனக்கென்ன? நாளைக்கு என்னை வந்து அவனைப் பார்க்கச் சொல்..."

பரதன் சாரதாவிடமிருந்து விலகிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டு விட்டான்... சாரதா துயரப்பட்டாள்.. காவ்யாவின் மூலம் விவரம் அறிந்த சுரேந்திரன் பரதனைக் காண வந்தான்...

"உட்காருங்க... நீங்கள்தான் சுரேந்திரன்... இல்லையா...?"

"ஆமாம்..."

"என் மகளிடம் ஐலவ்யுன்னு சொன்னீங்களா...?"

"நீங்களும் காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டவங்கதானே... காதல் ஒன்றும் தவறில்லையே..."

"காதல் தவறில்லை, தம்பி... ஆனால் நானும் சாரதாவும் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஊரை விட்டு ஓடிவந்தோமுன்னு நீயும்... உன் குடும்பமும்... அந்த ஊரும் நினைக்குதே... அதுதான் தவறு... நாங்கள் கல்யாணம் பண்ணிக் கொண்ட பின்னால்தான் காதலித்தோம்... எங்கள் கல்யாணத்தைத் தாலி எடுத்துக் கொடுத்து நடத்தி வைத்தது உன் அப்பா.. அவரிடம் போய் உண்மை என்னன்னு கேட்டுத் தெரிந்து கொள்... அதன் பின்னால் உன் குடும்பத்தோடு என் வீட்டுப் படி மிதித்துப் பெண் கேள்... நான் பெண் தருகிறேன்...’’

41

சுரேந்திரன் அன்று இரவே... ஆத்தூருக்குப் பயணமானான்... தகப்பனாரைத் தேடினான்... தோப்பிற்குப் போயிருப்பதாகக் காயத்ரி சொன்னாள்... தோப்புக்குச் சென்றவனைப் பார்த்து பூபதி... ஆச்சரியத்துடன் வரவேற்க... வந்த வேலையைச் சொன்னான் சுரேந்திரன்...

"நிஜமாகத்தான் சொல்கிறாயா, சுரேன்... என் சாரதாவையும் அவள் குடும்பத்தையும் நீ பார்த்தானா...? எப்படியிருக்கிறாங்க...?"

"அவங்க ஹஸ்பெண்ட் கலெக்டர் ஆகிவிட்டார் அப்பா... அத்தையின் மகளைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறேன்... அத்தை பெண் டாக்டருக்குப் படிக்கிறாள்..."

"பரதன் கெட்டிக்காரன்... இந்த ஊரைவிட்டுப் போனால் அவன் முன்னேறிவிடுவான்னு எனக்குத் தெரியும்... நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் இங்கேயே இருந்தான்... கடைசியில் என் சொல்லுக்காக என் தங்கை சாரதாவின் கழுத்தில் தாலியைக் கட்டி... காப்பிற்றிக் கூப்பிட்டுக் கொண்டு... இந்த ஊரை விட்டு வெளியேறி விட்டான்..."

"இதையேதான் அவரும் சொன்னார்... என்ன நடந்தது அப்பா..?"

பூபதி விவரத்தான்... கல்யாண சுந்தரத்தின் கயமையை... அதை நேரில் கண்டுவிட்ட சாரதா பட்ட துயரத்தை... அது பொறுக்காமல்... பரதனுக்கு மணமுடித்து வைத்து... யாருக்கும் தெரியாமல் அவர்கள் இருவரையும் ஊரை விட்டு அனுப்பிவிட்ட நிகழ்வைக் கூறினான்...

"இந்த ஊரும்... உங்க அம்மாவும் பேசுவதுபோல் அவங்க இரண்டு பேரும் காதலித்து வீட்டை விட்டு ஓடிப் போகலைடா... என்னிடம் பட்ட நன்றிக் கடனுக்காக... என் தங்கைக்கு வாழ்க்கை கொடுத்துக் காப்பற்றிக் கூப்பிட்டுப் கொண்டு போனான்டா அந்தப் பரதன்..."

சுரேந்திரனின் பார்வையில் பரதன் இமயமாய்த் தெரிந்தான் "அப்பா... நம் குடும்பத்தோடு காவ்யாவைப் பெண் கேட்கப் போக வேண்டும்..." சுரேந்திரனின் குரலில் உறுதி இருந்தது...

"காயத்ரி... நாளைக்குச் சென்னைக்கு நம் சுரேந்திரனுக்குப் பெண் பார்க்கப் போகிறோம்... உன் மாமனார்... மாமியாரைத் தயாராய் இருக்கச் சொல்லு... மறக்காமல் உன் கொழுந்தனையும்... மேனகாவையும் கூடக் கூப்பிட்டுக் கொண்டுவா..." பூபதி அன்று இரவு மனைவிக்கு உத்திரவிட்டான்.

## 42

பேரனுக்குப் பெண் பார்க்க... தன்னையும் பெரிய மகன் அழைத்துவிட்ட மகிழ்வில் மணிவாசகம் தயாராக... பூங்கோதை யாருக்குக் கல்யாணம் நடந்தால் எனக்கென்ன... நடக்காவிட்டால் எனக்கென்ன என்ற மனநிலையோடு புறப்பட்டாள்... இவர்கள் எந்தச் சீமான் விட்டில் பெண் எடுக்கிறார்கள் என்று வேடிக்கை பார்க்கலாமே என்ற நினைவுடன் மேனகா கிளம்பி...

கணவனை நச்சரித்து உடன் அழைத்து வந்திருந்தாள்... சென்னையில்... பரதனின் வீட்டிற்குள் கார் சென்றபோது...

"பெண்ணின் அப்பா... ஒரு கலெக்டர்..." என்றான் பூபதி... மேனகாவின் மனதில் பொறாமை பொங்கி எழுந்தது... அவர்கள் உள்ளே சென்று அமர்ந்ததும்... காவ்யா... குளிர்பானம் நிரம்பிய தம்ளர்களுடன் வந்து அவர்கள் அனைவருக்கும் கொடுத்தாள்...

"இதுதான் பெண்... பெயர் காவ்யா..." பூபதி அறிமுகப்படுத்த... அவள் கரம் குவித்துவிட்டு... பூங்கோதையின் அருகே போய் அமர்ந்து கொண்டாள்...

"இது என்னக்கா... எங்கேயும் இல்லாத வழக்கமாய் இருக்கிறது... பெண்ணைப் பெற்றவங்க வரவேற்றுப் பெண்ணைக் காட்டுவாங்க... இங்கே பெண் மட்டும் தானாய் வந்து நிற்குது..." மேனகா உரக்கப் பேசினாள்...

"பொறும்மா... அவங்க வருவாங்க... அதுக்கு முன்னால் நான் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது... அப்பா... உங்களிடம் நான் பேசலாமா... நான் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்பீங்களா..."பூபதி வினவ...

"என்னிடமாய்யா பேசிப்புட்டே..."என்று ஆனந்தப் பட்டுப் போனார் மணிவாசகம்...

"பேசுய்யா... நீ பேசுவதைக் கேட்கத்தான் துடிக்கிறேன்..."

"இன்றைக்கு நீங்கள் துடிக்கும் துடிப்பைவிட... கல்யாணத்திற்கு முதல் நாள் சாரதா அதிகமாய்த் துடித்து விட்டாளப்பா..."

பூபதி மெதுவாக நடந்தவைகளை விவரித்தான்... பூங்கோதை குமுறிப் போனாள்... மணிவாசகம் மலைத்தார்... மேனகாவின் முகத்தில் சங்கடம் தெரிந்தது... ரகுபதி குற்ற உணர்வில் குறுகிப் போனான். காயத்ரி இவ்வளவு நடந்திருக்கிறதா என்று வியந்து போனாள்...

"அப்பா... நீங்க சாரதாவிற்கு நியாயம் வழங்கும் தகப்பனாக இருந்திருந்தால் நான் அந்த முடிவை

எடுத்திருக்கமாட்டேன்... ஆனால் நீங்கள் குடும்ப கௌரவத்திற்காகச் சாரதாவைப் பலி கொடுக்கத் தயங்கியிருக்க மாட்டீகள். அதனால்தான் நான் சாரதாவைப் பரதனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தேன்... அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அது வரை முகம் பார்த்துக் கொண்டதில்லை... ஆனால் காதலித்து... திரும்டுத்தனமாய் ஊரை விட்டு ஓடிவிட்டதாகப் பழிச் சொல்லை ஏற்றுக் கொண்டார்கள்... இன்றைக்குப் பரதன் ஒரு கலெக்டர்... காவ்யா... பரதன்... சாராவின் பெண்தான்... இவளைத்தான் பெண் கேட்டு நாம் வந்திருக்கிறோம்..."

வீட்டுக்குள்ளே இருந்து... சாரதாவும் பரதனும் வெளிப்பட்டனர்... பூங்கோதை நினைத்துத் தவித்துக் கொண்டிருந்த அவளது இதயம் அழுதது...

"அப்பா..." என்று விம்மிய பெண்ணின் முடிகோதி...

"என்னை மன்னித்து விடு, மகளே..." என்றார் மணிவாசகம்...

பரதனைப் பார்த்துப் பூபதி கைகளை விரிக்க... நெகிழ்ச்சியுடன் அந்தக் கைகளுக்குள் புகுந்து கொண்டான் பரதன்... தான் வளர்த்த நற்பண்பு மிக்க கண்ணியவான் வாழ்வில் உயர்ந்த இடத்தில் இருந்ததைப் பார்த்த பூபதியின் உள்ளம் நிரம்பித்ததும்பியது...

"உன் மகளை... என் மகனுக்குத் தருவாயா பரதா...?"

"நீங்கள் கேட்டு... நான் என்றைக்குமே இல்லையென்று சொன்னதில்லையே, ஐயா..."

பிரிந்தவர்கள் கூடினார்கள்... ஆத்தூரே அதிரும் வண்ணம் பிரம்மாண்டமாய் சுரேந்திரன்... காவ்யாவின் திருமணம் நடந்தது... அந்த ஊருக்குள் தலை

நிமிர்ந்து... மாமனார் வீட்டிற்கு விருந்து சாப்பிட வந்தான் பரதன்...

"இந்தா, பரதா..." தோப்பு வீட்டின் சாவியை அவனிடம் கொடுத்தான் பூபதி..

"இந்தத் தோப்பும் வீடும்... உனக்காக நான் கொடுக்கும் சாரதாவின் தாய் வீட்டுச் சீதனம்..."

மறுக்காமல் வாங்கிக் கொண்டான் பரதன்... அது அவனது நேர்மைக்கும்... தியாகத்திற்கும்... காதலுக்கும்... கடமைக்கும்... சங்கரனும் காமாட்சியும் கொடுத்த பரிசாகவே அவனுக்குத் தோன்றியது... உறங்காத பூங்கோதையின் உள்ளம்.. மகளின் வரவிற்குப் பின்னால் நிம்மதியாக உறங்கியது.

... முற்றும் ...